

சித்திரச்
சோலையிலே
விஜி விக்னேஷ்

உள்ளே...

1. சித்திரச் சோலையிலே 5

2. பூமாலை தோள் சேர்ந்தது 133

# சித்திரச் சோலையிலே

## 1



அந்த அழகான வண்ணச் சித்திரத்தை இன்னும் எவ்..வளவு நேரம் பார்த்தாலும் அலுக்காது என்றுதான் தோன்றியது அவனுக்கு.

ஆனால் இவற்றை விடவே அழகான நடமாடும் சித்திரம் ஒன்று அவன் வாழ்வில் வந்ததே, பேசியதே, சிரித்ததே. அதன் பெயர் கூட 'அஜந்தா'தான்!

சுவற்றில் மாட்டியிருக்கும் இந்தச் சித்திரத்திற்கும், நடமாடிய அந்த அஜந்தா சித்திரத்திற்கும் மிகப்பெரிய வேறுபாடு ஒன்று உள்ளது. இதை சட்டமடித்து சுவற்றில் மாட்டி விட்டால் வேறு எங்கேயும் செல்லாது.

ஆனால் அந்த நடமாடும் சித்திரமோ கையில் இருக்கும் பணக்காரனை விட வேறு ஒரு பணக்காரன் உயர் வானவன் என்று தோன்றிவிட்டால், இவனைக் கழற்றி வீசிவிட்டு புதிதாக வந்தவனோடு சேர்ந்து கொண்டு ஊரை விட்டே ஓடி மறைந்து விடும்.

அன்று போலவே இன்றும் தாங்க முடியாமல் துடித்தது அவன் மனது. அவளுக்காக என்னவெல்லாம் செய்ய விருந்தான். ஆனால் எவ்...வளவு பெரிய அவமானம். ஏமாற்றம் நேர்ந்து விட்டது அவளால். அவள் மட்டும் என்றாவது அவன் கண்ணில் பட்டு விட்டாள் என்றால்... கழுத்து நரம்புகள் வெடித்து விடும் அளவிற்கு புடைத்தது அவனுக்கு.

கதவு தட்டும் ஒலி கேட்டு ஒரு பெருமூச்சுடன் திரும்பி, 'கமின்' என்றான் பிரபு - விமல் பிரபு.

ஓட்டல் பணியாள் காலை உணவு வகைகளைக் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனான்.

மற்ற வேலைகள் சிலதையும் முடித்துக் கொண்டு அவன் 'தாஜ்'ஐ விட்டு வெளியே வந்தபோது மணி பத்து நாற்பது.

எம்.டி. இன்று வரமாட்டாரோ என்ற நினைவில் மெத்தனத்துடன் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் 'சில்வர் கிரே பென்ஸ்' காரைப் பார்த்ததும் சுறுசுறுப் பானார்கள்.

பர்சனல் செகரட்டரி ரீனா தேவையான பைல்களில் கையெழுத்தை வாங்கிக் கொண்டு சென்றதும், 'இம் போர்ட் திங்க்ஸ் குவாலிட்டி' பைலைக் கையிலெடுத்தான் விமல் பிரபு.



பல மாநிலங்களுடனும், சில வெளி நாடுகளுடனும் வியாபாரத் தொடர்புடைய அந்த 'சிம்ஸ் அன் கோ' நிறுவனம் பெரிய பெரிய வாகனங்களின் உதிரிப்பாகங் களைத் தயாரித்து ஏற்றுமதி செய்வதில் லாபத்தைக் குவித்துக் கொண்டிருந்தது.

தனது தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருள் இரும்பை, பல இடங்களிலும் இருந்து வாங்கிக் கொண்டிருந்தான் விமல் பிரபு. அதில் ஒன்றுதான் ஒரிஸ்ஸா மாநிலம் புவனேஷ்வரில் உள்ள கம்பெனி. கடந்த ஐந்து வருடங்களாக நல்லபடியாக பிசினஸ் செய்து கொண்டிருந்த கம்பெனி கடந்த சில மாதங்களாக இரும்பின் தரத்தைக் கொஞ்சம் குறைத்திருந்தது.

தரமில்லாத இரும்பினால் செய்யும் வாகனப் பொருட் கள் அதிக நாட்கள் உழைக்காது. கூடவே கம்பெனியின் பெயரும் அல்லவா கெட்டுவிடும். தரமில்லாத பொருள் அவன் கம்பெனிக்குத் தேவையேயில்லை.

''இனிமேல் புவனேஷ்வரில் உள்ள கம்பெனியி லிருந்து இரும்பு எதுவும் வாங்க வேண்டாம். ஆர்டர் எதுவும் கொடுக்காதீர்கள். அவர்கள் ஏதாவது விபரம் கேட்டால், இனி உங்களுடன் பிசினஸ் செய்ய விருப்பமில்லை என்று நான் சொல்லி விட்டதாக கூறி விடுங்கள்'' என்று திட்டவட்டமாக அறிவித்தான் விமல் பிரபு.

எதிரே நின்றிருந்த மானேஜருக்கு மயக்கம் வராத குறைதான். இந்த முடிவின் காரணமாக புவனேஷ்வர் கம்பெனி ஆண்டிற்கு பல லட்சங்கள் இழப்படையும். மற்றவர்களும் இதே போல முடிவெடுத்தால் புவ னேஷ்வர் கம்பெனியின் கதி அதோகதிதான். அவர்கள்

பிசினஸை மூடிவிட்டு வீட்டில் உட்கார்ந்துகொள்ள வேண்டியதுதான்.

ஆனால் எம்.டி. சொல்வதை மானேஜர் கேட்டுத்தானே ஆக வேண்டும்.

'இனிமேல் உங்களிடம் 'ரா மெட்டீரியல்' வாங்க முடியாமைக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டு, இத்துடன் எல்லா டீலிங்கையும் முடித்துக் கொள்கிறோம்' என்று 'பேக்ஸ்' அனுப்பியபோது மானேஜருக்கு வருத்தமாகத்தான் இருந்தது.

அந்தக் கம்பெனி முதலாளி மிஸ்டர் ஜெ.பி. சற்று வயதான மனிதர் வேறு. இந்த விஷயத்தை எப்படித் தாங்கிக் கொள்வாரோ தெரியவில்லையே?

விஷயம் அறிந்து உண்மையிலேயே அதிர்ந்துதான் போனார் ஜெ.பி.

பழைய மாதிரி தரமான பொருளில்லையென்றால் விலையைக் குறைத்துக் கொடுங்கள் என்று தான் பெரும்பாலும் சொல்வது வழக்கம்.

ஆனால் அவர் பெரிதும் எதிர்பார்த்திருந்த 'சிம்ஸ் அன் கோ' நிறுவனம் மற்றவர்கள் கூறியதற்கு முற்றிலும் மாறாக 'எங்களுக்கு உங்கள் பொருளே வேண்டாம்' என்று நாகரீகமாக தெரிவித்து விட்டார்களே!

எவ்..வளவு பெரிய நஷ்டம் இது. ஆண்டு லாபத்தில் குறிப்பிட்டுச் சொல்லுமளவு பெரிய தொகை தரும் பிசினஸ் ஆயிற்றே! இனி என்ன செய்யப் போகிறோம், எப்படி மீளப் போகிறேன்? என்ற வேதனையில் இருந்த ஜெ.பி.க்கு மாரடைப்பு வந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.



அன்று விமல் பிரபு அலுவலகத்தை அடைந்தபோது மானேஜர் சற்று தயக்கத்துடனேயே ஜெ.பி.யின் விஷயத்தைக் கூறினார்.

ஒரு கணம் அமைதியாக இருந்த விமல் பிரபு ஒரு பெருமூச்சுடன், "தொழில் என்று வந்து விட்டால் லாப நஷ்டம் என்பது சகஜம் தானே மிஸ்டர் கோகுல். எனக்கு நஷ்டம் வருவதைத் தவிர்க்கத்தானே நான் நினைக்க முடியும். அவர் நல்ல தரமான இரும்பை அனுப்பியிருந்தால் இந்தப் பிரச்சனைக்கே இடமில்லையே" என்று கூறிவிட்டு பேப்பர் வெயிட்டை யோசனையோடு உருட்டினான் அவன்.

"இது ரொம்பப் பெரிய அடி என்று நினைத்து விட்டார் போலிருக்கிறது சார். உங்களை நேரில் பார்த்துப் பேச விரும்புவதாக தகவல் வந்திருக்கிறது. நல்ல மனிதர். கஷ்டப்பட்டு வளர்த்த பிசினஸ் அழிந்து விடப் போகிறது என்று நினைத்து மனம் சோர்ந்து விட்டார் போலிருக்கிறது" என்று நிறுத்தியவர், "ஜெ.பி. 'அப்பாயிண்ட்மெண்ட் டேட்' கேட்டிருக்கிறார் சார்" என்று தெரிவித்தார் மானேஜர்.

முகத்தை ஒருமுறை கைக்குட்டையால் துடைத்தவன், "அவர் உடல் இருக்கும் நிலையில் இங்கே வர வேண்டாம். நானே புவனேஷ்வர் வருவதாகக் கூறி விடுங்கள். நெக்ஸ்ட் வீக் பிளைட் டிக்கெட்டிற்கும் ஏற்பாடு செய்து விடுங்கள்" என்று கூறினான் விமல் பிரபு.

மானேஜர் நிம்மதியாக வெளியே வந்தார்.

சொன்ன மாதிரியே அடுத்த வாரம் புவனேஷ்வர் சென்றான். அன்று இரவு ஓட்டல் அறை பால்கனியில்

நின்று நட்சத்திரங்களை வெறித்தபோது, அவனால் அந்த நடமாடும் ஒவியத்தை நினைக்காமல் இருக்க முடிய வில்லை!

பாவி! பாவி! அவள் மட்டும் என்னை உண்மையாகக் காதலித்தவளாக இருந்திருந்தால் இந்த ரம்யமான இரவு எனக்கு கசப்பாக மாறியிருக்குமா?

சதிகாரி என்னமாக நடித்திருக்கிறாள். மனதளவில் அவ்..வளவு நெருக்கமாக பழகியதெல்லாம் பொய் என்பதை அவனால் தாங்கவே முடியவில்லையே!

முதன் முதலாக அவனை 'விபு' என்று செல்லமாக அழைத்தபோது எவ்..வளவு சந்தோஷப்பட்டான். ஆனால் அத்தனையும் ஏமாற்று வேலை. சை!

அந்தப் பொன் முகத்தை வைத்துக் கொண்டு அவள் நடித்தாள் என்றால் அதை யாராலும் நம்பவே முடியாது.

ஆனால் நம்பித்தான் ஆக வேண்டும். இந்த மூன் றாண்டுகளாக அவன் அவமானத்தால் வேதனைப்பட்டு துடிப்பது நிஜம்.

அவள் மட்டும் இப்போது அவன் கையில் கிடைத்தாள் என்றால், அப்படியே அவள் கழுத்தைப் பிடித்து நெ...

சேச்சே! அவள் முகத்தைப் பார்ப்பதே பெரிய பாவம். அவளைத் தொடுவது அதைவிடப் பாவமாயிற்றே, என்று ஏதேதோ எண்ணியபடியே தூங்கியவனுக்கு மறுநாளே அந்த ஏமாற்றுக்காரியை நேரில் சந்திக்கப் போகிறோம் என்பது சற்றும் தெரியாது.

ஜெ.பி.க்கு போன் செய்து பேசியபோது, ''நீங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள் மிஸ்டர் பிரபு. நான் வந்து பார்க்கிறேன்'' என்றார் அவர்.



''நீங்கள் 'ஸ்ட்ரெயின்' பண்ண வேண்டாம். நானே உங்கள் அலுவலகத்திற்கு வந்து விடுகிறேன்'' என்றான் விமல் பிரபு.

அடுத்த இருபத்தைந்தாவது நிமிடம் ஒரு மூன்று மாடி கட்டிடத்தின் முன்பு நின்றது அந்த பச்சை வண்ண சீயல்லோ கார்.

'வெல்கம் மிஸ்டர் பிரபு' என்று கூறி வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றவர் 'இண்டர்காமில்' தன் செகரட்டரியை அழைத்து காபி கொண்டு வரும்படி பணித்தார் ஜெ.பி.

லேசாக கதவைத் தட்டி ''மே ஐ கம் இன் சார்?'' என்று கேட்டு விட்டு, அறையினுள் ட்ரேயை சுமந்து வந்த அழகியைப் பார்த்த விமல் பிரபுவிற்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை.

ஏனெனில் அவள் அவனுடைய மாஜி காதலி அஜந்தா!

ஆனால் அவள் இன்னும் அவனைப் பார்க்கவில்லை. தன் முதலாளியிடம் ஒரு கப்பைக் கொடுத்துவிட்டு, மற்றொன்றை எடுத்து அந்தப் புதியவனிடம் கொடுக்க முற்பட்டபோது தான், அவள் தலைமேல் இடியே விழுந்து விட்டதைப் போல் அதிர்ந்து நின்றாள் அவள்.

கடவுளே! இவன்... இவன் அவன் தானா? அவளுக்குச் சற்று நேரம் எதுவுமே புரியவில்லை. தலைச் சுற்றி கீழே விழுந்து விடுவோமா என்ற பயத்தில் மேசையை இறுக பற்றிக் கொண்டாள்.

''ஒரு நிமிடம்'' என்று கூறிவிட்டு ரெக்கார்டு ரூமிற் குள் சென்றார் ஜெ.பி.

"ஆக. இந்த செகரட்டரி வேலை பார்க்கத்தானா ஊரை விட்டு ஓடிவந்தாய்?" என்று எகத்தாளமாக கேட்டான் விமல் பிரபு.

அவனே தான் என்று உறுதியானதும் அவனை வெறித் தாள் அவள்.

"என்ன அப்படி முழிக்கிறாய். இப்படியொரு சூழ்நிலை யில் என்னைப் பார்க்க நேர்ந்து விட்டதை நினைத்தால் அவமானமாக இருக்கிறதா? அய்யோ பா..வம். ஆமாம் என்னைவிட எல்லாவற்றிலும் தகுதி வாய்ந்த அந்த ஏழடி மனிதன் என்னவானான்? உன் கூடத்தான் இருக்கிறானா? இல்லை அவனையும் என்னை மாதிரியே 'மாஜி' காதலன் லிஸ்ட்டில் சேர்த்து விட்டாயா? 'பிரசண்ட் டைம்' காதல னாக யாரையம்மா வைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று குரலில் ஏளனம் மேலோங்க வினவினான் அவன்.

'சுரீர்' என்று வலித்தது அவளுக்கு. 'வைத்துக் கொண்டிருக்கிறாய்' என்று கேட்டு விட்டானே. இந்த வார்த்தையின் அர்த்தம் அவளை எப்படி வலிக்கச் செய்யும் என்று தெரிந்தும் கேட்டிருக்கிறான் என்றால், அவன் மனது அவன் செய்யும் பிசினஸைப் போலவே இரும்பாகத்தான் இருக்க வேண்டும்.

விபு. விபு என்று வார்த்தைக்கு வார்த்தை அழைத்த அஜந்தாவிடமே இப்படிப் பேசுகிறான் என்றால், அவன் பழைய விபு அல்ல என்பதற்கு இதை விட வேறு சான்று வேண்டுமா என்ன?

நெஞ்சினுள் வலித்தது அவளுக்கு.

"ம். சொல்ல வேண்டியது தானே தற்போது யாரென்று. ஒரு வேளை கைவசம் இப்போது யாருமில்லையோ?" என் றான் அதே ஏளனத்துடன்.



இவன் என்ன குட்ட குட்ட குனிய வாட்டமாக ஒரு தலை கிடைத்து விட்டது என்று நினைத்துக் கொண் டானா? அல்லது, இவளுக்கு எங்கே திருப்பி குட்டத் தெரியப் போகிறது என்று நினைக்கிறானா?

போனால் போகிறது வீண் வருத்தம் எதற்கு என்று ஒதுங்கிப் போக நினைத்தால் விடமாட்டான் போலிருக் கிறதே, என்று நினைத்தவள் சட்டென்று முகத்தை மாற்றிக் கொண்டு, "உங்களைப் போன்ற முட்டாள்கள் ஒருத்தர், ரெண்டு பேர் என்றால் சட்டென்று ஞாபகத் திற்கு வந்துவிடும் சார். இப்போதெல்லாம் நம்பி ஏமாறும் அதிபுத்திசாலிகள் நிறையப் பேர் இருப்பதால் சரியாக ஞாபகம் இல்லை. நீங்கள் கேட்டவுடனே சொல்ல முடியாமைக்கு மன்னித்து விடுங்கள். டைரியைப் பார்த்துவிட்டு மீண்டும் உங்களைச் சந்திக்க நேர்ந்தால் நிச்சயமாகச் சொல்கிறேன்" என்று கூறி மல்லிகை இதழ் விரித்த மாதிரிச் சிரித்துவிட்டுச் சென்றாள் அஜந்தா.

சற்றும் எதிர்பாராத இந்த பதிலினால் முகம் கறுத்தது அவனுக்கு.



## 2

"உங்கள் பைல் பார்த்தேன் ஜெ.பி. சார். இப்போதே நஷ்டத்தில் தானே போய்க் கொண்டிருக்கிறது. இந்த

நிலை இன்னும் எவ்வளவு நாட்கள், மாதங்கள் நீடிக்கும் என்று நினைக்கிறீர்கள். ரொம்ப நாள் இதே நிலை தொடர்ந்தால் மீள்வது கடினம்தான். இதைப் பற்றி நீங்கள் யோசித்திருப்பீர்களே. என்ன முடிவு செய்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டான் விமல் பிரபு.

''கம்பெனியை இனி பழைய நிலைக்கு கொண்டு வருவது என்பது சாதாரண விஷயமல்ல என்பது புரிகிறது. கொஞ்சம் நாள் உடல்நிலை காரணமாக தொழிலை கவனிக்க முடியாமல் போனதைப் பயன்படுத்திக் கொண்டு, யாரோ ஒரு சிலர் என்னை ஏமாற்றி விட்டு தரமில்லாத பொருளை உள்ளே நுழைத்து விட்டார்கள். என் தத்தி மகனை நம்பி பொறுப்பைக் கொடுத்ததற்கு எனக்கு இது தேவைதான். ஒரேயடியாக போய் விடுவதற்குள் உடனடியாக ஏதாவது நல்ல முடிவெடுக்கத்தான் வேண்டும்'' என்று கூறியபடி கண்ணாடியைக் கழற்றி வைத்தார்.

''நீங்கள் தப்பாக எதுவும் நினைக்க மாட்டீர்கள் என்றால் நான் ஒரு யோசனை சொல்லட்டுமா ஜெ.பி. சார்?'' என்று அனுமதி கேட்டான் விமல் பிரபு.

''தாராளமாகக் கூறுங்கள் பிரபு. இந்த வயதிலேயே உங்களின் முன்னேற்றமும், வெற்றியும் எனக்கு பிரம்மிப்பை ஏற்படுத்தியது உண்மை'' என்றார் அவர்.

''தோல்வி நிச்சயம் என்று தெரிந்த பின்னரும் அதைத் தொடர்ந்து செய்வது கண்ணைத் திறந்து கொண்டே ஆற்றில் விழும் கதைதான். நொண்டிக் குதிரையை பந்தயத்திற்கு அனுப்பி வைப்பது போல. நிர்வாகம் சரியில்லை, கண்டிக்க ஆள் இல்லை என்று தெரிந்தால் ஒரு சிலருக்கு ஏமாற்றித்தான் பார்க்கலாமே என்ற எண்ணம் வந்து விடுகிறது.



''அதற்கு உதாரணம்தான் எனக்கு வந்திருக்கும் தரமில்லாத இரும்பு. நீங்கள் அனுப்பி வைத்த தரமான இரும்பை இடையில் வேறு யாருக்கோ விற்றவனுக்கு அதன் மதிப்பு எவ்வளவு என்று தெரிய வேண்டிய அவசியம் கூட இல்லை. குறைந்த பணத்திற்காக கூட இது நடந்திருக்கலாம். அல்லது மதிப்பறிந்து அதிக பணத்திற்காகவும் செய்திருக்கலாம்.

''எது எப்படியோ திருடர்களுக்கும் சம்பளம். கேண்டீன் சாப்பாடு, டீ, காபி, போனஸ் என்று எல்லாமே செய்திருக்கிறீர்கள். ஆனால் இனியும் குறையின்றி அப்படியே செய்ய முடியாது என்ற நிலையில் நீங்கள் கம்பெனியைக் கைமாற்றி விடுவது தான் நல்லது'' என்று கூறினான் விமல் பிரபு.

ஒரு கணம் கண்மூடி நெற்றியைத் தடவிவிட்ட பின்பு கண் திறந்து பேசினார் ஜெ.பி.

''நீங்கள் வருவதற்கு முன்பு நானும் இதே முடிவைத்தான் நினைத்தேன். படிப்படியாக நான் முன்னுக்கு கொண்டு வந்த கம்பெனியை விற்பது என்பது ரொம்பவே வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனால் துணிந்து எடுத்துக் கட்டிச் செய்ய ஆளில்லை. என் பிள்ளையை பொறுப்பறிந்து வளர்த்திருந்தால் இப்படியொரு நிலை வந்திருக்காது. எந்த விஷயத்திற்குமே வாரிசுகள் நல்லபடியாக இல்லையென்றால் என் நிலைதான் வரும்.'' என்றவர், ''என்னால் அதிக நஷ்டத்திற்கும் விற்க முடியாத

நிலையிலிருக்கிறேன் பிரபு. வாங்குபவருக்கு நல்ல வாய்ப்பிருக்குமா?" என்று கேட்டார்.

"அதை இப்போதே உறுதியாகக் கூற முடியாது ஜெ.பி. சார். வாங்குபவரின் நிர்வாகத் திறமை நன்றாக இருக்கும் பட்சத்தில் லாபமடைய வாய்ப்பிருக்கிறது" என்று கூறினான் விமல் பிரபு.

ஜெ.பி.யின் முகம் முன்பை விட தெளிவு பெற, "அப்படியென்றால்... கம்பெனியை நீங்களே எடுத்துக் கொள்ளுங்களேன்?" என்று கேட்டார் அவர்.

"நானா!?" என்று வியப்புடன் வினவிய பிரபு, "சாரி சார். புதியதாக தொழில் தொடங்கி அதை நிர்வகிப்பதற்கு எனக்கு நேரமில்லை. இங்கே வந்த இந்த இரண்டு நாட்களிலேயே நான் பார்த்து முடிக்க வேண்டிய வேலை அங்கே அப்படியே 'பெண்டிங்' இருக்கும். சமீப காலமாக எனக்கு புதிய தொழில் எதிலும் ஆர்வம் இல்லை. ஒரு நாளைக்கு எட்டு அல்லது மேலும் ஒன்றிரண்டு மணி நேரத்திற்கு மேல் நான் அலுவலக வேலைகளைப் பார்ப்பதில்லை ஜெ.பி. இப்போது இதை ஏற்க வேண்டு மென்றால் அதற்காக நேரம் ஒதுக்கினால் தான் முடியும். எனக்கு ஆர்வமில்லை எக்ஸ்டிரீம்லி சாரி" என்று மறுத் தான் விமல் பிரபு.

"நீங்கள் உடனே முடிவெடுக்க வேண்டிய அவசியம் இல்லை பிரபு. யோசித்துக் கூறுங்கள். யாரோ ஒருவரிடம் கொடுப்பதைவிட உங்களிடம்..." என்று பேசிக் கொண்டிருந்தபோது போன் அழைத்தது.

"சார். உங்களுக்கு ஓட்டலில் இருந்து இரண்டு 'லஞ்ச்' ஏற்பாடு செய்திருக்கிறேன்" என்று கூறியவள் அஜந்தா.



"ஓ! லஞ்ச் டைமாகி விட்டதா? ஓ.கே.ம்மா நாங்கள் சற்று நேரத்தில் வருகிறோம்" என்றார் அவர்.

"அஜந்தா மாதிரி பொறுப்பான ஒரு பெண் எனக்கு இருந்திருந்தால் கூட பரவாயில்லாமல் இருந்திருக்கும். இந்தளவிற்கு டென்ஷன் இருக்காது. ம். எதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஏதோ இந்த நல்ல பெண் செகரட்டரியாவது அமைந்திருக்கிறாளே என்று நினைத்து சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான்" என்று புகழாரம் சூட்டினார் ஜெ.பி.

அவள் எவ்...வளவு நல்...ல பெண் என்பது எனக்கு மட் டும்தானே தெரியும் என்று நினைத்த பிரபுவிற்கு ஏளனமாக உதடு வளைந்தது.

இவர்கள் டைனிங் ஹாலுக்குள் நுழைந்தபோது அவள் பரிமாறி முடித்தாள். "என்னம்மா நீ சாப்பிடப் போகவில் லையா?" என்று கேட்டார் ஜெ.பி.

"இதோ கிளம்புகிறேன் சார்" என்று பதிலளித்தவளின் கை இயல்பாக நீண்டு விமல் பிரபுவிற்கு பரிமாறியிருந்த இடத்திலிருந்த கெட்டித் தயிர் கப்பை எடுத்து சற்றுத் தள்ளி வைத்தது.

"ஏம்மா. தள்ளி வைக்கிறாய்? தயிர் நல்லதுதானே உடம்பிற்கு?" என கேட்டார் ஜெ.பி.

"தயிர் அவருக்குப் பிடிக்காது... காதோ என்று தான்" என தடுமாறி சமாளித்தவளின் கண்கள் பழைய நினைவில் ஏக்கமுடன் தாழ்ந்தது.

அவள் முகத்தைப் பார்த்தவனுக்கு என்ன தோன்றி யதோ தெரியவில்லை. "எனக்கு தயிர் பிடிப்பதில்லை. வேண்டாம்" என்றான் தெளிவாக.

விழிகள் பளிச்சிட அவனை நோக்கினாள் அஜந்தா.

அவளை வெறுப்பாக ஒரு பார்வை பார்த்துவிட்டு உணவில் பார்வை பதித்தான் அவன்.

தலை குனிந்தபடியே கண்ணாடி தம்ளரில் நீர் ஊற்றி வைத்தவளின் கண்களில் இருந்து சொட்டுக் கண்ணீர் தம்ளரில் விழுந்தது.

அதைப் பார்த்த விமல் பிரபுவின் மனம் என்ன நினைத்ததோ தெரியாது. ஆனால் அந்த கணமே ஒரு முடிவெடுத்தவனாக, "இந்த கம்பெனியை நானே வாங்கிக் கொள்கிறேன் ஜெ.பி. சார்" என்று தெரிவித்தான் அவன்.

கம்பெனி கைமாறும் விஷயம் விரைவாக பரவி பணியாளர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது.

'டாக்குமெண்ட்ஸ்' எல்லாம் ரெடியான பின்பு, ஒரு புதனன்று கம்பெனியைச் சட்டபூர்வமாக வாங்கிக் கொண்டான் விமல் பிரபு.

ஜெ.பி. கேட்டுக் கொண்டதெல்லாம், 'எந்த ஸ்டாப்பையும் வேலையை விட்டு அனுப்பி விடக் கூடாது' என்பது மட்டும் தான்.

"நோ. ப்ராப்ளம் சார். வேலையில் நேர்மையிருக்கும் வரை நான் யாரையும் நீக்க மாட்டேன்." என்றவன், "இனி நீங்கள் என்ன செய்வதாக திட்டமிட்டிருக்கிறீர்கள்?" என்று வினவினான்.

"ரெஸ்டாரெண்ட்டோடு கூடிய 'மூன்று தியேட்டர்' கட்டலாமென்று முடிவெடுத்திருக்கிறேன். இரண்டு முக்கிய இடத்திலேயே பெரிய 'ஷாப்பிங் மால்', பிறகு என் சகோதரன் மகள் - பூஜாவிற்கு ஒரு 'கார்டன்' உருவாக்கித் தர வேண்டும் என்றிருக்கிறேன்" என்று தெரிவித்தார் அவர்.



"ம். லாபகரமான நல்ல திட்டம். வருமானத்திற்கும் குறைவிருக்காது. வாழ்த்துக்கள்" என்றான் விமல் பிரபு.

ஜெ.பி. கிளம்பிய பின்னர், அவளுக்கு 'இண்டர் காம்' அழைப்பு வந்தது.

'உடனே வரவும்' என்றது அவன். உத்தரவு போல். லேசாக கதவைத் தட்டிவிட்டு உள்ளே சென்று எதிரே நின்றாள் அஜந்தா.

"இங்கே வேலை செய்பவர்களின் முழு விபரம் எனக்கு வேண்டும். முக்கியமாக வெளியே அனுப்பும் சரக்கிற்கு யார் யாரெல்லாம் பொறுப்பு என்று தெரிய வேண்டும். உடனடியாக வேண்டும்" என்று பணித்து விட்டு, சென்னைக்கு ஒரு மெயில் அனுப்பி வைக்கும்படி கூறி 'டிக்டேட்' செய்தான் விமல் பிரபு.

அவன் சொல்வதையெல்லாம் வேகமாக 'ஷார்ட் - ஹேண்டில்' குறிப்பெடுத்துக் கொண்டே வந்தாள் அவள்.

பவர் கட். ஏ.சி. நின்று வியர்த்தது. ஆனால், அவன் டிக்டேட் செய்வதை நிறுத்தவில்லை. நோட் பேடை டேபிள் மீது வைத்து எழுதியபடி மறுகரத்தால் நெற்றி வியர்வையைத் துடைத்தாள் அஜந்தா.

அவளின் செய்கை அவனது கவனத்தைத் திருப்பியது. "ஆமாம். நீயெல்லாம் எதற்காக பெரிய பதிவிரதை மாதிரி வகிட்டில் குங்குமம் வைத்து அதன் புனிதத்தையே கெடுக்கிறாய்?" என்று வெகு சாதாரணமான குரலில் நக்கலுடன் கேட்டான் அவன்.

எதிர்பாராமல் விழுந்த குத்துதான் என்றாலும் திருப்பித் தராமல் போனால் அவளை மேலும் குத்திப் பாராமல் விடமாட்டான்!

''இந்தப் பக்கம் எப்போதுமே 'செண்டிமெண்ட்' கலாச் சாரத்திற்கு பலம் அதிகம். என் மீது நல்ல மதிப்பு உண்டாக வேண்டுமென்று நினைத்தேன். அதற்காகத் தான் இந்த குங்கும செட்டப் எல்லாம்'' என்று அமைதி யாகக் கூறினாள் அவள்.

''உன் லைப்பில் எல்லாமே செட்டப்தானா? உண்மை யென்று கூற ஒன்றுகூட இல்லை அப்படித்தானே?'' என்று கேட்டான் அவன்.

இருந்ததே. எத்தனையோ இனிய நிகழ்ச்சிகள் அத் தனையும் உண்மையாகவே இருந்ததே. ஆனால்... சொல்ல முடியாத நிலையை எண்ணி தொண்டை யடைத்தது அவளுக்கு.

அவளின் மௌனம் அவனை கோபம் கொள்ளச் செய்தது. ''இது மாதிரி செட்டப் செய்து கொண்டு எத்தனை பேர் கிளம்பியிருக்கிறீர்கள்? மற்றவர்களை ஏமாற்றி வாழ்வதெல்லாம் ஒரு பிழைப்பா? நினைத்துப் பார்த்தால் உனக்கே கேவலமாக இல்லை?'' என்று வெறுப்பான குரலில் கூறினான் அவன்.

''நான் எதற்காக வெட்கப்பட வேண்டும். இந்தியாவில் படித்தது போதாதென்று வெளிநாட்டிற்கு வேறு சென்று படித்து விட்டு வந்து, பிசினஸில் பெரிய திறமைசாலி என்று பெயர் வாங்கிய நீங்களும் ஒரு காலத்தில் ஏமாந்தவர் தானே. உங்களைப் போல் ஏமாறுபவர்கள் இருப்பதால்தானே ஏமாற்றுபவர்கள் உருவாகிறார்கள். அதை நினைத்து நீங்கள் தான் வெட்கப்பட வேண்டும்'' என்று சற்றும் சளைக்காது கூறினாள் அவள்.



''ஏய்! என்னடி, திமிரா?'' என்றான் பிரபு கடுங்கோபத் துடன்.

''திமிர் எனக்கில்லை'' என்றாள் அவள்.

'உன்னை..' என்றவன் அவளை அருகேயிழுத்து விட்டு 'சை' என்ற ஒரே வார்த்தையைக் கூறியபடி விட்டும் விட்டான்.

''உன் முகத்தைப் பார்க்கவே எனக்கு வெறுப்பாக இருக்கிறது. தயவு செய்து என் எதிரே வராதே. அப்படியே வர நேர்ந்தாலும் உன் முகத்தைப் பார்க்கும்படி நிற்காதே'' என்றான் பிரபு.

'தினமும் உன் முகத்தை போட்டோவிலாவது பார்க்க வில்லையென்றால் எனக்கு தூக்கமே வருவதல்லை அஜி' என்றதும் இதே மனிதன் தானே?

இடைப்பட்ட இந்த நான்கைந்து ஆண்டுகளில் இன்று இப்படியும் கூறி விட்டானே.

இந்த ஆண்களை நம்பி பெண்கள் எப்படித்தான் தங் களின் வாழ்க்கையை ஒப்படைப்பது. கடைசி வரை இந்த உறவு நல்லபடியாக நீடிக்கும் என்பதற்கு என்ன உத்தர வாதம் இருக்கிறது உலகில் என்று தோன்றியது அவளுக்கு.

அலுவலகம் முடிந்து மனம் நொந்து வெளியே வந்த அஜந்தாவை 'அம்மா' என்று மழலையாக அழைத்தபடி ஓடி வந்து, அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு கொஞ்சி னான் ஒரு குழந்தைச் சிறுவன்.

இந்தப் பிஞ்சு கரம் தன்னைக் கட்டியபடி மழலையாக கொஞ்சும் வார்த்தைகள் இருக்கும் வரை தன்னால் எவ்வளவு வேதனைகளையும் தாங்கிக் கொள்ள முடியும் என்றெண்ணினாள் அஜந்தா.

அன்றிரவும் வழக்கம் போலவே லேசில் உறக்கம் வராமல் தவித்தாள் அவள். மனதில் அடைத்திருந்த பழைய நினைவுகள் எல்லாம் குமிழியிட்டு மேலே பொங்கி வந்தது.



3

**'சி**த்திரச் சோலை!'

வண்ணச் சித்திரங்கள், ஓவியங்கள் என்றால் அஜந்தா விற்கு ரொம்பப் பிடிக்கும். அவள் கல்லூரியில் பி.சி.ஏ. படித்துக் கொண்டிருந்தபோது 'சித்திரச் சோலை' என்ற ஒரு எக்சிபிஷனுக்கு தோழிகளுடன் சென்றாள் அஜந்தா.

''என்னடி அஜந்தா, நீயே சித்திரம் மாதிரிதானே இருக் கிறாய். உனக்கெதற்கடி சுவற்றில் மாட்டும் சித்திர மெல்லாம். பேசாமல் உன் போட்டோவையே எல்லா இடத்திலும் மாட்டி வைத்துவிடு'' என்று தோழிகள் கிண்டலடிக்கும்போது, கன்னம் குழிய சிரிப்பு தான் வரும் அவளுக்கு.

அவள் சென்றிருந்த அதே எக்சிபிஷனுக்கு தன் நண்பர் களுடன் வந்திருந்தான் விமல் பிரபு.

''டேய் பிரபு மச்சான் கொஞ்சம் சீக்கிரம் பார்த்து வாங்கி முடிடா. ஒரே போர் அடிக்கிறது'' என்று ஒரு நண்பன் குரல் கொடுத்தான்.



''உங்களுக்கெல்லாம் கண்களிருப்பதே சுத்த வேஸ்ட்டுடா ரசனையில்லாத ஜென்மங்கள். அஜந்தா சித்திர...'' என்று அவன் ஏதோ சொல்லி முடிப்பதற்குள்.

''ஹேய்! அஜந்தா. இங்கே வந்து பாரேன். நீ கேட்ட மாதிரி சில படங்கள் இருக்கிறது'' என்று ஒரு பெண் அழைத்தாள்.

'அஜந்தாவா! கொஞ்சம் வித்தியாசமான பெயராக இருக்கிறதே' என்ற நினைவில் தான் பேச்சை நிறுத்தி விட்டு பார்வையை நாலுபுறமும் அலைய விட்டான் விமல் பிரபு.

அவன் நின்றிருந்த இடத்திற்கு இடது பக்கமிருந்த ஒரு கும்பலில் இருந்து, 'பிங்க் வித் லெமன் எல்லோ' கலர் காட்டன் சேலை கட்டியிருந்த இளம் பெண் ஒருத்தி, அவர்களைக் கடந்து வலது பக்கமாகச் சென்று தோழியர் கூட்டத்தை அடைந்தாள்.

அவளுக்கேற்ற பெயர் தான் என்றெண்ணினான் விமல் பிரபு. சித்திரப் படத்தைப் பார்த்த அவளின் மலர் விழிகள் மேலும் மலர்ந்தது.

பௌர்ணமி நிலவொளியில் ஆற்றங்கரை மரத்தடியில் அமர்ந்திருக்கிறாள் ஒரு பெண். வானில் ஒளி வீசிக் கொண்டிருந்த நிலவை ஒத்த முகம். ரோஜா நிற ஆடைகள் அற்புதம். இடது கையை லேசாக மடக்கி தலைக்கு மேலே மரத்தைத் தொட்டுக் கொண்டிருக் கும்படி வைத்திருந்தாள் அவள். வலது கையை நீட்டி வானிலிருக்கும் நிலவைத் தன் கையில் பிடிக்கும் பாவனையில் அமர்ந்திருந்தாள். அருகிலேயே ஓடிய

ஆற்று நீரில் தங்கம் போல் மின்னிய மீன்கள் துள்ளி விளையாடியது. அருகேயிருந்த காட்டுச் செடிகளில் பூத்துக் குலுங்கியிருந்தது பூக்கள்.

தத்ரூபமாக வரையப்பட்டிருந்த அந்த படத்திலிருந்து பார்வையை லேசில் விலக்கவில்லை அவள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் விமல் பிரபு.

''நீங்கள் பார்த்துக் கொண்டிருங்கள். நான் இந்தப் படத்தின் விலை என்ன வருமென்று விசாரித்து விட்டு வருகிறேன்'' என்று தோழிகளிடம் கூறிவிட்டு பில் கவுண்டருக்குச் சென்றாள் அஜந்தா.

படத்தைப் பார்த்துவிட்டு ஏதோ கணக்கிட்டுப் பார்த்து, ''ஒன்லி செவன் தௌசன் மேடம்'' என்று கூறினான் பில் போடுபவன்.

ஓ! அவள் முகத்தில்தான் எவ்...வளவு வருத்தம். அவளிடம் அந்தளவிற்கு பணம் இல்லை என்பதை அவள் முகமே சொல்லிவிட, 'என்ன செய்யலாம்?' என்று ஒரு கணம் யோசித்துவிட்டு, மறுகணம் அவள் எதிரே சென்று நின்றான் விமல் பிரபு.

தன் முன்னால் வெகு அருகில் வந்து நின்றவனைப் பார்த்து திகைத்தவளுக்கு, விழி உயர்த்திப் பார்க்கும் அளவு இவ்...வளவு உயரமாக வளர்ந்திருக்கிறானே இவன், சிறு வயதிலிருந்தே மறக்காமல் ஹார்லிக்ஸ், பூஸ்ட் குடித்திருப்பான் போலிருக்கிறது என்றுதான் தோன்றியது.

''எக்ஸ்கியூஸ்மி! உங்களிடம் தானே கேட்கிறேன். நீங்கள் இந்தப் படத்தை வாங்கப் போகிறீர்களா? இல்லையா?'' என்று மீண்டுமொரு முறை கேட்டான் விமல் பிரபு.



''இ... இல்லை'' என்றாள் தடுமாற்றத்துடன்.

''அப்படியென்றால் அதை என்னிடம் கொடுக்கிறீர்களா? நான் வாங்கலாம் என்றிருக்கிறேன். எனி அப்ஜெக்ஷன்'' என்று அவளிடம் வினவினான்.

கண்களில் ஏக்கத்துடன் படத்தைப் பார்த்தவள் 'இல்லை' என்று தலையாட்டினாள் அவள்.

''ஆனால் இதை வாங்க முடியவில்லையே என்று வருத்தமாக 'பீல்' பண்ணுகிறாய். அப்படித்தானே?'' என்று மீண்டும் பேச்சுக் கொடுத்தான் அவன்.

அவள் மௌனமாகவே இருந்தாள்.

''ம். இப்போது என்ன செய்யலாம். உங்களுக்கும் பிடித்திருக்கிறது. எனக்கும் பிடித்திருக்கிறது. இதை 'நம்ம' வீட்டில், அதாவது நாம் இருவரும் ஒரே வீட்டில் வசிக்கும் சந்தர்ப்பம் அமையும் சமயத்தில் தான் மாட்டி வைத்து எப்போதும் பார்க்க முடியும் என்று நினைக்கிறேன். சரிதானா?'' என்று விஷமமாக கூறிவிட்டு கண் சிமிட்டிச் சிரித்தான் அவன்.

அவனை முறைத்து விழித்தாள் அஜந்தா.

''என்ன மேடம் எதுவுமே பேசாது நிற்கிறீர்கள். நான் உங்களிடம் இப்படிக் கேட்டதற்கு, உடனே உங்களுக்கு கோபம் வந்து, என்னடா திமிரா? என்று கேட்டு சண்டை போடுவீர்கள் என்று நினைத்தேன். ப்ச். ஏமாற்றி விட்டீர்கள்!'' என்றான் அவன்.

அவளுக்குச் சிரிப்புதான் வந்தது.

''உங்கள் சிரிப்பு அழகோடு, ரசனையாகவும் இருக்கிறது'' என்று நேராகவே புகழ்ந்தான் அவன்.

அப்போதும் எதுவும் கூறாமல் வேறு பக்கம் செல்ல முயன்றாள் அஜந்தா.

"இப்போதும் பதில் சொல்லாமல் தானே போகிறீர்கள். படத்தை என்ன செய்வதாம்?" என்று வினவினான். என்னமோ அதுதான் முக்கியம் என்பதுபோல.

"ம். அதைக் கொண்டு போய் உங்கள் வீட்டில் அதாவது, 'நம்ம' வீட்டில் மாட்டி வையுங்கள். சந்தர்ப்பம் கிடைக்கும்போது நான் வந்து பார்த்துக் கொள்கிறேன். சரிதானா?" என்று அவனைப் போலவே கூறிவிட்டுச் சென்றாள் அவள்.

சற்று நேரம் இமைக்க மறந்தவனாக அவளையே நோக்கியவன், வேறு ஒரு முக்கியமான வேலையைச் செய்து விட்டு நண்பர்களுடன் கிளம்பினான்.

கிளம்பும் முன்பு மறக்காமல் அவளைத் தேடியவன் அவள் கண்களில் பட்டதும், "ஹலோ 'நம்ம வீடு' வரட்டுமா? பை" என்று கூறி கையசைத்துவிட்டுச் சென்றான் விமல் பிரபு.

இளம் பெண்ணாக மற்றவரிடம் மரியாதையுடன் பேசிப் பழகும் அவளுக்கு இச்செயல் கோபத்தையோ, ஆத்திரத்தையோ உண்டாக்கவில்லை. ஏனோ அவனைப் பற்றி சகஜமாக நினைத்த பின்பு, ஒரு மெல்லிய புன்முறுவல் தான் தோன்றியது அவளுக்கு.

மேலும் சற்று நேரம் சுற்றி விட்டு தோழிகளுடன் கிளம்பி வாயிலருகே சென்றவளிடம், "அக்கா! ஒரு சார் இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்" என்று கூறி ஒரு பார்சலையும், லெட்டரையும் கொடுத்துவிட்டு ஓடினான், அங்கே வேலை செய்து கொண்டிருந்த பையன்.



குழப்பமுடன் பிரித்துப் பார்த்தவளை ஒரு இனிய அதிர்ச்சி தாக்கியது.

'யார் இதைக் கொடுத்தது?' என்று தோழிகள் கேட்ட பிறகு தான் படத்திலிருந்து பார்வையை விலக்கி, லெட்டரைப் படித்தாள்.

*'என் நடமாடும் அஜந்தா சித்திரத்திற்கு, என்னுடைய முதல் பரிசு.'*

*அன்புடன்*

*'நம்ம வீடு.'*

இப்போது அதிர்ச்சியோடு, முதல் தடவையாக சற்று பயமாகவும் இருந்தது அவளுக்கு.

இதென்ன இப்படியொரு வினோத விளையாட்டு!

"என் அஜந்தாவா?! வாவ்! எங்களுக்குத் தெரியாமல் என்னடி ரொமான்ஸ் இது?" என்று தோழிகள் அவள் சொல்லும் வரை விடவேயில்லை.

"அச்சச்சோ! நாங்கள் அவரைப் பார்க்காமல் மிஸ் பண்ணி விட்டோமே" என்று சோகம் போல் கூறினார்கள்.

"ஏய் பேசாமலிருக்க மாட்டீர்களா? ரொமான்ஸ், அது இதென்று கூறி எரிச்சலாக்காதீர்கள்" என்றாள் அஜந்தா.

வெளியே கோபமாகக் காட்டிக் கொண்டாலும் உள்ளூர மனமும், உடலும் ஒரு இதமான இனிமையைக் கொடுத்ததை நன்றாகவே உணர்ந்தாள் அவள்.

அதே வாரம் ஒரு விடுமுறையன்று எதிர்பாராத விதமாக கடற்கரையில் இருவரும் சந்தித்தார்கள்.

அடுத்த சில சந்திப்பிலேயே அவர்கள் எப்படிக் காதலர்களாக மாறினார்கள் என்பது தான் புரியாத புதிர்!

படிப்பு முடிந்து வேலைக்குச் செல்ல வேண்டும் என்று முடிவெடுத்தவளிடம், "நம்ம கம்பெனிக்கே வந்து விடேன் அஜி" என்று கூறினான் விமல் பிரபு.

"வேண்டாமே விபு. வெளியே வேலை செய்யும் போதுதான் அதனுடைய கஷ்ட, நஷ்டங்கள் முழுமை யாகத் தெரியும் என்று நினைப்பதால் ப்ளீஸ்" என்று மறுத்து விட்டாள்.

அடுத்ததாக ஒரு லேடீஸ் ஹாஸ்டலில் சேர்ந்தாள்.

"ஏனம்மா ஹாஸ்டல்?" என்று விசாரித்தான் அவன்.

"என் அக்காதான் இப்போதைக்கு நீ ஹாஸ்டலில் இருப்பதுதான் உனக்கு நல்லது என்றாள். என்னுடைய நன்மைக்காகத்தான் எதுவும் செய்வாள் என்பதால் நான் சரியென்று விட்டேன்" என்று தெரிவித்தாள் அஜந்தா.

"கல்யாணத்தை சீக்கிரத்திலேயே வைத்துக் கொள்ள லாமா அஜி. நீ இப்படி ஹாஸ்டலில் தங்குவதை நினைத்தால் கஷ்டமாக இருக்கிறது. அதுவும் உன் வருகைக்காக காத்திருக்கும் 'நம்ம வீடு' இருக்கும்போது" என்று கேட்டான் விமல் பிரபு.

தன் கைகளை அவனுடைய கழுத்தைச் சுற்றி படர விட்டவள், "கொஞ்சம் நாள் மட்டும் பொறுத்துக் கொள் ளுங்கள் விபு. ப்ளீஸ் வேலைக்குப் போக வேண்டும் என்பதில் எனக்கு எவ்வளவு ஆசை என்பது உங்களுக்கே தெரியும். உலக நடப்பை ஓரளவிற்காவது தெரிந்து கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். காதலித்தோம் கல்யாணம் செய்தோம், குழந்தை பெற்று வளர்த்தோம் என்று சகஜமான லைஃப் வாழவேண்டியதுதான் என்று நினைக்காமல்..." என்று பேசிக் கொண்டே போனவள்



பேச்சை நிறுத்திவிட்டு, "என்ன விபு. அப்படியென்ன தீவிரமான யோசனை?" என்று அவன் முகத்தைப் பார்த்துவிட்டுக் கேட்டாள்.

"ஒன்றுமில்லைடா. நீ வேறு குழந்'தை' என்று சொல்லி விட்டாயா அதையே மாற்றி குழந்தை'கள்' என்று சொல்லியிருந்தாயென்றால் கொஞ்..சம் சந்தோஷமாக இருந்திருக்கும். சொல்லும்மா ஒரே ஒரு குழந்தை மட்டும் தானா?" என்று வெகுவாக சீரியசான குரலில் வினவி னான் பிரபு.

"ஹே..ய் சீ! எதெதில் தான் ஒருமை, பன்மை கண்டு பிடிப்பது என்று இல்லையா? உங்களை..." என்று அவன் கன்னத்தில் ஒரு குத்துவிட கையை மடக்கியவள், அவனுடைய வசீகர முறுவலில் திகைத்து நின்றாள்.

"என்னம்மா. அவ்..வளவு வேகமாக கையை மடக்கி னாய், இப்போது அப்படியே நின்று விட்டாய்? ம்... நான் வேண்டுமானால் உன் திகைப்பிற்கு மருந்து தரட்டுமா?" என்று கேட்டு அவளின் பட்டுக் கன்னத்தில் மிக மென்மை யாக முத்தமிட்டான் விமல் பிரபு.

கண்களில் நீர் வழிய அப்படியே அவன் மார்பில் சாய்ந்து கொண்டவள், "நாம் எப்போதும் இப்படி சந்தோஷமாகவே இருப்போமா விபு? எனக்கென்னவோ மனதினுள் கொஞ்சம் பயமாக இருக்கிறதே" என்று தொண்டையடைக்கக் கேட்டாள்.

"ஹே..ய்! டோண்ட் ஃபீல்யா. நாம் இதைவிடவே சந்தோஷமாக வாழ்வோம்" என்று கம்பீரமான குரலில் உறுதியாகக் கூறினான் அவன்.

இவ்..வளவு இனிய கனவுகளோடு காத்திருந்தவர் களின் வாழ்க்கை. மகிழ்ச்சி எல்லாம், ஆடிக் காற்றில்

அகப்பட்ட இலவம்பஞ்சாகி இருந்த இடம் தெரியாமல் போகப் போவது அப்போது அவர்களுக்குத் தெரியாது போனது.

கம்பெனியின் கிளைகளை விரிவுபடுத்திக் கொண்டிருந்த விமல் பிரபு அடிக்கடி வெளியூர் செல்ல வேண்டியிருந்ததால் இருவரும் சந்திப்பது என்பது வெகுவாக குறைந்தது.

தன் சகோதரி காயத்ரியைப் பார்க்க அவள் வீட்டிற்குச் சென்றாள் அஜந்தா.

அப்படிச் சென்றதால் தான் அக்கா தன்னை ஏன் ஹாஸ்டலில் சேரச் சொன்னாள் என்ற காரணமும் புரிந்தது அவளுக்கு.

ஏனெனில் காயத்ரியின் கணவன் சமீப காலமாக அதிகமான குடிப் பழக்கத்திற்கு அடிமையாகியிருந்தான்.

"இதனால் தான் உன்னை ஹாஸ்டலில் சேரச் சொன்னேன். இங்கே அடிக்கடி வராதேம்மா. தேவைப்பட்டால் நானே வந்து பார்க்கிறேன்" என்றாள் காயத்ரி.

இதைப்பற்றி விபுவிடம் சொல்ல வேண்டுமென்று அவனுடைய வருகைக்காகக் காத்திருந்தாள் அஜந்தா.

## 4



"என்னம்மா. சில நாட்களாகவே உன் முகமும் சரியாயில்லை. ஏதோ யோசனையிலேயே இருக்கிறாய். எனி ப்ராப்ளம்?" என்று கேட்டான் பிரபு.



"என்னோட சிஸ்டரின் விஷயம் தான் விபு. நினைத்தாலே ரொம்..ப கஷ்டமாக இருக்கிறது. அந்த மனிதன் பாஸ்கரை நினைத்தால் எனக்குக் கோபமாக வருகிறது. பாஸ்கர் எவ்வளவு நல்லவராக இருந்தார் தெரியுமா? வேண்டாத சகவாசம் அதிகமாகி எப்போது பாருக்குப் போய் குடிக்க ஆரம்பித்தாரோ அதிலிருந்து அடியோடு மாறிவிட்டார். என் அக்கா ரொம்ப பாவம்" என்று வருத்தமான குரலில் கூறினாள் அவள்.

அவளின் கலங்கிய கண்களைப் பார்த்தவன் ஸ்டியரிங் வீலில் இருந்து ஒரு கையை எடுத்து அவளைத் தட்டிக் கொடுத்து, "உன் அக்காவையாவது ஒரு முறை பார்க்கில் அறிமுகப்படுத்தி வைத்தாய். உன் மாமாவை இன்றுவரை நான் சந்திக்கவேயில்லை. அவர் என்ன வேலை செய்கிறார்?" என்று வினவினான்.

"என்ன செய்கிறார்? அக்கா வேலைக்குச் சென்று சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் குடித்தே நாசமாக்கிக் கொண்டிருக்கிறார். அக்காவிற்கு இது நிறை மாதம். ஆனால் அதைப்பற்றியெல்லாம் அவருக்கு கொஞ்சமும் அக்கறையில்லை. பொறுப்பில்லை. பேசும் வார்த்தையில் நாகரீகமும் இல்லை. இதையெல்லாம் நினைத்து அக்கா எவ்வளவு வேதனைப்படுகிறாளோ" என குரல் கம்ம கூறினாள் அஜந்தா.

"வருத்தப்படாதேம்மா. எல்லாம் சரியாகிவிடும். உன் அக்கா வேண்டாமென்றாலும் நீ போய் அவர்களைப் பார்ப்பதை நிறுத்த வேண்டாம். தேவைப்பட்டால் அவர்களை நம்ம வீட்டிற்கே கூட அழைத்து வந்து விடு அஜி" என்று கூறி தைரியமூட்டினான் அவன்.

"அக்காவிற்கு தன்மானம், சுய கௌரவம் அதிகம். எங்கேயும் வரமாட்டாள். நானாகவே தேர்ந்தெடுத்த வாழ்க்கை நானே சரி செய்து கொள்கிறேன் விட்டு விடு என்கிறாள். நாங்கள் இருவரும் எவ்..வளவு சந்தோஷமாக வாழ்ந்திருக்கிறோம் தெரியுமா விபு. அக்கா குழந்தையாக இருந்த போதே பெரியம்மா, பெரியப்பா விபத்தில் இறந்து போனார்கள். அன்றிலிருந்து இருவரையும் தான் பெற்ற பிள்ளைகளாகத்தான் என் அம்மா வளர்த்தார்கள். அப்பா இறந்த கொஞ்ச நாளிலேயே அம்மாவும் அவருடன் சேர்ந்து கொண்டார்கள்.

"நான் பாஸ்கரைத் திருமணம் செய்து கொள்ளட்டுமா என்று அக்கா கேட்டபோது எனக்கும் சந்தோஷமாகத்தான் இருந்தது. ஆனால் இப்போது..." என்று பெருமூச்செறிந்தாள் அஜந்தா.

"உன் அக்காவிடம் உனக்கு எவ்வளவு அன்பிருக்கிறது என்று சொல்லாமலேயே எனக்குத் தெரியும் அஜி. அந்த அன்பில் ஒரு இரண்டு சதவீதமாவது என்மீது காட்டுவாய்தானே?" என்று கேட்டான் விமல் பிரபு.

"இரண்...டு சதவீதமா! ஹய்...யோ. இவ்..வளவு கேட்பது ரொம்ப அநியாயம்பா. இருந்தாலும் முடிந்தவரை முயற்சி செய்கிறேன்" என்று கூறி முடிக்கும் முன்பாகவே அவளுக்குச் சிரிப்பு வந்துவிட, அவனும் அதில் கலந்து கொண்டான்.

அடுத்த முறை இருவரும் சந்தித்தபோது, அஜந்தாவை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான் விமல் பிரபு.

"இதுதான் அஜிம்மா 'நம்ம வீடு'" என்று பழைய நினைவில் சிரிப்புடன் கூறினான் அவன்.



ஆனால் அவளால் சிரிக்க முடியாமல் தொண்டையை அடைத்தது.

"என்..னடா எதுவுமே பேசாமலிருக்கிறாய். சமீப மாகவே நீ ரொம்பவே மாறிக் கொண்டு வருவது போலிருக்கிறது. உன்னை முன்பு போல நேரிலும் சந்திக்க நேரமில்லாது போயிற்று. போனில் பேசினால் இரண்டொரு வார்த்தையோடு பேச்சை முடித்துக் கொள்கிறாய். என்னவென்று கேட்டால் 'பிஸி' என்கிறாய்? ம்... மறந்து விட்டேனே உன் அக்கா எப்படியிருக்கிறார்கள்?" என்று விசாரித்தான் அவன்.

"ம். நல்லாயிருக்கா. ஆபீஸ்க்கு லீவ் போட்டுவிட்டு வீட்டில்தானிருக்கிறாள். அவளுக்கு வேண்டியதெல்லாம் நான்தான் செய்து கொண்டிருக்கிறேன். பாஸ்கரைப் பற்றி தான் உங்களுக்கே தெரியுமே" என்று கூறினாள்.

"அவர்கள் பிரச்சனையெல்லாம் குழந்தை பிறந்த பின்பு சரியாகி விடுமென்று நினைக்கிறேன். பீல் பண்ணாதே" என்று கூறியவன், அவளைத் தன் அறைக்கு அழைத்துச் சென்று ஒரு பிளாஸ்டிக் பையைக் கொடுத்து விட்டு கண் சிமிட்டிச் சிரித்தான் பிரபு.

உள்ளே ஒரு அழகான சுடிதார் செட், கடல் நீல வண்ணத்தில் ரோஜா நிற பூக்கள் மலர்ந்து இருந்தது. கூடவே ஒரு வெல்வெட் பெட்டி, அதைத் திறந்தவள் சற்று திகைத்தாள்.

மாணிக்கமும், முத்தும் கலந்து செய்யப்பட்டிருந்த மாலை, வளையல், காதணி என்று செட்டாக இருந்தது. கலை நயத்தோடு செய்யப்பட்டிருந்த நகை செட். நல்ல தேர்வு தான்.

''என்ன பிடித்திருக்கிறதா?'' என்று வினவினான் அவன்.

பதிலேதும் சொல்லாமல், ''இதெல்லாம் எதற்கு. இப்போது என்ன அவசரம்?'' என்று குழப்பமுடன் கேட்டாள் அவள்.

அவள் முகத்தைக் கைகளில் ஏந்தியவன், ''இவையெல்லாம் உனக்கு என்னுடைய தீபாவளிப் பரிசென்று வையேன். தீபாவளிக்கு நான் இங்கேயிருக்க மாட்டேன் அஜி. ஒரு கான்பரன்ஸ் விஷயமாக 'கனடா' போக வேண்டியிருக்கிறது. திரும்புவதற்கு எப்படியும் இருபது நாட்களாகும். அதனால் தான் இதையெல்லாம் இப்போதே கொடுத்து விட்டேன்'' என்று கூறினான் அவன்.

''இரு..பது நாட்களா?'' என்று கேட்டவளுக்கு, அவனிடம் சொல்ல நினைத்த விஷயத்தைச் சொல்லலாமா? அல்லது திரும்பி வந்த பின்னரே சொல்லிக் கொள்ளலாமா என்ற குழப்பமுண்டானது. பிசினஸ் விஷயமாக வெளிநாடு செல்லும்போது ஏன் அவனைக் குழப்பி, கஷ்டப்படுத்த வேண்டும். என்ன ஆனதோ என்று அவன் நினைத்து தவிக்கக் கூடும். என்னவென்றாலும் அவன் திரும்பி வரும்வரை நாமே சமாளிக்கலாம். வந்த பின்னர் சொல்லிக் கொள்ளலாம் என்று நினைத்து விட்டு விட்டாள் அவள்.

ஆனால் அப்படிச் சொல்லாமல் விட்டது நல்லதா? கெட்டதா? என்பது மட்டும் இன்றுவரை தெரியவில்லை அவளுக்கு!

''இதுபோன்ற பெரிய நகையெல்லாம் இப்போது வேண்டாமே விமல். பிறகு...'' என்றவளின் பேச்சில்



இடைப் புகுந்தவன், ''எப்போதென்றாலும் இது உனக்காகவே வாங்கியது. உன்னுடையது. அதனால் இப்போது போடுவதால் தப்பில்லை. ஆமாம். காதலிக்கும் நாட்கள் அதிகமாகும்போது காதலர்களிடையே அன்பும் அதிகமாகிடியர், அன்பே என்றழைப்பது தானே வழக்கம். நீயானால் 'விபு'வில் இருந்து 'விமலு'க்கு மாறியிருக்கிறாய்? கனடாவிலிருந்து திரும்பி வந்த பின்பு, நீங்கள் யாரென்று கேட்க மாட்டாய் தானே?'' என்று கேட்டுச் சிரித்தான் அவன்.

''என்ன அஜி எதற்குமே பதில் சொல்ல மாட்டேன் என்கிறாய்?''

''கொஞ்சம் தலைவலி. அதான்'' என்றாள் அவள்.

''ஒரு காபி குடித்தால் சரியாகி விடும் வா'' என்று கூறி அவளை கீழே அழைத்து வந்தவன், ''வேலு இரண்டு காபி'' என்று குரல் கொடுத்தான்.

''இனியும் உன்னைப் பிரிந்து என்னால் தனித்திருக்க முடியாது அஜிம்மா. கனடாவிலிருந்து நான் திரும்பி வந்தவுடன் நம்முடைய திருமண வேலைகளை ஆரம்பிக்கப் போகிறேன். நீ இப்பேழுதிருந்தே திருமணச் சேலை, நகையெல்லாம் எப்படியிருக்க வேண்டும் என்று யோசனை செய்து திட்டமிட ஆரம்பித்து விடு. சரியா'' என்று கூறியவன், 'ஒரு நிமிடம்' என்று விட்டு மீண்டும் தன் அறைக்குச் சென்று விட்டு வந்தான்.

அவளை பூஜையறைக்கு அழைத்துச் சென்று கையிலிருந்த தங்கச் செயினை அவள் கழுத்தில் அணிவித்து விட்டு, ''எப்போதோ உனக்காக வாங்கியதுதான். ஆனால் போட்டு விட இன்றுதான் சந்தர்ப்பம் அமைந்திருக்கிறது எனக்கு'' என்று கூறி முறுவலித்தான் அவன்.

எவ்...வளவு இயல்பாக முறுவலிக்கிறான். என்ன கம்பீரம்! ஸ்டைல்!

என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கிறதே!

கடவுளே இந்தப் புன்னகையை வாழ்நாள் முழுக்க பார்க்கும் அதிர்ஷ்டத்தைக் கொடு என்று வேண்டிக் கொண்டாள் அஜந்தா.

ஆனால் இன்றிலிருந்து வருடக் கணக்காக அவனைப் பார்க்கும் வாய்ப்புகூட இல்லாமல் போகப் போகிறது என்பது தெரியாது போயிற்று அவளுக்கு.

அவன் கனடா சென்ற பின்பு, தன் அக்காவைப் பார்த்து வரச் சென்றாள் அஜந்தா.

காயத்ரி முகத்தில் சோகத்துடன் அமர்ந்திருக்க, அரை மயக்கத்தில் புலம்பிக் கொண்டு கிடந்தான் பாஸ்கர்.

''எப்படிக்கா இருக்கிறாய்?'' என்று விசாரித்தாள் அஜந்தா.

''ம். இருக்கிறேன். நீ எதற்கு இங்கே வந்தாய்? அதுவும் இந்த மனுஷன் இருக்கும்போது. கிளம்பு, கிளம்பு'' என்று அவளை விரட்டினாள் காயத்ரி.

ஆனால் அதற்குள் பாஸ்கர் எழுந்து வந்து விட்டான்.

''அன்றைக்கு நான் சொன்ன விஷயத்தைப் பற்றி முடிவு செய்து விட்டாயா அஜந்தா. நல்ல பதிலாக சீக்கிரம் சொல்லு. கோபு அண்ணாச்சி என்னைப் போட்டு தொந்தரவு செய்கிறார்'' என்றான் அரை மயக்கத்துடனேயே.

அவர்கள் மௌனமாகவே இருந்தார்கள்.

தலையை ஓணான் போல ஒரு முறை சொட்டடித்து விட்டு, அவர்களை உற்று நோக்கியவன், ''ரெண்டு பேரும் சேர்ந்துக்கிட்டு ஏதாச்சும் டிராமா போட்டீங்கன்னா தொலைந்தீர்கள் தொலைந்து. ஜாக்கிரதை'' என்று பயமுறுத்தி எச்சரித்தான் பாஸ்கர்.



ரெண்டு டம்ளர் பானைத் தண்ணீரைக் குடித்தவன், அஜந்தாவின் கையிலிருந்த பையை எதிர்பாராதபோது பிடுங்கிப் பார்த்துவிட்டு, ''உனக்கு இந்தத் துணி, நகையெல்லாம் ஏதடி? எவன் வாங்கிக் கொடுத்தான் சொல்லு?'' என்று அசிங்கமாகக் கேட்டுக் கத்தினான்.

''ப்ளீஸ். மற்றவர்களுக்கு கேட்கும்படி இப்படிக் கத்தாதீர்கள். எனக்கு அவமானமாக இருக்கிறது'' என்று கூறினாள் அஜந்தா.

''இந்தாளுக்கு போதை தலைக்கேறி விட்டதும்மா. இனியும் உன் விஷயத்தை மறைத்து வைப்பதில் பிரயோஜனமில்லை. என்னோடு வா'' என்று கூறியவள், தங்கையின் உதவியோடு இரண்டு குடம் தண்ணீரை பாஸ்கரன் தலையில் ஊற்றி, அவனை இழுத்தபடியே அழைத்துச் சென்று படுக்க வைத்தாள் காயத்ரி.

''அக்கா. எனக்கென்னவோ பயமாக இருக்கிறதே. விபுவைப் பற்றித் தெரிந்தால் பிரச்சினை செய்வார்கள் போலிருக்கிறதே'' என்று கலக்கமுடன் கூறினாள் அஜந்தா.

''நிச்சயமாக செய்வார்கள். சமாளிக்க வேண்டும். உனக்கு விரைவாகவே திருமணம் செய்து விட்டால் தான் நான் சற்று நிம்மதியாக இருப்பேன்'' என்று முடிப்பதற்குள் கண்களில் நீர் வழிந்தது காயத்ரிக்கு.

''அக்கா ப்ளீஸ். நீ இருக்கும் நிலையில் இப்படி அழலாமா? வேண்டாம்கா'' என்று கண்ணீரைத் துடைத்து விட்டாள் அஜந்தா.

''உன்னோட விமலை இந்த வாரத்திலேயே நான் பார்க்க வேண்டும். முன்பு ஒரு பூங்காவில் அவரை அறிமுகப்படுத்தினாயே, அங்கேயே வரச் சொல். உன் அத்தானையும், இந்த வீட்டையும் அவருக்கு இப் போதைக்குத் தெரிய வேண்டாம். அதுதான் நல்லது'' என்று களைப்புடன் கூறினாள் மூத்தவள்.

''அவர் கனடாவிற்குச் சென்றிருக்கிறாரக்கா. வருவ தற்கு இருபது நாட்களுக்கு மேலாகுமென்றாரே'' என்று கவலையோடு கூறினாள் இளையவள்.

'ஓ! நான் என்ன செய்வேன்' என்று சோர்ந்து அமர்ந்தாள் காயத்ரி.

போதை தெளிந்ததும் மறுநாள் மீண்டும் திருமணப் பேச்செடுத்தான் பாஸ்கர்.

''நீங்கள் சொன்ன ஆளை திருமணம் செய்துகொள்ள அஜந்தாவிற்கு விருப்பமில்லையாம். அதனால்...'' என்று அவள் முடிப்பதற்குள்,

''ஏண்டி. ஏன் அவளுக்கு இஷ்டமில்லையாம்? என்ன, கோபு பார்க்க கொஞ்சம் சுமாராகத்தான் இருப்பான் அதைப் பற்றி எண்ணுகிறாளாமா? என்ன செய்வது உனக்குக் கிடைத்த மாதிரியே அழகான, லட்சணமான புருஷன் எல்லோருக்கும் எளிதில் கிடைத்து விடுமா? என்ன, எனக்கு நல்ல வேலையோ வருமானமோ இல்லை. அது உன்னிடம் இருந்தது. அதற்காகத்தானே சரி போ! என்று உன்னைக் கட்டிக் கொண்டேன்'' என்று பாஸ்கர் தற் பெருமையடித்ததைக் கேட்டு, காயத்ரியும், சற்று முன்னர் வந்து நின்ற அஜந்தாவும் முகம் சுளித்தனர்.

பாஸ்கர் தனது பேச்சைத் தொடர்ந்தான், ''கோபு அண்ணாச்சி நல்ல பணக்காரன். அவன் முதல்



பொண்டாட்டி அல்பாயுசுக்காரி. போய்ச் சேர்ந்து விட்டாள். உன்னைப் பார்த்து விட்டு திருமணம் செய்துகொள்ள நினைத்து, என்னை வரச் சொல்லிப் பேசினார். எனக்கும் வேண்டியதெல்லாம் செய்கிறாராம். இஷ்டப்பட்டு கட் டிக்கப் போவதால் உன்னையும் நன்றாகவே கவனித்துக் கொள்வார். நானும்...'' என்று அஜந்தாவிடம் அவன் சொல்லி முடிப்பதற்குள் அவளுக்குக் கோபம் வந்து விட்டது.

''நன்றாக கவனித்துக் கொள்வானா? எப்படி நீங்கள் என் அக்காவை விரும்பி மணந்து கொண்டு இப்போது இவ்... வளவு நன்றாக வைத்திருக்கிறீர்களே அது மாதிரியா?'' என்று சூடாகத் திருப்பிக் கொடுத்தாள் அஜந்தா.

''கழுதை. வாயை மூடு'' என்று அதட்டினான் பாஸ் கரன். ''இது தான் உனக்கு கொடுக்கும் கடைசி அவகாசம். அவரை நீ மணந்தால் நீயும் நன்றாக இருப்பாய், நாங்களும் நன்றாக இருப்போம். என்ன சொல்ற?'' என்று தெனாவெட்டான குரலில் அதிகாரமுடன் கேட்டான் பாஸ்கர்.

''உங்களுக்கு வேண்டுமென்றால் யாரோ தருகிற பணம் தேவையாயிருக்கலாம், எனக்குத் தேவையில்லை. நான் சம்பாதிப்பதே எனக்கும், என் பிள்ளைக்கும் போதும். அஜந்தாவின் விருப்பத்துக்கு மாறாக அவளை...''

''போதும் நிறுத்தடி!'' என்று ஒரு அதட்டல் போட்டான் அவன்.

''வேண்டாம் பாஸ்கர். உங்களைக் கட்டிக் கொண்டு நான் படும் அவஸ்தைகள் போதும். நீங்கள் சொல்கிறபடி அவள் கேட்கமாட்டாள். அவனைக் கட்டிக்க மாட்டாள்'' என்று உறுதியாகக் கூறினாள் காயத்ரி.

''ஏண்டி கட்டிக்க மாட்டாள்?'' என்று ஆத்திரமாகக் கேட்டான் அவன்.

''அவள்... அவள் வேறு ஒருவரை விரும்புகிறாள்'' என்று கூறிவிட்டு மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றாள் காயத்ரி.



# 5

''அடடடா! கழுதைக்கு காதல் வேறா? நீ வேலைக்குப் போய் உன் பிள்ளையைக் காப்பாற்றிக் கொள்வாய். இவளும் வேறு ஒருவனைக் கட்டிக் கொண்டு ஜாலியாக இருப்பாள். அப்போது நான்? என்னோட கதி என்னாவது? அஞ்சுக்கும் பத்துக்கும் கட்டின பெண்டாட்டிக்கிட்ட கை நீட்டிக் கொண்டிருக்க என்னால் முடியாது'' என்று மிக உறுதியாகக் கூறினான், அந்த இந்தியக் 'குடி'மகன் பாஸ்கர்.

''உழைத்து சம்பாதிக்க வேண்டியது தானே? உங்களின் பணவெறிக்கு அவளைப் பலிகொடுக்க நான் விடமாட்டேன். அவளின் விருப்பப்படிதான் அவளின் கல்யாணம் நடக்கும்'' என்று திடமாகக் கூறினாள் காயத்ரி.

''நாயே. அவ்வளவு தைரியமாடி உனக்கு. நீ கொடுக்கும் தைரியத்தில்தானா உன் தங்கைக்கு துணிச்சல் வந்திருக்கிறது. பாவி! என்னோட திட்டத்திற்கு முதல் எதிரியே நீதானடி. உன்னை'' என்று ஆவேசமாகக்



கத்தியவன் அவள் கன்னத்தில் 'பளார் பளார்' என்று ஓங்கி அறைந்து, அவளைப் பிடித்து தூரமாகத் தள்ளி விட்டான்.

அவன் தள்ளிவிட்ட வேகத்தில் டீபாய் மேல் விழுந்த காயத்ரிக்கு வயிற்றில் நல்ல அடி. அப்படியே துடிதுடித்துக் கீழே விழுந்தாள் காயத்ரி.

சற்றும் எதிர்பாராமல் நடந்த சம்பவத்தால் அதிர்ந்து போன அஜந்தா, ''அக்கா!'' என்று கதறி அழுதபடி ஓடி வந்து அவளைத் தன் மடியில் போட்டுக் கொண்டு, ''ஒரு டாக்ஸி பிடித்துக் கொண்டு வாருங்கள்'' என்று கண்ணீர் விட்டபடியே பாஸ்கரிடம் கேட்டாள் அஜந்தா.

தான் செய்த தப்பின் வேகம் அவனுக்கும் அப்போது தான் புரிந்ததோ என்னவோ? விரைவிலேயே ஒரு டாக்ஸியோடு வந்தான்.

அடி சற்று பலமாகவே பட்டிருந்ததால் ஆபரேஷன் செய்து தான் குழந்தையை எடுத்தார்கள் டாக்டர்கள்.

ஆனால், பல நாட்களாகவே கணவனின் போக்கினால் உடலாலும் மனதாலும் பலவீனமாகிக் கொண்டிருந்த காயத்ரியை டாக்டர்களால் காப்பாற்ற முடியாமல் போயிற்று!

''போகும்போது உன் தலையில் பெரிய பாரத்தை ஏற்றி விட்டுப் போகிறேன் என்னை மன்னித்து விடு அஜி. இனி என் குழந்தை உன் பொறுப்பு. பாஸ்கரிடம் மட்டும் குழந்தையைக் கொடுத்து விடாதே. அந்தப் பாவி இனி கொலை செய்யவும் அஞ்ச மாட்டான். அதைவிட, குழந்தையை உன்னால் வளர்க்க முடியாது போனால்

ஏதாவது அனாதை ஆசிரமத்தில் விட்டுவிடு'' என்று கூறி கண்ணீர் விட்டாள் காயத்ரி.

''இப்படியெல்லாம் பேசாதேக்கா. குழந்தையை நான் யாரிடமும் கொடுக்க மாட்டேன் சத்தியம். நீ தைரிய மாயிரு. உனக்கு எதுவும் ஆகாது'' என்று கூறினாள் அஜந்தா.

''சீக்கிரமாக உன் விமலிடம் சென்று விடு. முடிய வில்லையென்றால் இந்த ஊரை விட்டே போய் விடு. இல்லையென்றால் உன்னைக் கட்டாயப்படுத்தியாவது அந்த ரவுடிக்குக் கட்டி வைத்து விடுவான். விமலை நீ பார்க்கும் வரை உனக்கு நீயேதான் பாதுகாப்பு. குழந் தையையும் விட்டு விடாதே'' என்று மூச்சு வாங்கக் கூறிய காயத்ரி அதற்கு மேல் பேசவேயில்லை.

அக்காவிற்காக அழுவதா? தாயை இழந்த பிஞ்சு விற்காக அழுவதா? திக்பிரமை பிடித்த மாதிரியானாள் அஜந்தா.

வெல்வெட் மிருதுவுடன் இருந்த குழந்தையைத் தொட்டுத் தூக்கியபோது தேகமெல்லாம் நடுங்கியது அவளுக்கு.

இரண்டு நாட்கள் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரிந்த பாஸ்கர், அடுத்த நாளெல்லாம் குடித்து விட்டு வந்து கண்டபடி கத்தினான்.

குழந்தையோடு ஹாஸ்டலுக்குப் போக முடியாததால் அஜந்தாவும் அதே வீட்டில் தான் இருக்க வேண்டிய தாயிற்று.

பாஸ்கரின் பழக்கங்கள் எவ்வளவோ மோசமானவை யாக இருந்தபோதும் அவன் அடுத்த பெண்களைத்



திரும்பியும் பார்ப்பதில்லை. எனவே, அவன் இருக்கும் அதே வீட்டில் தங்குவதற்கு தயங்கவில்லை அஜந்தா.

''இதோ பார் அஜந்தா, உன்னையெல்லாம் நான் கை நீட்டி அடிக்க மாட்டேன். அண்ணாச்சி கோவிச்சுக்குவாரு. ஒழுங்கு மரியாதையா, நல்ல பொண்ணா சம்மதம்னு சொல்லு. இல்லாட்டி ரம்ப மோசமா கத்துவேன். எனக்கு சரக்கு உள்ளே போச்சுன்னா ரம்ப நல்ல நல்ல வார்த்தை யாத்தான் வரும். என்னா புரியுதா?'' என்று கூறியவன் நிற்க முடியாமல் 'தொப்'பென்று சோபாவில் விழுந் தான்.

இரண்டு நாட்களிலேயே அஜந்தாவை மனமுடை யச் செய்யும் அளவிற்கு பேசினான். குழந்தைக்காக என்று பல்லைக் கடித்துக் கொண்டு பேசாதிருந்தாள் அஜந்தா.

''இந்தா, இந்தச் சனியனை முதலில் கீழே போட்டு விட்டு பதிலைச் சொல்லு. போனா போவட்டும்னு மரியாத கொடுத்தா, ரொம்பத்தான் ராங்கி காட்டலாம்னு நினைச்சுக்கிட்டு இருக்கிறாயா? உன் கழுத்தில் கட்டாயத் தாலி கட்டறதுக்கு அண்ணாச்சிக்கு ஒண்ணும் அதிக நேரமாகாது. பெரிய பெரிய முக்கியமான ஆளுங்களை யெல்லாம் கல்யாணத்துக்கு கூப்பிடணும்னு நினைக் கிறாரு. தாலி கட்டற போது நீ பிடுங்கிக்கிட்டு ஓடிட்டா அந்த பெரிய மனுஷனோட மானம் என்னாவறது? அதுக்காகத்தான் உன் சம்மதத்தைக் கேக்கிறாரு.''

''நீ யாரோ ஒருத்தனக் காதலிக்கிறதா உன் அக்கா சொன் னாளே. அவனை மறந்துடு. அதெல்லாம் நடக்காது. அண்ணாச்சியை ஏமாத்திட்டு உன் ஆளைக் கட்டிக்கவோ, அவன் வீட்டிற்கே போகவோ நினைக்காதே. அப்படி

யேதும் நினைச்சியானா அதுதான் உன் ஆளோட கடைசி நாள் என்பதையும் மறந்து விடாதே. என்னா முழிக்கிற. கோபு எவ்வளவு பெரிய ரவுடி, எங்கெங்கே எல்லாம் தோஸ்து ஆளுங்க இருக்கறாங்க என்பது எனக்கு ஓரளவுக்குத் தெரியும். அதான் சொல்றேன். உன் ஆளுக்கு நீயே எமனாயிடாத. உன் லவ் மேட்டரெல்லாம் அண்ணாச்சிக்குத் தெரிந்தால் உன் ஆள் முடிந்தான். அவன் வெளியே வரும்போது லாரியை விட்டு ஏற்றி னால் கதை தீர்ந்தது'' என்று சாதாரணமாகக் கூறினான் பாஸ்கர்.

லாரியை விட்டேற்றினால் எலும்புகூட மிஞ்சாதே! விக்கித்துப் போன அஜந்தா, ''நீயெல்லாம் மனிதனா? பணம், பணம் என்று ஏன் இப்படிப் பறக்கிறாய். சரி. உனக்கு பணம்தானே வேண்டும். எவ்வளவு வேண்டு மென்று சொல்லு. விமலிடம் கேட்டு நானே வாங்கித் தருகிறேன். சொல்லித் தொலை'' என்று ஆத்திரமாகக் கேட்டாள் அஜந்தா.

''நீ இப்படிக் கத்தியே பேசினாலும் நான் பயந்துவிட மாட்டேன் தெரிந்து கொள். உன் ஆளிடமிருந்து வாங்கித் தரும் பணத்தை வைத்துக் கொண்டு உயிர் வாழ கோபு விடுவாருன்னா நினைக்கிற. என் கதையையும் சேர்த்து முடித்து விடுவார். எனக்கு உயிர் வாழ நிறையவே ஆசையிருக்கு. அதனால் இனியும் இப்படி முட்டாள் தனமாக உளறாமல் நல்ல முடிவாகச் சொல்லு. இல்லை யென்றால் உன் கண் முன்னாலேயே இந்தப் பீடையைக் கொன்று விடுவேன்'' என்று கூறி எச்சரித்தவன் குனிந்து குழந்தையை 'நறுக்'கென கிள்ளி விட்டுப் போனான்.



'வீல்' என்று அலறியது அந்தப் பச்சிளம் குழந்தை.

அந்த நிமிடத்தில் அஜந்தாவின் மனதில் பயம் சூழ்ந்தது. தகதகவென்று பற்றி எரிந்து கொண்டிருக்கும் வீட்டிற்குள் மாட்டிக் கொண்டாயிற்று. சுடுபடாமல் வெளியே வருவது ரொம்...பவே கஷ்டம்தான்.

பாஸ்கர் திரும்பக் கேட்டபோது 'சரி' என்று சம்மதித் தாள் அஜந்தா.

நம்பாமல் ஓணான் மாதிரியே தலையை நிமிர்த்திப் பார்த்தான் பாஸ்கர்.

அதன் பிறகு, முன்பை விட அதிகமாக அவளை 'வாட்ச்' பண்ணவும் செய்தான்.

''நான் இன்று அலுவலகத்திற்குச் சென்று வேலையை 'ரிசைன்' செய்து விட்டு வருகிறேன். அதுவரை குழந் தையை அழ விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றாள் அஜந்தா.

முகம் இறுக அவளை முறைத்தவன், ''உன்னை நம்பி தனியாக எப்படி அனுப்புவது? நீ போயேதான் ஆக வேண்டுமென்று அவசியமில்லையே. சும்மா வீட்டோட இரு'' என்றான் பாஸ்கர்.

''நான் கண்டிப்பாக போய் விட்டு வரத்தான் போகி றேன். நம்பிக்கையில்லையென்றால் பின்னாலேயே வந்து பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று வேகமாகக் கூறி விட்டுச் சென்றவள் திரும்பி, ''தயவு செய்து குழந்தையை எந்தக் கொடுமையும் செய்து விடாதீர்கள்'' என்று கேட்டுவிட்டுச் சென்றாள்.

'திருமணம்' என்று கூறி வேலையை 'ரிசைன்' செய்து விட்டு, உடனே தோழி தேவியின் வீட்டிற்குச் சென்று,

தனக்கு வெளியூரில் ஒரு வேலை வாங்கித் தர முடியுமா? என்று கேட்டாள்.

இதுவரை எந்த உதவியும் கேட்காதவள், இன்று திடீரென்று வந்து வேலை கேட்கவும், தோழியும் அனாவசியமான கேள்விகளை எழுப்பாமல் புவனேஷ்வரில் இருக்கும் தன் மாமாவிடம் கூறி வேலைக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறினாள்.

சென்னையை மட்டுமல்ல, தமிழ்நாட்டையே விட்டுப் போவது எல்லா வகையிலும் அவளுக்கு நன்மை தான் - ஒன்றே ஒன்றைத் தவிர.

மறுநாளே அஜந்தாவின் பக்கத்து வீட்டிற்கு தேவி போன் செய்து, ''வேலை உறுதியாகி விட்டது. நீ எப்போது வேண்டுமென்றாலும் கிளம்பலாம்'' என்று தெரிவித்தாள்.

தேவியின் போன் வந்த பிறகு புதுத் தெம்பே உண்டானது அஜந்தாவிற்கு. மறுநாள் கைப்பை, குழந்தை சகிதமாகக் கிளம்பியபோது பாஸ்கர் வந்து விட்டான்.

''எங்கே போகிறாய்?'' என்று சந்தேகமான குரலில் கேட்டான்.

''குழந்தைக்குத் தடுப்பூசி போட வேண்டும். சந்தேகமிருந்தால் தாராளமாக கூடவே வந்து காவலிருங்கள்'' என்று எடுப்பான குரலில் தைரியமாகவே கூறியபோதும், உள்ளூர பயமாகத்தான் இருந்தது அவளுக்கு.

இதுவரை ஒழுங்காகத்தானே நடந்து கொண்டிருக்கிறாள். இப்போது மட்டும் என்ன செய்து விடப் போகிறாள் என்ற நினைப்பில், ''சேச்சே! ஹாஸ்பிடல் வாசலில்



எல்லாம் என்னால் காத்திருக்க முடியாது'' என்றவன், ''அண்ணாச்சி நாளைக்கு உன்னை ஷாப்பிங் கூட்டிப் போகிறாராம். காலையில் பத்து மணிக்குத் தயாராக இரு'' என்று கூறிவிட்டு உள்ளே போனான் பாஸ்கர்.

'சரி' என்றவள், ''ஹாஸ்டல் ரூமை வெகேட் செய்து கொண்டு வரப் போகிறேன். அதனால் நான் வருவதற்கு கொஞ்சம் நேரம் ஆகும்'' என்று கூறினாள் அஜந்தா.

''சரி, சரி சீக்கிரம் வந்து சேர்'' என்று கூறியபடியே பாட்டிலைத் திறந்தான் பாஸ்கர்.

வேகமாக தெருவிற்கு வந்த அஜந்தா அந்த வழியாக வந்த ஆட்டோவை நிறுத்தி ஏறினாள். கைப்பையில் வைத்திருந்த பார்சலை விமல் பிரபுவின் முகவரிக்கு கூரியர் அனுப்பிவிட்டு, ஹாஸ்டல் ரூமில் ஒரு பொருளின்றி பேக் செய்து கொண்டு இரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றாள். அடுத்த இருபதே நிமிடத்தில் அவள் செல்ல வேண்டிய இரயில் வந்தது.

முன் பதிவு செய்யாத போதும் '*சீசன்*' சமயமில்லாததால் வசதியான இருக்கையே கிடைத்தது. குழந்தை, பெட்டி சகிதம் தனக்குரிய இடத்தில் அமர்ந்தபோதுதான் நிம்மதிப் பெருமூச்சு வந்தது அவளுக்கு.

இனி எந்தப் பிரச்சனையும் வர வாய்ப்பில்லை. வீட்டிலுள்ள போட்டோவைக் கூட ஒன்று விடாமல் அழித்தாயிற்றே என்ற நினைவோடு குழந்தையை அணைத்தபடி கண் மூடினாள் அஜந்தா.

விமலை எந்தத் தீமையும் நெருங்கி விடக் கூடாது என்பதற்காக எவ்வளவு கஷ்டத்தை, வேதனையை அனுபவித்தேன்! முன்பின் தெரியாத ஊருக்கு வந்து,

குழந்தையை வைத்துக் கொண்டு, வேலைக்கும் சென்று கொண்டு, விரும்பியவனையும் பிரிந்து, இவையெல்லா வேதனைக்கும் குழந்தை மட்டும் தானே ஆறுதல்.

யாரோ ஒரு ரவுடி கோபுவின் தகுதியற்ற ஆசையினால் அவள் வாழ்வே திசை மாறி விட்டதே!

விமலைப் பிரிந்திருப்பதே கொடுமையென்றால், அவன் கேவலமாகவும், ஏளனமாகவும் பேசுவதைக் கேட்டுக் கொண்டு இருப்பது மேலும் சித்ரவதைதான்.

உண்மையென்னவென்று அவளால் கூற முடியவில்லை. கூறினாலும் கூட அவன் நம்ப வேண்டுமே. நம்பாமல், 'இந்தக் கதையை எப்படி ரெடி பண்ணினாய்?' என்று கேட்டாலும் கேட்பான். அது வேறு எதற்கு அவமானம். அவள் தலைவிதி என்னவோ அப்படியே நடக்கட்டும் என்று விட்டுவிட வேண்டும் என்று தான் நினைத்தாள் அவள்.

ஆனால், அப்படி விட்டுவிட்டு ஒதுங்கிக் கொள்ளவும் முடியாதபடி செய்தான் விமல் பிரபு.



## 6

அலுவலகம் முடியும் சமயம் பார்த்து வேண்டுமென்றே ஏதாவது வேலை கொடுப்பது. அடுத்த நாள் ரெடி பண்ண வேண்டிய கடிதங்களை அன்றே டிக்டேட் செய்வது என்று இப்படி நிறையச் சொல்லலாம்.



எதிர்க்க முடியாமல் எல்லாவற்றையும் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துப் போனாள் அஜந்தா.

அன்றும் அப்படித்தான். மணி ஐந்தரைக்கு மேல் ஆன போதும் விடாமல் அது, இது என்று டிக்டேட் செய்து கொண்டேயிருந்தான்.

அவளின் பார்வை அடிக்கடி ஜன்னல்புறம் சென்று மீண்டு கொண்டிருந்தது. நடந்தபடியே சென்று ஜன்னலருகே நின்று வெளியே பார்த்தான் அவன். வெளி கேட் அருகே ஒரு குழந்தை தன் பிஞ்சு விரல்களால் மரத்திலிருந்து உதிர்ந்திருந்த அடர் சிவப்பு வண்ணப் பூக்களை ஒவ்வொன்றாக எடுத்து தன் சட்டைப் பாக்கெட்டில் சேகரித்துக் கொண்டிருந்தான்.

"அங்கே விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தை யாருடையது? இங்கே வேலை செய்பவரின் குழந்தையா?" என்று கேட்டான் அவன்.

"ஆமாம்" என்று மெல்லிய குரலில் கூறினாள் அவள்.

பார்வை குழந்தை மீதே நிலைத்திருக்க, "எந்த முட்டாளுக்கு இப்படிப்பட்ட அழகான குழந்தை. சற்றும் பொறுப்பில்லாமல் கேட்டிற்கு வெளியே விளையாட விட்டிருக்கிறார்கள். எத்தனை வண்டிகள், பெட்ரோல் புகை, விளையாடியபடியே ரோட்டிற்குச் சென்று விட்டால் என்னாகும். அலுவலக நேரம் முடிந்த பின்னரும் அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்லாமல், எந்த முட்டாள் இன்னும் வேலை செய்து கொண்டிருப்பது?" என்று கோபமாகக் கேட்டான் விமல் பிரபு.

"நீங்கள் டிக்டேட் செய்வதை நிறுத்திவிட்டு என்னை கிளம்பச் சொன்னால்தானே நான் போக முடியும்?" என்று திருப்பிக் கேட்டாள் அஜந்தா.

''உன்னை விடுவதற்கும் அந்தக் குழந்தை அங்கேயிருப்பதற்கும்...'' என்று ஏதோ கேட்க நினைத்தவனின் பேச்சு பாதியில் நிற்க, கண்களில் ஆயிரம் மின்னல்கள் ஒரு சேர தோன்ற, ஜன்னல்புறம் கை நீட்டி, ''அந்த... அந்தக் குழந்தை உன்னுடையதா?'' என்று நம்ப முடியாதவன் போல் வினவினான் விமல் பிரபு.

''டெல் மி!'' என்று கத்தினான் அவன்.

''ஆமாம். என் குழந்தைதான்'' என்று தெளிவாகவே கூறினாள் அஜந்தா.

''ஏய்! உன்னால்... உன்னால் எப்படி முடிந்தது? என்னை மறந்துவிட்டு, ஈஸியாக வேறு ஒருவனோடு வாழ, இப்படி ஒரு குழந்தை பெற்றுக் கொள்ள, சை! பணம் என்றால் என்ன வேண்டுமென்றாலும் செய்வாயா நீ? அப்படி அவன் உனக்கு என்ன செய்தான், செய்து விட்டான். சம்பாதித்து சாப்பிட வேண்டிய நிலையில் தானே வைத்திருக்கிறான். ஆமாம். உண்மையிலேயே அவன் பணக்காரன்தானா? இல்லை நீ என்னை நம்ப வைத்து ஏமாற்றியது போல, அவன் உன்னை ஏமாற்றி விட்டானா? உன்னை நம்பி என் வாழ்க்கை, எதிர் காலத்தையே ஒப்படைக்க நினைத்தேனே. நல்லவேளை மாட்டிக் கொள்ளவில்லை. மனிதனின் மனதை விட பணம் தானே உனக்குப் பெரிது. சொல்லு. முன்பைவிட அதிகமாகவே சம்பாதித்து வைத்திருக்கிறேன், நீ எவ்வளவு வேண்டுமென்று கேட்டாலும் தருகிறேன். எனக்கும் அந்தக் குழந்தை மாதிரி ஒன்று வேண்டும் தர முடியுமா உன்னால்?'' என்று அவள் தோளைப் பற்றி உலுக்கிக் கேட்டான் விமல் பிரபு.



'ஷட் அப் விமல்' என்று கத்தினாள் அஜந்தா. ''நான் ஒரு குழந்தையின் அம்மா. என்னிடம் இப்படி அத்து மீறி அநாகரீகமாகப் பேசுவதற்கு உங்களுக்கு அசிங்கமாக இல்லை? சை! உங்களின் இன்னொரு முகத்தைப் பற்றி எனக்கு இப்போது தானே தெரிகிறது. உங்களையெல்லாம் காதலித்ததோடு விட்டு விட்டு வந்திருக்கக் கூடாது, ஊரெல்லாம் தெரிய திருமணம் செய்து கொண்டு அதன் பிறகு வந்திருந்தால் இன்னும் கேவலமாக இருந்திருக்கும்'' என்று ஆத்திரத்தோடு கூறி விட்டாள் அஜந்தா.

''அப்படி மட்டும் ஏதாவது செய்திருந்தாயென்றால், உன்னை...'' என்றவன், ''சரி விடு. நடக்காத ஒன்றைப் பற்றி பேசுவதே வீண் வேலை. அட்லீஸ்ட் கடைசி வரை அந்தக் குழந்தைக்காவது நல்ல தாயாக இரு. அதையும் பாதியிலேயே விட்டு விடாதே. நீ போகலாம்'' என்று கூறி முகத்தை வெளிப்புறம் திருப்பிக் கொண்டான் விமல் பிரபு.

அஜந்தாவைக் கண்டதும் ஓடிவந்து அவள் காலைக் கட்டிக் கொண்ட குழந்தையை குனிந்து தூக்கினாள் அவள். தன் பாக்கெட்டில் வைத்திருந்த பூக்களையெல்லாம் எடுத்து கொஞ்சம், கொஞ்சமாக அவள் தலையில் போட்டுவிட்டுச் சிரித்தான் பிள்ளை.

தன் அறையிலிருந்தபடியே இதைப் பார்த்துக் கொண்டிருந்த விமல் பிரபுவிற்கு சொல்ல முடியாத ஏதோ ஒரு உணர்வு உண்டானது. ஒரு கணம் உடம்பெல்லாம் இரும்பென இறுகியது என்றே சொல்லலாம்.

மறு வாரத்தில் ஒரு நாளில் பணியாளர்களையெல்லாம் 'கான்பரன்ஸ்' ஹாலில் கூடச் சொல்லி விமல் பிரபுவிடமிருந்து தகவல் வந்தது.

கம்பெனியை அவன் வாங்கிய பிறகு கூடும் முதல் கூட்டம். எல்லோரும் ஒருவித உணர்வோடு ஏதேதோ நினைத்தபடி இருந்தார்கள் - ஒருத்தியைத்தவிர.

''அனைவருக்கும் கேண்டீன் டோக்கன் மேலும் நானூறு ரூபாயும், வீட்டு வாடகைப் படியாக ஐநூறு ரூபாயும் வழங்கப்படும்'' என்று அவன் சொல்லி முடிக்கும் முன்பாகவே உற்சாக கைத்தட்டல் எழுந்தது.

''நேரம் தவறாமை எனக்கு மிக முக்கியம். அன்றைய வேலை அன்றே முடிந்தாக வேண்டும். இனி மாதத்தின் கடைசி நாளிலேயே சம்பளம் வழங்கப்பட்டு விடும். முன்பு போல ஐந்தாம் தேதி வரை காத்திருக்கத் தேவையில்லை நீங்கள். உங்களிடம் நான் எதிர்பார்ப்பதெல்லாம் உண்மையான உழைப்பு. நேர்மை தான். தென், ஒரே ஒரு மாற்றம் மட்டும். தமிழ்நாட்டிற்கு அனுப்பும் சரக்கிற்கு பொறுப்பு வகிப்பவர்களை அங்கேயும், அங்கேயிருப்பவர்களை இங்கேயும் வரவழைக்கப்போகிறேன்'' என்று அவன் கூறியதும் இரண்டு தலைகள் மட்டும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டது.

''இனி இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கான்பரன்ஸ் நடக்கும். உங்களுக்கு ஏதேனும் தேவையென்றால் அப்போது தெரிவிக்கலாம்'' என்று பேச்சை முடித்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றான் விமல்.

''மிஸ்டர் தீபக் அண்ட் பிரமேஷ். இருவரும் இந்த கம்பெனியில் சேர்ந்து மூன்றாண்டுகள் தானே ஆகிறது?'' என்று வினவினான் விமல்.

''ஆமாம் சார்'' என்றார்கள் எதிரே நின்றிருந்த இருவரும்.



''ஏன் நிற்கிறீர்கள். எனக்கு யாரையும் நிற்க வைத்துப் பேசுவது பிடிப்பதில்லை. வெட்டி பந்தா வேண்டாமென்று நினைப்பதால் ப்ளீஸ் பி ஸிட்டட்'' என்றான் விமல் பிரபு.

இருவரும் அமர்ந்தார்கள்.

''கம்பெனிக்குள் நுழைந்த மூன்றேயாண்டுகளில், அதன் வீழ்ச்சிக்கு நீங்களும் காரணம் என்று நான் சொல்கிறேன். சரிதானா?'' என்று கேட்டு மற்ற இருவரையும் அதிர வைத்தான் அவன்.

''இங்கேயிருந்து போகும் நல்ல இரும்பிற்கு பதிலாக தரமில்லாத இரும்பை மாற்றி அனுப்ப நீங்களும் உடந்தை. நோ. நோ. மறுக்க முயற்சிக்க வேண்டாம். என்னிடம் ஆதாரமிருக்கிறது. மற்ற ஸ்டேட்டிற்கு அனுப்பியதெல்லாம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை இனித்தான் பார்க்க வேண்டும்.''

''எவ்... வளவு பெரிய தப்பு தெரியுமா? மாட்டியிருந்தீர்கள் என்றால் எத்தனை வருடம் கம்பி எண்ணியிருப்பீர்கள் என்றாவது நினைத்துப் பார்த்தீர்களா?'' என்று அவன் கேட்டபோது, மற்ற இருவரும் கைக்கூப்பியபடி எழுந்து நின்றார்கள்.

''ப்ளீஸ் சார். தயவு செய்து போலீஸிடம் தெரிவித்து விடாதீர்கள் சார். அப்படியேதும் நடந்து விட்டால் வீட்டில் இருப்பவர்கள் தற்கொலையே செய்து கொள்வார்கள் சார்'' என்று கெஞ்சினார்கள்.

''ஏன் இப்படிச் செய்தீர்கள்? அப்படி என்ன தேவையேற்பட்டது. அல்லது தப்பான வழியிலாவது சம்பாதிக்க வேண்டும் எனும் அளவு பணத்தாசையா?'' என்று கேட்டான் விமல் பிரபு.

''சார். அ.. அது வந்து. என் அக்காவிற்கு ரொம்ப வருடமாக திருமணம் செய்ய முடியாமல் இருந்தது. அப்பா இல்லை. அக்காதான் குடும்பத்தையே காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள். திருமணச் செலவு, வரதட்சணை என்று நிறைய செலவாகும் என்பதால் என் அக்கா திருமணமே வேண்டாமென்றார்கள். அவர்களுக்கு ஒரு நல்லது நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் சார் இப்படியொரு தப்பைச் செய்து விட்டேன்'' என்றான் ஒருவன்.

''உங்களுக்கு என்ன காரணம் தீபக்?'' என்று மற்றவனிடம் வினவினான் விமல்.

''இவன் அக்காவிற்கு திருமணம் நடக்க வேண்டும் என்பதற்காக இப்படி ஐடியா கொடுத்ததே நான் தான் சார். ஒரு முறை காலேஜ் ஃபீஸ் கட்ட முடியாமல் நான் கஷ்டப்பட்டபோது அவர்களின் தோட்டை அடகு வைத்து எனக்கு பணம் தந்து, ''நம்மைப் போன்றவர்களுக்கெல்லாம் படிப்புதான் கண்கள் மாதிரி. நன்றாக படித்து முன்னுக்கு வா'' என்றார்கள். அந்த நல்ல உள்ளத்திற்காகத்தான் இவ்வளவு பெரிய தப்பைச் செய்து விட்டோம் சார்'' என்றான் தீபக்.

வியப்போடு புருவம் உயர்த்தி, ''உங்கள் நட்பைப் பாராட்டத்தான் வேண்டும். கூடவே நீங்கள் செய்தது ரொம்ப பெரிய தப்புதான் என்றபோதும் அதிலிருந்த ஒரு நல்ல விஷயத்திற்காக மன்னித்து விடுகிறேன். ஆனால் இதன் விளைவு எவ்வளவு பெரிய பயங்கர நிலையை உண்டாக்கியிருக்கும் தெரியுமா? கம்பெனியை நடத்த முடியாத நிலையில் மூடியிருந்தாலோ அல்லது, வேறு யாரேனும் வாங்கி ஆட்குறைப்பு என்ற பெயரில் பாதிப் பேரை வெளியேற்றி இருந்தாலோ அவர்களின் குடும்பங்கள் எவ்வளவு கஷ்டப்படும் என்பதைப்பற்றி யோசித்



தீர்களா?' உங்களுக்கு கொஞ்சமாக கமிஷன் கொடுத்துவிட்டு இரும்பை மாற்றியவர்கள் எவ்வளவு லாபமடைந்திருப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்று வினவினான் விமல்.

மறுத்து தலையாட்டினார்கள் இருவரும்.

''ஓ.கே. அதைப்பற்றி உங்களுக்குத் தெரியாதிருப்பது நல்லது. இது போன்ற வேலைகளை இன்னும் யார் யார் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை விரைவிலேயே கண்டு பிடித்து அழித்து விடுவேன். இந்தக் கம்பெனியைச் சற்று அதிக விலை கொடுத்து நான் வாங்கியிருப்பதால் நீங்கள் உண்மையாகவும், கடுமையாகவும் உழைக்க வேண்டும். புரிந்ததா?'' என்று கூறி முடித்தான் விமல் பிரபு.

''புரிந்தது சார்'' என்றார்கள் இருவரும்.

''என்னைப் பார்க்கும் போதெல்லாம் உங்களுக்கும் ஒரு மாதிரி சங்கடமாக இருக்கும். அதனால் நீங்கள் தமிழ்நாட்டிற்குச் செல்லுங்கள். இந்த மாற்றமே உங்களை நல்ல நிலைக்கு கொண்டு போகும்'' என்று கூறி அவர்களை அனுப்பினான் விமல் பிரபு.

# 7



''என்ன திடீரென்று அந்த இரண்டு பேருக்கும் தீர்ப்பு மாற்றப்பட்டு வேறு ஊருக்கு அனுப்புகிறீர்கள். தப்பு

செய்தவர்களை உண்டு இல்லையென்று செய்வது தானே உங்களின் இப்போதைய இயல்பு. அப்படிப் பார்த்தால் அவர்கள் இன்னேரம் ஜெயில் கம்பியினுள் அல்லவா இருக்க வேண்டும்?'' என்று வியப்போடு கேட்டாள் அஜந்தா.

''அது அவரவர் செய்த தப்பைப் பொறுத்து எடுக்கும் முடிவு. ஒரு தப்பு செய்து விட்டதாலேயே அவன் கெட்டவன் என்று முத்திரை குத்துவது எனக்கு விருப்பமில்லாத ஒன்று. திருந்த ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பார்ப்பதில் தப்பில்லை. ஏன் தெரியுமா? தப்போ, தவறோ செய்யப் பெரும்பாலும் சந்தர்ப்பமும், சூழ்நிலையும் தான் காரணமாகி விடுகிறது என்று நான் நினைக்கிறேன். உதாரணத்திற்கு நம் இருவரையுமே எடுத்துக் கொள்ளலாமே.

''முன்பெல்லாம் நாம் இருவரும் அனாவசியமான வார்த்தைகளைப் பயன்படுத்தி இப்படி சண்டை போட்டதுண்டா? இல்லையே!'' என்று தோள் குலுக்கியவன்,

''நீ செய்த தப்பிற்கு நான் உன்னைக் கடுமையாகப் பேசி விடுகிறேன், உனக்கு உண்மை சுடுகிறது. உடனே திருப்பி என்னைப் பேசுகிறாய்'' என்று பிரமாதமாக விளக்கினான் அவன்.

வாயை மூடிக் கொண்டு பேசாமலேயே இருந்திருக்கலாம் என்று தோன்றியது அவளுக்கு.

''என்ன மௌனமாகி விட்டாய்?'' என்றவன், ''ஆமாம் உண்மையிலேயே உன் கணவன் எங்கே? என்ன செய்து கொண்டிருக்கிறான்?'' என்று வெகு உதாசீனமான குரலில் கேட்டான் அவன்.



''கொஞ்சம் மரியாதையோடு பேசுகிறீர்களா?'' என்று முறைப்போடு கோபமாகக் கூறினாள் அவள்.

''தோ..டா! பதிவிரதப் பெண்ணுக்கு அவன், இவன் என்றால் கோபம் வருகிறது! சரி.. உன் கணவர் எங்கேயிருக்கிறார்? என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று சொல்கிறாயா?'' என்று கேட்டான் அவன்.

''அ... அவர்'' என்று திணறினாள் அஜந்தா.

இவன் எதற்கு திடீரென்று கேட்கிறான் என்று யோசித்தாள் அவள்.

''என்ன யோசனை? ஒருவேளை எந்த 'அவரை'ச் சொல்வதென்று குழப்பமாக உள்ளதோ? அப்படியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை தானே?'' என்று நக்கலாகக் கேட்டான் அவன்.

''எனக்கும் இதைவிட அதிகமாகவே பேசத் தெரியும்?'' என்றாள் ஆத்திரமாக.

''அதிகமாகவா. அப்படி என்னம்மா பேசுவாய்?'' என்று ஏளனமாகக் கேட்டான் அவன்.

''உங்களுக்கு பொறாமை. உங்களை விட்டுவிட்டு நான் வேறொருவரை பெரிதாக நினைத்துச் சென்று விட்டதால் தான் உங்களுக்கு கோபம். ஆத்திரம் எல்லாமே'' என்று திருப்பியடித்தாள் அவள்.

''பொறாமையா? எனக்கா!'' என்று கேட்டு தன் வெண் பற்கள் மின்னலடிக்க புன்னகைத்தவனை உள்ளூர திகைப்போடு பார்த்தபடி நின்றாள் அவள். ''ஹலோ! என்ன அப்படியே திகைத்து விட்டாய். முன்பும் கூட அடிக்கடி இப்படித்தானே சுற்றுப்புறத்தைக் கூட மறந்து நிற்பாய்? நன்றாகக் கேட்டுக் கொள். எனக்கு யார் மீதும்

பொறாமையுமில்லை. அதற்கு அவசியமும் இல்லை. ஓ.கே. இப்போது சொல் உன் கணவர் எங்கேயிருக்கிறார்?'' என்று மீண்டும் பழைய கேள்விக்கே வந்து நின்றான் அவன்.

சை! இவன் முன்னே இப்படிப் பட்டிக்காட்டுப் பெண் மாதிரி 'பே' என்று பார்த்துக் கொண்டு நிற்க வேண்டுமா? என்று தன்னையே நொந்து கொண்டவள் அப்போது வாயில் வந்த வார்த்தையாக, ''அ... அவர் ஆஸ்திரேலியாவில் இருக்கிறார்'' என்று கூறிவிட்டு வேகமாக மூச்சு வாங்கினாள் அஜந்தா.

சற்று திகைத்தவன் உடனே, ''ஆஸ்திரேலியாவிலா? பார்க்க எப்படியிருப்பார்? கங்காரு மாதிரியா?'' என்று சீரியசான குரலில் கேட்டான் விமல்.

அடுத்து என்ன கேட்கப் போகிறானோ? என்னவென்று பதிலளிப்பது என்று திணறிக் கொண்டிருந்தவளுக்கு அவன் கேள்வி சிரிப்பை வரவழைத்து விட கட்டுப் படுத்திக் கொண்டு, கோபமாக முகத்தை மாற்றிக் கொண்டு தன்னிடத்திற்குச் சென்று விட்டாள் அவள்.

''என்ன மேடம். எதுவும் பேசாமல் வந்து விட்டீர்கள். ஒருவேளை உண்மையிலேயே நான் சொன்னது போல கங்காரு மாதிரிதான் இருப்பாரோ? இல்லையே நீ பிரமாதமான ரசனைக்காரியாயிற்றே! அப்படியிருக்கவும் வாய்ப்பில்லை. சொல்ல மாட்டாயா? சரி விடு. உன் பிள்ளையிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்'' என்று சாதாரணமாகக் கூறினான் விமல்.

குப்பென்று வியர்த்து விட்டது அவளுக்கு.

''என் பிள்ளையிடம் நீங்கள் எதற்காகப் பேச வேண்டும்?'' என்று தலையை நிமிர்த்தி மிடுக்குடன் கேட்ட



போதும் உள்ளூர, 'கடவுளே! 'அபி'யும் இவனும் நேரடியாக பார்த்து விட்டால் வேறு வினையே வேண்டாம். அப்படி மட்டும் நடக்க விட்டு விடக் கூடாது. அபியை இனி ஸ்கூலிலேயே இருக்கச் சொல்லிவிட்டு, அப்படியே வீட்டிற்கு அழைத்துப் போய் விட வேண்டியதுதான்' என்று நினைத்தாள் அஜந்தா.

''காரணம் தெரியவில்லை. ஏனோ பேச வேண்டும் போல் தோன்றுகிறது அவ்வளவுதான்'' என்று கூறினான் விமல்.

''நீங்கள் ஒன்றும் பேச வேண்டியதில்லை. என் கணவருக்கு இதெல்லாம் பிடிக்காது'' என்று உடனே மறுத்தாள் அவள்.

''அடேயப்பா! கணவன் சொல் தட்டாத மனைவியா? உன் புருஷன் உன்னை 'இப்..படி' வைத்திருக்கும்போதே இந்தளவு மரியாதை தருகிறாயே இன்னும் உனக்குச் செய்ய வேண்டியதெல்லாம் ஒழுங்காகச் செய்து விட்டான் என்றால் உன்னைக் கையிலேயே பிடிக்க முடியாது போலிருக்கிறதே?!'' என்று சற்று அதிகமாகவே வியந்தான் விமல் பிரபு.

இவன் எதைப்பற்றிச் சொல்கிறான்? என்று திகைத்தாள் அஜந்தா.

''என்ன அப்படி விழிக்கிறாய்? உனக்கு உன் கணவன் பணமே தருவதில்லை என்கிறேன். சரியா?'' என்று கேட்டு மீண்டும் அவளைத் திகைக்க வைத்தான் அவன்.

''இப்படியொரு பொய்யை யார் சொன்னது?'' என்று கேட்டாள் அவள்.

''பொய்யா? என்று சிரித்தவன், இரண்டு நாளைக்கு முன்பாக, சரியாகச் சொன்னால் 'கான்பரன்ஸ்' நடந்ததற்கு

முன் தினம், மாலை வேளையில் நீயும் உன் குழந்தையும் கடைத்தெருவில் சென்று கொண்டிருந்தபோது, உன் குழந்தை ஒரு ரிமோட் காரைக்காட்டி வேண்டுமென்று கேட்டபோது, வேண்டாம் என்று மறுத்துவிட்டு ஒரு சாதாரண பத்து ரூபாய் பொம்மையை வாங்கிக் கொடுத்தாயே நினைவிருக்கிறதா? தற்செயலாகத்தான் உங்களைப் பார்க்க நேர்ந்தது. உன்னிடம் தேவைக்குப் போக சில நூறுகள் கூட கையில் இல்லையென்பதற்கு வேறு சான்று வேண்டுமா என்ன? அல்லது உன் புருஷன் கட்டுக் கட்டாக அனுப்பும் பணத்தை செலவு செய்ய மனமில்லாமல், பீரோவில் அடுக்கி வைத்திருப்பதாகச் சொல்லப் போகிறாயா?'' என்று கேட்டான் விமல் பிரபு.

அன்று பார்த்து இவன் கண்ணிலா நாங்கள் பட வேண்டும் என்றெண்ணியவளுக்கு முகம் சிவந்து போனது.

''இப்போது தான் கம்பெனியில் அலவன்ஸ் தரப்போகிறேனே. இனியாவது உன் பிள்ளை கேட்பதில் நாலில் ஒன்றையாவது வாங்கிக் கொடு'' என்று ஒரு மாதிரிக் குரலில் கூறிச் சென்றான் அவன்.

இந்த அலவன்ஸ் விஷயத்தில், ஏதோ உள்நோக்கம் இருக்கும் போலிருக்கிறதே என்று அன்றே தோன்றிய சந்தேகம், இன்று சரியாகி விட்டது அவளுக்கு.

மாலை நான்கு மணிக்கெல்லாம் வந்துவிடும் குழந்தையை மறுநாளெல்லாம் காணவில்லை!

''உன் குழந்தையின் பெயர் – 'அபி'தானே. இன்று ஸ்கூலுக்கு வரவில்லையா?'' என்று கேட்டான் அவன்.

''நான்'' உன்னிடம்தான் கேட்டுக் கொண்டிருக்கிறேன் அஜந்தா'' என்றான் கோபமான குரலில்.



''என் சொந்த விஷயத்தைப் பற்றி எதுவும் பேச நான் தயாராக இல்லை.'' என்று தெளிவாகக் கூறினாள் அவள்.

''உன் குழந்தையை நான் பார்ப்பது கூடவா உனக்குப் பிடிக்கவில்லை?'' என்று கேட்டவன், ஐந்தரை மணிக்கே அவளையும் அனுப்பி விட்டான்.

புவனேஷ்வருக்குச் சற்று தொலைவிலேயே வீடு கட்ட முடிவெடுத்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பு முழுவதையும் கட்டட நிறுவனத்திடமே ஒப்படைத்தான் விமல் பிரபு.

இடையில் ஒரு தடவை மட்டும் தமிழ்நாடு சென்று இரு வாரங்கள் கழித்து திரும்பி வந்தான்.

மறுநாள் என்னென்ன செய்ய வேண்டும் என்று குறிப்பெடுத்து வைத்துவிட்டு, மேசை மீதிருந்த பொருட்களையெல்லாம் சரியாக அடுக்கி முடித்தபோது அவள் எதிரே வந்து நின்றான் விமல் பிரபு.

அவனைக் கண்டதும் சிரிக்கத் தொடங்கியிருந்த முகத்தைக் கஷ்டப்பட்டுதான் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தாள் அஜந்தா.

அவளை ஏற இறங்கப் பார்த்தவனின் கண்கள் இறுதியாக முகத்தில் நிலைக்க ஏதோ சொல்ல நினைத்தவன் அதை விட்டு, ''எனக்கு ஒரு கப் பிளாக் காபி வேண்டும். உடனே'' என கூறிச் சென்றான்.

மழை வரும் அறிவிப்பாக மேகம் இருட்டிக் கொண்டிருந்தது. காபியோடு அவனறைக்குள் சென்றவள் அவன் நிலையைக் கண்டு உள்ளூர திகைத்தாள்.

எலுமிச்ச மஞ்சள் வண்ணச் சட்டையின் கழுத்து பட்டனில் இரண்டை கழற்றி விட்டு, இரண்டு

கைகளையும் தலைக்குப் பின்புறமாக மடக்கி வைத்துக் கொண்டு சுழல் நாற்காலியில் கண் மூடி அமர்ந்திருந்தான் விமல் பிரபு.

கல் மாதிரி இறுகியிருந்த அவனுடைய முகம் அவன் வயதை பத்தாண்டுகள் கூட்டிக்காட்ட, எப்போதும் கண்களில் இளநகை பொங்கிக் கொண்டிருந்த பழைய விபுவின் நினைவுகள் கேளாமலேயே நினைவிற்கு வந்து, அவள் உள்ளத்தோடு உடலையும் வலிக்க வைத்தது!

கூடி வாழ நல்ல துணையைத் தேடிக் கொண்டு, குதூகலமாக வாழ வேண்டிய வயதில் இவன் ஏன் இப்படியிருக்கிறான். அவளைத் தவிர வேறு பெண்களே இல்லையா? என்ன!

கப்பை கண்ணாடி டேபிள் மீது வைத்துவிட்டு அவனருகே சென்றாள் அஜந்தா.

அவளையும் மீறி அவன் முகம் நோக்கி நீண்டது அவளின் மெல்லிய கரம்.

அதே சமயத்தில் அவனுடைய கைகளிரண்டும் சேரிலிருந்து சரிந்து கீழே வர, திடுக்கிட்டு பின்னோக்கி நகர முயன்றாள் அவள். வியர்த்ததாலோ என்னவோ, வழவழவென்றிருந்த தரை அவள் செருப்பை 'சர்'ரென்று இழுத்து விட்டு விட்டது. வெகுவாக 'பாலன்ஸ்' பண்ண முயன்றும் தோற்றவளாக, தன் நிலையிழந்து தடுமாறியவள், கண் மூடி அமர்ந்திருந்த விமல் பிரபுவின் மீதே 'தொப்'பென்று விழுந்து விட்டாள்.





## 8

ஒரே ஒரு கணநேரம் தான் என்றாலும் இருவரின் முகமும் ஒட்டிக் கொண்டது உண்மையே. ஆனால் உடனே அவளைத் தன் மீதிருந்து மெல்ல விலக்கிட முற்பட்டான் விமல் பிரபு.

இதயத் துடிப்பைவிட வேகமாக அவனிடமிருந்து விலகினாள் அஜந்தா. அவனோடு ஏற்பட்ட ஸ்பரிசம் அவளை வேதனைப்படுத்தியது. எல்லாவற்றையும் மீறி, அவன் மீது விழுந்தவளை அவனுடைய வலிய கரம் தன்னையுமறியாமலே இறுக்கி விட, அந்த ஒரு நொடியில், தான் எப்...படிப்பட்ட சொர்க்கத்தை இழந்திருக்கிறோம் என்பதை உணர்ந்தவளுக்கு, 'ஓ'வென்று கதறி அழ வேண்டும் போல் தோன்றிய உணர்வைக் கட்டுப்படுத்துவது சிரமமாக இருந்தது.

அவள் உடல் நடுங்க துடிப்பதைப் பார்த்தபோது தான், எவ்...வளவு பெரிய தவறு செய்து விட்டோம் என்பதே புரிந்தது அவனுக்கு.

சை! நானா இப்படிச் செய்து விட்டேன். ஒரு குழந்தையின் தாயை... என் மனதினுள் சைத்தான் ஏதும் புகுந்து விட்டதா? இல்லை நான்தான் மிருகமாகி விட்டேனா? கடவுளே! அஜந்தாவின் மனம் என்ன பாடுபடும்!

''சா... சா...ரி அஜந்தா. ரியலி சாரி. நான் இப்படிச் செய் திருக்கக் கூடாது. என்னை மீறி... ரொம்ப சாரிம்மா'' என்று அவமானத்தோடு தடுமாறினான் விமல் பிரபு.

வேதனை தொண்டையை இறுக்கிப் பிடிக்க அவள் நின்று கொண்டிருந்தபோது பெருமழை கொட்ட ஆரம்பித்து விட்டது. எதையெல்லாமோ நினைத்தவளின் கண்கள் கலங்கிவிட, அதைக் காண முடியாமல் சட் டென்று ஜன்னல் புறம் திரும்பியவன், ''அஜி அங்கே வருவது அபி தானே?'' என்றான் வேகமாக.

அந்தக் கணம் அவளுடைய மற்ற உணர்வுகள் எல்லாம் பின்னுக்குத் தள்ளி விடப்பட வேகமாக வந்து ஜன்னல் வழியே பார்த்துவிட்டு, கைப்பையை எடுத்துக் கொண்டு அவ்விடம் விட்டு வெளியே வந்தாள்.

பலரும் மழை விடட்டும் என்று காத்திருந்தபோது, குழந்தையைத் தூக்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள் அஜந்தா.

அடுத்த இரண்டு நாட்களுக்கு அவளிடமிருந்து விடுப்பு கடிதம் மட்டும் வந்தது. அவள் முகவரி தெரிந்த போதும், அவளை நேரில் பார்த்துப் பேசுமளவு உறுதி யில்லாததால் பேசாதிருந்து விட்டான் விமல்.

அன்று குழந்தையை குளிக்க வைத்துவிட்டு, சேறு சகதி போக தானும் குளித்தவளுக்கு ஏனோ அடக்க மாட்டாத அழுகை வரவும் ஒரு மூச்சு அழுது தீர்த்தாள். மனம் சற்று லேசாக வெளியே வந்தபோது, நனைந்த புத்தகங்களை வெளியே எடுத்து விரித்து வைத்துக் கொண்டிருந்தான் பிள்ளை.

ஜலதோஷம் பிடிக்காமல் இருக்க அபிக்கு டானிக் கொடுத்து குடிக்க வைத்துக் கொண்டிருந்தபோது 'பவர்' கட்டானது.



''அச்சோ! இந்த கரன்ட்டோட தொல்லை'' என்று சலித்து விட்டு, ''அம்மா கேண்டிலை நான் பற்ற வைக் கிறேன்'' என்று கூறி எழுந்தான் அபி.

''பார்த்துப் பற்ற வைம்மா. சுட்டுக் கொள்ளாதே'' என்று எச்சரிக்கைச் செய்து விட்டு ''உனக்குச் சாப்பிட என்ன செய்யட்டும்?'' என்று கேட்டாள் அஜந்தா.

''காய் சப்பாத்தி ரோல்மா'' என்று கூறியபடியே வந்து தாயின் சேலையைப் பிடித்துக் கொண்டு நின்றான் அபி.

கேரட், பீன்ஸ், பீட்ரூட் போன்ற காய்களைத் துருவி வாணலியில் சற்று நேரம் வேகவிட்டு, சப்பாத்தி மாவு பிசையும்போது அதனுடன் இந்த வகைகளையும் சேர்த்து செய்வது தான் காய் சப்பாத்தி. அபிக்கு பிடித்த உணவு வகையும் கூட.

உணவு முடிந்து பாத்திரங்களை ஒதுக்கி விட்டு தூங்க ஆரம்பித்தாள் அவள்.

''ம்மா. தூங்கிட்டீங்களாம்மா?'' என்று சின்ன சிரிப் புடன் முகம் திருப்பி வினவினான் அபி.

அவனுடைய ரசிக்க வைக்கும் குறும்பில் இதுவும் ஒன்று. தூங்கவில்லை என்று தெரிந்தும் வேண்டு மென்றே கேட்பான்.

''இல்லைடா'' என்று முறுவலோடு பதிலளித்தாள் அஜந்தா.

''எனக்கு ஒரு கதை சொல்லுங்களேன்'' என்று கேட்டான் அபி.

''அம்மாவிற்கு தலைவலி அபிம்மா. நாளைக்குச் சொல்கிறேனே.'' என்றாள் அவள்.

''ரொம்ப வலிக்குதாமா?'' என கேட்டு நெற்றியில் கை வைத்து தடவி விட்டவன், ''ஏம்மா அழறீங்க?'' என்று மெல்லிய குரலில் விசாரித்தான்.

''ஒ... ஒண்ணுமில்ல. கண்களில் தூசி விழுந்திடுச்சு'' என்று கம்மிய குரலில் கூறிவிட்டு பிள்ளையின் முதுகில் தட்டிக் கொடுத்தாள் அஜந்தா.

''நம்ம அப்பா, நல்ல அப்பாவா? இல்லையாம்மா?'' என்று கேட்டு தாயின் முகத்தைப் பார்த்தான் அபி.

''ஏண்டா கண்ணா இப்படிக் கேட்கிறாய்?'' என்று திடுக்கிட்டு கேட்டாள்.

''எல்லார் அப்பாவும் அவங்க வீட்டில்தானேம்மா இருக் கிறாங்க. நம்ம அப்பா ஏம்மா இன்னும் வரலை. தனியா ஏம்மா விட்டுப் போனாங்க. எப்போம்மா வருவாங்க?'' என்று அழுகையினூடே கேட்டான் அபி.

மகனை வாரி அணைத்தவள், ''அப்பாவிற்கு லீவ் கிடைத்தவுடனே வருவார்டாம்மா. நீ கேட்பதை யெல்லாம் வாங்கித் தருவார். அப்பா ரொம்ப நல்லவர் அபி'' என்றபோது அவளுக்குக் குரல் உடைந்தது. பிள்ளையின் முன்பாக அழக்கூடாதென்று கட்டுப்படுத் திக் கொண்டாள் அஜந்தா.

இரண்டு நாட்கள் கழித்து அலுவலகம் சென்றபோது, ''என்ன அஜிம்மா உடல்நிலை சரியில்லையா?'' என்று குரலில் அக்கறையோடு அவன் விசாரித்தபோது, அழுகையை விட ஆத்திரம் தான் அதிகமாக வந்தது.

இது மாதிரி அவன் அக்கறையோடு பேசும் சமயத்தில் தான், நாம் எப்படிப்பட்ட வாழ்வை இழந்திருக்கிறோம் என்ற நினைவு அவளை ரொம்...பவே வேதனைப்படுத்தியது.



''தயவு செய்து இனிமேல் என்னை அஜி என்று அழைக் காதீர்கள். எனக்குப் பிடிக்கவில்லை'' என பட்டென்று கூறினாள்.

''என்ன பழசெல்லாம் மறந்து போயிற்று. நம் இருவர் பெயரையுமே இரண்டெழுத்தாக சுருக்கியது நானல்ல, நீ தான்'' என்றான் ஆத்திரமாக.

''அ... அது அப்போது. முடிந்து போன விஷயத்தைப் பற்றி பேசுவதில் பயனில்லை. இனி நடக்க வேண் டியதை மட்டும் நினையுங்கள். அது தான் எல்லோருக் குமே நல்லது'' என்றாள் அவள்.

''உன்னால்... உன்னால் எப்படி என்னை மறக்க முடிந்தது. முடிகிறது? நீ என்னைத் தூக்கியெறிந்த மாதிரி, என்னால் நினைக்க முடியவில்லையே. நீ வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையை உண்மையென்று நம்ப முடியாமல், எல்லாமே ஏதோ கனவு மாதிரி... ஆனால் எல்லாம் நிஜம்'' என்று சற்று நிறுத்தியவன் ஒரு பெருமூச் சோடு, ''எதற்குமே ஒரு அதிர்ஷ்டம் வேண்டும். இனி உன் விஷயத்தில் நான் தலையிட மாட்டேன் அஜந்தா. அன்று... அன்று என்னையும் மீறி நான் அப்படி நடந்து கொண்டேன், உன் மனம் எப்படி வேதனைப்பட்டிருக்கும் என்பதைப் பிறகு தான் புரிந்து கொண்டேன். என் மீதே எனக்கு வெறுப்பாக இருக்கிறது. எக்ஸ்ட்ரீம்லி சாரி அஜந்தா. இன்னும் கொஞ்ச நாள் சகித்துக் கொள். இங்கே சரி செய்யப்பட வேண்டிய வேலை நிறைய இருக்கிறது அதெல்லாம் முடிந்து விட்டால் சென்னைக்கே சென்று விடுவேன்'' என்றான் உறுதியாக.

பழைய விமல் பிரபுவாக நிதானமாகப் பேசியவனைப் பார்த்து உள்ளம் பூரிப்போடு அமைதியானது அவளுக்கு.

மனதில் இருந்த எல்லா வேதனைகளையும் மீறி, அவள் முகம் முறுவலித்தது.

சட்டென்று வேறு பக்கமாக பார்வையைத் திருப்பிக் கொண்டான் விமல் பிரபு.

அதன் பிறகு புதிதாக எந்த வேதனையும் உண்டாக வில்லை இருவரிடையேயும்.

அவன் அலுவலகத்தில் இருக்கும் நேரமே குறைந்து போனது.

நாட்கள் மந்தமாகச் சென்று கொண்டிருந்தபோது, விமல் பிரபுவின் வீட்டு வேலைகள் முடிந்து, தோட் டத்தை எப்படி அமைப்பது என்று கேட்டுப்போக ஒருவர் வந்தார்.

"இப்போதைக்கு எனக்கு எந்த ஐடியாவும் இல்லை சார். நான் ஒரு நர்சரி அட்ரஸ் தருகிறேன். நான் அவர் களிடம் பேசிவிட்டு உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நீங்கள் அங்கிருந்து ரோஜா செடிகளை மட்டும் வாங்கி வையுங்கள். மற்றவற்றை பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறினான் விமல் பிரபு.

அடுத்த இரண்டாவது நாள் விமல பிரபுவைப் பார்க்க வென்று ஒரு அழகிய பெண் வந்தாள்.

அவள் பெயர் - பூஜா. மிஸ்டர் ஜெ.பி.யின் சகோதரர் மகள்.

டைட் பிளாக் ஜீன்ஸ். சேன்டில் கலர் ஸ்லீவ் லெஸ் டாப்ஸ்.

ஹை ஹீல்ஸ் செப்பல். தோளில் துள்ளி விளையாடிய கருங்கூந்தல்.



'பளிச்'சென்ற புன்னகையோடு பார்க்க மிக அழகாகவே இருந்தாள்.

"ஹலோ மிஸ்டர் பிரபு. ஐ ஆம் பூஜா" என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவள், "உங்களுக்கு என் னென்ன வகைச் செடிகள் வேண்டும், எவ்வளவு தேவைப் படும்?" என்று விசாரித்தாள் பூஜா.

"ரோஜாவில் எத்தனை வகை, நிறமிருக்கிறதோ அதை மட்டும் அனுப்புங்கள் பூஜா" என்றான் விமல்.

"நீங்கள் கட்டியிருக்கும் வீடு ரொம்ப பெரியது என்று என் பெரியப்பா சொன்னாரே! அதற்கு வெறும் ரோஜா செடிகள் மட்டும் போதுமா? இன்னும் நல்லதாக எவ்.. வளவோ செடிகள்..." என்றவளின் பேச்சு பாதியில் நிற்க, கண்களை இமைக்க மறந்து நோக்கியவள், "வாவ்! சாதாரண காட்டன் சேலையில் கூட இவ்...வளவு அழகாக இருக்க முடியுமா?" என்று கண்கள் விரிய வியந்தாள் பூஜா.

'ஸீ புளூ' நிற காட்டன் சேலையில் 'பிங்க்' நிற ஜரிகை யோடிய சேலை உடுத்தியிருந்தாள் அஜந்தா.

மெல்லிய முறுவலோடு குளிர் பானத்தை பூஜாவிடம் கொடுத்தாள் அஜந்தா. அப்போது மற்றவளின் கண்கள் மேலும் விரிய, "நீங்கள் தானே அஜந்தா?" என்று கேட்டவள், "உங்களைப் பற்றி பெரியப்பா சொல்லியிருக் கிறார். ஆனால் நீங்கள் இவ்...வளவு அழகாக இருப்பீர்கள் என்று நான் நினைக்கவேயில்லை!" என்று வியந்தவளாக மனம் திறந்து புகழ்ந்தாள் பூஜா.

"நீங்களும் இந்த டிரஸ்ஸில் அழகாகத்தானே இருக் கிறீர்கள்" என்று கூறி புன்னகைத்தாள் அஜந்தா.

''நிஜமாகவா! சேலை பட்டிக்காடு மாதிரி தெரியும் என்று நினைத்து தான் இந்த வகை டிரஸ்ஸிற்கு மாறினேன். ஆனால் உங்களையும், நீங்கள் சேலை உடுத்தியிருக்கும் விதத்தையும் பார்த்த பிறகு எனக்கும் சேலை கட்ட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது'' என்று கூறிய பூஜா தொடர்ந்து, ''உங்கள் மீது என் அண்ணன் சற்று கோபமாக இருகிறான்'' என்று கூறினாள்.

''உங்...கள் அண்ணன் என் மீது கோபமாகவா. ஏன்?'' என்று குழப்பமுடன் கேட்டாள் அஜந்தா.

''பெரியப்பா ஏதாவது வேலை கொடுத்து அதை அவன் சரியாகச் செய்யவில்லை என்றால், உடனே 'டோஸ்' விழும். அதுவும் எப்படித் தெரியுமா? கொஞ்சமும் பொறுப்பில்லாத நீயெல்லாம் என்ன பிள்ளையடா. அஜந்தா மாதிரி ஒரு பெண்ணாவது எனக்குப் பிறந்திருக்கலாம் என்று திட்டுவார்.

''அந்த அஜந்தாவை நேரில் பார்த்தேன் என்றால் நிச்சயம் சண்டை போடாமல் விடமாட்டேன்' என்று என்னிடம் சொல்லியிருக்கிறான். ஆனால் உங்களைப் பார்த்தான் என்றால் பேசுவதையே மறந்து போய் அப்படியே நின்று விடுவான்'' என்று கூறி சிரித்தாள் பூஜா.

தர்ம சங்கடமாகி போனது மற்றவளுக்கு. நல்லவேளை இவள் பானத்தோடு உள்ளே வந்தவுடன், ஏதோ நினைவு வந்தவனாக வெளியே சென்று விட்டான் விமல்.

அவன் இருக்கும்போது கேட்டிருந்தால் அவ்வளவுதான் என்று மனதினுள் நினைத்துக் கொண்டவள் வெறுமனே முறுவலித்து திரும்பியபோது, கையில் பைலுடன்



வாயில் அருகே நின்றிருந்த விமல் பிரபு உள்ளே வந்தான். 'பூஜா கூறியதையும் கேட்டிருப்பானோ?' என்று தவித்தபடி பார்த்தாள் அஜந்தா.

முகம் கடுமையாக அஜந்தாவை நோக்கியவன், சற்றே முகத்தை மாற்றியபடி பூஜாவிடம் பேசினான், ''விஷயம் தெரியாமல் இப்படி பேசுவது தவறு மிஸ். பூஜா. அஜந்தாவிற்கு கே.ஜி. படிக்கும் ஒரு குழந்தையே இருக்கிறது'' என்று ஒரு மாதிரிக் குரலில் கூறினான்.

''நிஜமாகவா?! என்னால் நம்பவே முடியவில்லை அஜந்தா. நீங்கள் இவ்...வளவு 'ஸ்லிம்'மாக இருக்க என்னென்ன உடற்பயிற்சிகள் செய்கிறீர்கள்?'' என்று ஆர்வமான குரலில் கேட்டாள் பூஜா.

மனம் முழுக்க கவலையிருக்கும்போது உடல் எடை ஏன் ஏறுகிறது என்று நினைத்தவள், ''எப்போதாவது நேரம் கிடைக்கும் போது 'ஸ்கிப்பிங்' மட்டும் செய்வேன்'' என்று கூறி முறுவலித்தாள் அஜந்தா.

''ஓ.கே. நான் கிளம்புகிறேன். உங்களுக்கு நேரம் கிடைத்தால் எங்கள் நர்சரிக்குக் கட்டாயம் வர வேண்டும்'' என அழைப்பு விடுத்துச் சென்றாள் பூஜா.



# 9

''நா.. நான் உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும்'' என்றாள் அஜந்தா.

''ம். கேள்'' என்றவன் கையெழுத்து போட்டுக் கொண்டிருந்த 'செக்' புத்தகத்திலிருந்து பார்வையை உயர்த்தவில்லை.

''நீங்கள் எ.. எப்போது திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்கள்?'' என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டே விட்டாள் அஜந்தா.

''ஏன்? தெரிந்து கொண்டு என்ன செய்யப் போகிறாய். மணப்பெண்ணுக்குத் தோழியாக வந்து நிற்கப் போகிறாயா?'' என ஏளனமான குரலில் கேட்டபடி நிமிர்ந்து பார்த்து புருவம் உயர்த்தினான் விமல் பிரபு.

சட்டென்று தோன்றிய கோபத்தை அடக்கிக் கொண்டு, ''எப்படியும் நீங்கள் திருமணம் செய்து கொள்ளத்தானே போகிறீர்கள். இப்போது வந்து விட்டுப் போன பூஜாவை நீங்கள் மணந்து கொண்டால் என்ன?'' என்று இலவச ஆலோசனை வழங்கினாள் அவள்.

''உன்னை அழகி என்று சொன்னதால் அவளுக்கு சிபாரிசு செய்கிறாயா? ம்... நான் கூடத்தான் உன்னைப் பார்த்த முதல் சந்திப்பிலேயே சித்திரம் போலிருக்கிறாய் என்றேன். அதற்காக நீ என்னை மணந்து கொண்டாயா?'' என்று அவன் கேட்டபோது எதிரேயிருந்தவளால் பதிலளிக்க முடியவில்லை.

''இதற்காகத்தான் நான் எதுவும் பேசாதிருப்பதே. புரிந்ததா? நீ ஏதாவது என்னிடம் சொல்லி, அதற்காக நான் உன்னிடம் கோபப்பட்டு சத்தம் போடுவது, இதெல்லாம் தேவையா? இப்போதிருக்கும் சுமூகமான மனநிலையை வீணாக கெடுத்துக் கொள்ள வேண்டாமென்று நினைக்கிறேன். அபிக்கு ஸ்கூல் விட்டிருப்பார்கள் தானே. நீ



கிளம்பு'' என்று கூறியவன் மீண்டும் செக்கில் கையெழுத்திட ஆரம்பித்து விட்டான்.

எதுவும் செய்ய முடியாமல் ஒரு பெருமூச்சுடன் வெளியேறினாள் அவள்.

வீடு திரும்பும்போது, சில சமயங்களில் குறுக்கு வழி மண் பாதையிலும் வருவார்கள் அஜந்தாவும், அபியும். அன்றும் அப்படிச் சென்று கொண்டிருந்தபோது, ஆங்காங்கே மழைநீர் தேங்கி நின்று இருக்கவும், சேலையைச் சற்று தூக்கி பிடித்தபடி நடந்தவள் 'பட்'டென்று ஒரு சிறு கல்லில் மோதிவிட பெருவிரலில் அடிபட்டு இரத்தம் கசிந்தது அவளுக்கு.

'ஸ்ஸ்!' என்று ஒரு பெரிய கல்லில் அமர்ந்தாள் அவள்.

''அச்சச்சோ! ரொம்..ப வலிக்குதாம்மா?'' என்று கேட்டு, தன் வாட்டர் பாட்டிலில் மீதமிருந்த நீரை விரலில் ஊற்றி இரத்தத்தை சுத்தம் செய்துவிட்டு, தன் பாக்கெட்டில் இருந்த கர்ச்சீப்பை எடுத்து விரலைச் சுற்றி கட்டியும் விட்டான் அபி.

''இன்னமும் வலிக்குதாம்மா?'' என கேட்டு தாயை ஒட்டியபடியே அபி நடக்கவும், காலை நன்றாக அசைத்துக் காட்டி ''வலியெல்லாம் போயே போச்சு!'' என சிரித்தாள் அஜந்தா.

எதிர்பாராமல் இக்காட்சியைப் பார்த்த விமல் பிரபுவின் கண்களில் தான் எவ்..வளவு ஏக்கம். கூடவே மன வேதனையும்!

ஆனால் அடுத்த கணமே அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவனாக, காரை திருப்பிக் கொண்டு சென்றான்.

''இந்தப் பதினைந்தாம் தேதி நான் சென்னைக்கு கிளம்பி விடப் போகிறேன் அஜந்தா. உன் பிள்ளையை நேரில் பார்த்துப் பேச வேண்டும் போல ஆவலாக இருக்கிறது. ஒரே ஒரு முறைதான். ப்ளீஸ் அழைத்து வாயேன்'' என்று ஒரு மாதிரிக் குரலில் கேட்டான் விமல்.

''வேண்டாம். வேண்டாம்'' என்று உடனே மறுத்தவள் அவன் முகமாற்றத்தைப் பார்த்துவிட்டு, ''தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள். உங்களைப் பார்த்து, யார்? என்று அபி கேள்வி கேட்டால் நம் இருவருக்குமே சங்கடம்தானே. ப்ளீஸ்'' என்று மறுத்தாள் அஜந்தா.

''சரி நேரில் பார்த்து பேசவில்லை. ஜஸ்ட் கொஞ்சம் பக்கத்திலாவது பார்க்க ஏற்பாடு செய்வாயா?'' என கேட்டான.

''முன்பு போல கேட்டருகில் இருக்கும் மரத்தடியில் விளையாட விடுகிறேன். ஆனால், ஒரே ஒரு முறைதான்'' என முடிவாகக் கூறியவள் அது போலவே செய்தாள்.

அலுவலகத்தின் ஒரு பக்கம் இருந்த தோட்டத்தில் வட்டமடித்துக் கொண்டிருந்த பல வண்ண பட்டாம்பூச்சி களின் பின்னாலேயே ஓடி விளையாடிக் கொண்டிருந்தான் அபி.

அபியின் மேல் தனக்கு ஏன் இவ்வளவு ஈர்ப்பு என்று தன்னையே கேட்டுக் கொண்டான் விமல் பிரபு!

அஜந்தாவை இங்கே சந்தித்தபோது அவள் மீது காட்டிய கோபத்தைத் தானே அபி மீதும் காட்டியிருக்க வேண்டும்? மாறாக பார்த்த முதல் பார்வையிலே அபி மனதில் பதிந்து விட்டானே!?



முன்பொருமுறை ஜெ.பி. கூறிய, ''எதற்குமே கொடுத்தும் வைக்க வேண்டும்'' என்றதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது.

அலுவலக வேலைகள் முடிந்து அவன் சென்னை செல்ல வேண்டிய நாளும் வந்தது.

கட்டி முடித்திருந்த புது வீட்டிற்கு பால் பொங்க வைக்க வேண்டும் என்று கூட அவனுக்குத் தோன்றவில்லை!

அன்று மாலை சென்னை செல்லும் விமானத்தில் தான் அவனும் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மனம் முழுக்க ஏதோ சொல்ல முடியாத வேதனை யோடு தவிக்க குளிக்கச் சென்றான். ஓரிரு நாட்களாகவே விடாது பொழிந்த மழையைக் கூட லட்சியம் செய்யாமல் பயணத்திற்குத் தயாரானான். அப்போது ஒரு போன் கால் வந்தது.

''இன்று தாங்கள் செல்லவிருக்கும் சென்னை விமானம், மேகமூட்டம் காரணமாக ரத்து செய்யப்பட் டுள்ளது. இந்த விமானம் நாளைக் காலை பத்து மணிக்குச் செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது'' என தெரிவித் தது ஒரு இனிய பெண் குரல்.

ஏதாவது அலுவலக வேலையாக வெளியே கிளம்பு வதற்காக தயாராகும்போது இதுபோல ஏதாவது தடை ஏற்பட்டால் விமல் பிரபுவிற்கு உண்டாகும் கோபம், அவன் என்ன வேலையாக கிளம்பினானோ அது நல்ல படியாகவே முடிந்த பின்னரும்கூட தொடர்வது உண்டு.

இன்று கிளம்பியதுகூட முக்கிய வேலையாகத்தானே! ஆனால் தடை ஏற்பட்டதால் கோபம் உண்டாகவில்லை. மாறாக மனம் சற்று அமைதியாகவே இருந்தது. ஏனோ

அந்த அமைதியை அவன் மனம் விரும்பவே செய்தது! வார்த்தையினால் சொல்ல முடியாத உணர்வு அது.

ரிமோட்டை எடுத்து டி.வி.யை ஆன் பண்ணினான் விமல்.

நேயர்களுக்கு விருப்பமான பாடலை ஒரு தமிழ் சேனல் வழங்கிக் கொண்டிருந்தது. புவனேஷ்வரில் உள்ள ஒரு பெரிய ஷாப்பிங் சென்டரில், 'உங்களுக்கு என்ன பாடல் வேண்டும்? நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?' என்று நேயர்களிடம் கேட்டு பாடலை ஒலிபரப்பிக் கொண்டிருந்தார்கள்.

'இது மௌனமான நேரம், இளம் மனதில் என்ன பாரம்' என்ற பாடல் காதில் தேனாகப் பாய, மெல்ல கண் மூடிய விமல் பிரபு எப்படி உடனே தூங்கினான் என்பது அவனுக்கே தெரியவில்லை?!

'மை நேம் இஸ் - அபி' என்றது ஒரு மழலையின் குரல்.

அபி! அபி! அபி! அந்த ஒரே ஒரு வார்த்தை அவனை தூக்க மயக்கத்திலிருந்து சட்டென்று விடுதலை செய்தது!

அவன் பார்வை டி.வி.யை நோக்கிச் சென்றது.

"எந்த ஸ்கூலில் படிக்கிறீர்கள்?" என்று டி.வி. நிகழ்ச்சியில் கேட்டான் ஒரு இளைஞன்.

"மார்டன் மெட்ரிக் ஸ்கூல்" என்று பதிலளித்தான் அபி.

"முழு பெயருமே அபி தானா?" என வினவினான் இளைஞன்.

"ஷார்ட்டா - அரவிந்த் பிரபு" என்று கூறிச் சிரித்தான் அபி.



"யார் இப்படிச் சொல்லிக் கொடுத்தது?" என்று தானும் சிரிப்போடு கேட்டான் இளைஞன்.

"அம்மாதான். அஜிம்மாவும் நானும் இப்படித்தானே விளையாடுவோம். என் அம்மா பெயர் ஷார்ட்டா - அஜந்தா" என்று கூறி மீண்டும் சிரித்தான் அபி.

"சரி. உங்கள் அப்பா பெயரும் ஷார்ட்டா என்னவென்று சொல்லுங்கள் அபி?" என கேட்டான் இளைஞன்.

"விமல் பிரபு" என குதூகலத்துடன் கூறினான் அபி.

அபியின் அருகில் முகம் வியர்க்க நின்றிருந்தவள் அஜந்தாவே தான். இந்த நிகழ்ச்சி அவள் எதிர்பார்க்காத ஒன்று என்பதை அவள் முகம் காட்டிக் கொடுத்து விட்டது.

ஒரு கணம் உடம்பெல்லாம் அதிர்ந்தது விமல் பிரபு விற்கு. அதே நிமிடம் 'பவர் கட்'டாகி அவனிருந்த அறை முழுவதும் இருட்டாகியது. அந்த மனநிலையில் அவனுக்கு அமைதியும், இருளுமே மிக தேவையா யிருந்தது.

எவ்...வளவு இனிய அதிர்ச்சியான செய்தி! பிள்ளையை அருகில் கூட பார்க்க விடாது செய்தாளே, இதுதான் காரணமா? அவனால் இன்னமும் நம்பவே முடிய வில்லை. தன் பெயரை தகப்பன் என்று கூறி வளர்த் திருக்கும் குழந்தை யாருடையதாக இருக்கும்? அபியை இவள் ஏன் வளர்க்க வேண்டும். அதுவும் என்னிடமே பொய் சொல்லி; அப்படியென்ன காரணமிருக்கும் என்று யோசித்தவனுக்கு, என்னவோ நடந்திருக்கிறது. அதை என்னிடம் தெரிவிக்காமல் மறைத்து விட்டாள் என்பது புரிந்து ஒரு பெருமூச்சு வந்தது.

எத்தனை வருடத்து வேதனை, கோபம், வெறுப்பு, இவையெல்லாம் எதற்காக? உண்மையாகவே பிரிந்து செல்ல அப்படியென்ன காரணமாக இருந்திருக்கும். எதுவாக இருப்பினும் அவையெல்லாம் வெறும் தூசாகத் தான் தெரிந்தது விமல் பிரபுவிற்கு.

அப்போதே, அந்த நிமிடமே அஜி, அபியைக் காண அவன் இதயம் வேகமாகத் துடித்தது. ஆனால் பொறுமை யோடு யோசித்தவன் ஒரிரு போன் செய்து பேசி முடித்து விட்டு முகம் கழுவித் துடைத்தான். எதிரே முகம் பார்க்கும் பெரிய கண்ணாடி.

அவன் முகத்தைப் பார்க்க அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. மனதை அழுத்திக் கொண்டிருந்த ஒரு பெரிய பாரம் விலகிவிட்டால் அவன் இருபதின் ஆரம்பத்திற்கு மாறிவிட முடியுமா?!

இப்போது அவன் முகம் பழைய விபுவின் முகம். இந்த முகத்தை அஜி பார்த்தாள் என்றால் நிச்சயம் ஆனந்தப்படு வாள்.

என்னவோ உலகமே தன் உள்ளங்கையினுள் அடங்கி விட்ட மாதிரி அவன் உள்ளம் இன்பத்தில் பொங்கியது.

விடியும் வரை விழித்தபடியே படுத்திருந்தவன் விடிந்ததும் அபியின் பள்ளிக்குச் சென்றான்.

எத்..தனைக் குழந்தைகள் இதில்... உயரமாக நின் றிருந்த புதியவனை விளையாடியபடியே நிறைய குழந் தைகள் பார்த்தார்கள். அதில் ஒரு குழந்தையின் கண்கள் மட்டும் மேலும் மேலும் விரிய, ''அப்...பா!?'' என்று உற்சாகமான குரலில் கூவியபடியே அவனை நோக்கி ஓடி வந்தான். கை நீட்டி அபியை வாரி அணைத்துக் கொண்டான் விமல் பிரபு.



இனி விடவே போவதில்லை என்பதுபோல் விமலின் கழுத்தைச் சுற்றி தன் இரு கைகளையும் இறுக்கிக் கொண்டான் அபி. அதன் பின்பு, அந்தப் பிஞ்சு மனதில் தேங்கியிருந்த எத்தனையெத்தனையோ கேள்விகளும் ஒவ்வொன்றாக வெளிவந்தது.

''நீங்க என்னையும், அம்மாவையும் திரும்பவும் விட் டுட்டு போயிடுவீங்களாப்பா? எங்களையும் கூட்டிட்டு போங்கப்பா. இல்லாட்டி உங்க போட்டோவை பிடிச்சுக்கிட்டு அம்மா அழுவாங்கப்பா'' என்று உதடுகள் பிதுங்க உரைத்தான் அபி.

ஆறுதலாக பிள்ளையின் முதுகை வருடியவன், ''இனி மேல் உங்களை விட்டுவிட்டுப் போக மாட்டேன்டா கண்ணா'' என்று பிள்ளையிடம் உறுதியளித்தான் விமல் பிரபு.

''ப்ராமிஸ் பா'' என பிள்ளை கேட்க.

''காட் ப்ராமிஸ்'' என்று கூறி அபியின் கன்னத்தில் முத்தமிட்டான் விமல்.

உடனே உற்சாகமான அபி, ''எனக்கு என்னப்பா வாங்கி வந்தீர்கள்?'' என்று கேள்வி போல கேட்டான்.

''அவசரமாகக் கிளம்பியதால் எதுவும் வாங்கி வரவில்லை. உனக்கு என்னென்ன வேண்டுமென்று சொல். எல்லாம் வாங்கித் தருகிறேன்'' என்றவனிடம், ''ரிமோட் கார், டிரெயின் வேணும்பா'' என அறிவித்தான் அபி.

''சரி. வாங்கித் தருகிறேன்'' என்று கூறியபடி கார் கதவைத் திறந்தான் விமல்.

''ஹய்...யோ! இது நம்ம காராப்பா?'' என்று மகிழ்ச்சி யான முகத்தைத் திருப்பிக் கேட்டான் அபி.

'நம்ம காரே தான்' என்று கூறி பிள்ளையின் கன்னத்தில் தட்டியவன், ஸ்கூல் வாட்ச்மேனிடம் புன்னகைத்துவிட்டு அவனிடம் தன்னைப் பற்றிய விபரம் கூறி இரண்டு பெரிய ரூபாய் நோட்டுகளையும் கொடுத்த பின்பு காரைக் கிளப்பினான் விமல்.

"இப்போ எங்கேப்பா போறோம்?" அபி.

"அம்மாவிடம்" விமல்.

## 10



இனிமேல் விபுவை நேரில் பார்ப்பதுகூட முடியாதே. அவன் தான் சொந்த ஊருக்கே சென்று விட்டானே என்பதை நினைத்தபோது, ஏனோ அஜந்தாவிற்கு அழுகையை அடக்குவது சிரமமாக இருந்தது. யாரும் பார்த்து விட்டால் அசிங்கம் என்று வேலையில் ஈடுபட முயற்சித்துக் கொண்டிருந்தாள். விமலின் கார் கேட்டினுள் நுழைந்தது கூட அவளுக்குத் தெரியாது.

எம்.டி. தமிழ்நாட்டிற்குச் சென்று விட்டார் என்று நினைத்திருந்தவர்கள், விமல் பிரபு ஒரு சிறுவனை தோளில் சுமந்தபடி உள்ளே வரவும் வியப்போடு நின்றார்கள்.

யாரையும் லட்சியமோ, அலட்சியமோ செய்யாமல் தன் அறையை நோக்கிச் சென்றான் விமல்.



சற்றும் எதிர்பாராமல் விபு, அபி இருவரையும் ஒன்றாகப் பார்த்ததில் அதிலும், 'அப்பா வந்தாச்சம்மா' என்று மழலை மாறாத குரலில் கூறிய அபி, விபுவின் தோளில் சொகுசாக சாய்ந்திருப்பதைப் பார்த்த அஜந்தாவிற்கு ஆனந்தமும், அதிர்ச்சியும் அளவில்லாது தோன்றியது.

யாரிடமும் எதுவும் பேசாது தன் தனியிடத்திற்குச் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டாள் அஜந்தா. யாருடைய குறுக்கீடும் இன்றி, இத்தனை வருடமாக அனுபவித்த வேதனையையெல்லாம் நினைத்து ஒரு மூச்சு அழுதாள் அஜந்தா.

"ப்ளீஸ். கதவைத் திற அஜி" என்று கூறி கதவைத் தட்டியவன் பதில் வராமலே இருக்கவும், "நான் சொல்வதை நன்றாகக் கேட்டுக் கொள். எக்காரணத்திற்காகவும் இனி உன்னைப் பிரிந்திருக்க என்னால் முடியாது. புரிந்ததா?" என்று கூறினான் விமல் பிரபு.

அவளின் அழுகையொலி சட்டென குறைய, கதவைத் திறந்தவள் "விபூ!" என்று கூவியபடியே ஓடிவந்து அவன் கைகளுக்குள் அடங்கினாள்.

குழந்தையிருப்பதைக்கூட மறந்தவனாக அவளை அணைத்துக் கொண்டு முகமெங்கும் முத்தமிட்டான் அவன்.

தன் சக்தியையெல்லாம் இழந்து விட்டவளைப் போல அவன் தோளிலேயே சாய்ந்திருந்தாள் அவள்.

இந்த மௌன நிலை எத்தனை கணங்கள் நீடித்ததோ?

அவள் கண்ணீரைத் துடைத்தவன், "என்ன நடந்தது என்ற உண்மையை இப்போதாவது சொல்கிறாயா?" என்று கேட்டான்.

எதையும் மறைக்காது நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் கூறியவளுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.

கண்ணாடி டம்ளரில் 'ஜில்'லென்ற நீரை ஊற்றி அவளைக் குடிக்க வைத்துவிட்டு, 'அடிமுட்டாள் பெண்ணே!' என்று கோபமும், வேதனையுமாக அவளைத் திட்டினான் விமல் பிரபு.

திகைத்து விழித்தாள் அவள்.

"எவனோ ஒருத்தன் என்னைக் கொன்று விடுவேன், குழந்தையைக் கொன்று விடுவேன் என்று மிரட்டினானாம், இவள் நம்பி பயந்து விட்டாளாம். அவன் என்னைக் கொன்று விடுவதற்கு நான் என்ன கையாலாகாத கோழையா அல்லது உலகம் தெரியாத குழந்தையா?" என்று கேட்டான் அவன்.

"அந்த 'ரவுடி கேங்'கைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது விபு. அதனால் நான் சொன்னதை சீரியஸாக எண்ணிப் பார்க்க மாட்டேன் என்கிறீர்கள். அந்த கோபு சென்னையில் பக்கா ரவுடி தெரியுமா?" என்று கூறிய போது அவளின் உடல் சிலிர்த்தது.

"இந்தக் காலத்தில் பிசினஸை வெற்றிகரமாக நடத்தும் போது எத்தனை இடையூறுகள் வரும் தெரியுமா. அதையெல்லாம் அகற்ற நானும் கூட கொஞ்சம் அநியாய வழியில் ரவுடிசம் செய்திருக்கிறேன் அஜி. பணத்தை வீசினால் அந்த கோபுவை இல்லாமலே செய்துவிட ஒரே மணி நேரம் போதும். சரி அதை விட்டுத் தள்ளு. ஊரை விட்டுக் கிளம்பியபோது என் ஞாபகம் உன்னைத் தடுக்கவில்லையா? நான் எப்படித் தவித்துப் போவேன்



என்று எண்ணிப் பார்த்தாயா? அதுவுமில்லாமல் பழக்கமில்லாத இந்த ஊருக்கு வரும் தைரியம் எப்படி வந்தது அஜி?" என வருத்தமாக கேட்டான் விமல்.

"நான் என்ன செய்யட்டும் விபு. எனக்கு அப்போது இதைத் தவிர வேறு வழி தெரியவில்லையே. பழக்கமில்லாத ஊரில் தெரிந்தவர்கள் என்று யாருமில்லாமல், குழந்தையை வைத்துக் கொண்டு எவ்..வளவு கஷ்டமாக இருந்தது தெரியுமா? உங்களுக்கு எந்த ஆபத்தும் வந்து விடக் கூடாது என்பதற்காக அத்தனையையும் தாங்கிக் கொண்டேன். உங்களைப் பிரிந்ததால் உண்டான வேதனையின் முன், மற்றதெல்லாம் எனக்கு பெரியதாக படவேயில்லை விபு" என்று சோர்வான குரலில் கூறினாள் அஜந்தா.

"உண்மை என்னவென்று தெரிந்து கொள்ளாமல் நான் வேறு உன்னை வருத்தப்பட வைத்து விட்டேனே. சாரிடா" என்று அவள் கை பற்றி முத்தமிட்டான் அவன்.

அவன் தோளில் சாய்ந்திருந்த அந்த நிமிடம், மலையளவு கஷ்டம் வந்தாலும் தாங்கிக் கொள்ள முடியும் எனத் தோன்றியது அவளுக்கு.

"நீ என்னைவிட வேறொருவனை நல்லவன், வல்லவன் என உயர்வாக நினைப்பதாகவும் நம் காதலை மறந்துவிடும்படியும் ஒரு கடிதம் எழுதி அனுப்பியதால், உன் மீது எனக்கு கடுங்கோபம், வெறுப்பு. அதை மறைக்காது அப்படியே காட்டினேன். ஆனால் நீ நேரில் பார்த்த பிறகாவது என்னிடம் எல்லாவற்றையும் சொல்லியிருக்கலாமே. ஏன் சொல்லவில்லை அஜி. நேற்றிரவு தற்செயலாக அந்த டி.வி. நிகழ்ச்சியை நான் பார்க்காமல் இருந்திருந்தால்...?" என்றவன் அவளை நெஞ்சோடு இறுக்கிக்

கொண்டபடி, "இன்னும் எத்தனை வருடத்திற்கு மறைத் திருப்பாயோ?" என்று ஒரு பெருமூச்சோடு கூறினான்.

"நான் சொன்னாலும் நீங்கள் நம்புவீர்களோ, மாட்டீர் களோ? என்ற கவலை. நீங்கள்தான் அடியோடு மாறி விட் டிருந்தீர்களே. எப்படிச் சொல்வதாம்?" என கேட்டாள் அவள்.

'உண்மை தான்' என ஒத்துக் கொண்டவன், "ஆனா லும் எத்தனை வருடத்து இழப்பு அஜி" என்று அவன் கூறியபோது, விமலின் அறையினுள் எதையெல்லாமோ உருட்டிக் கொண்டிருந்த பிள்ளை, "நான் கீழே போகி றேன்பா" என வந்து நின்றான்.

அபியை 'லிப்ட்' வழியே தோட்டத்திற்கு அழைத்துச் சென்று விட்டவன் வாட்ச் மேனிடம் பார்த்துக் கொள்ளும் படி சைகை செய்துவிட்டு மேலே வந்தபோது, அஜந்தா வின் முகம் சற்று மாறியிருந்தது.

"என்னடா?" என்று மென்மையாகக் கேட்டான் விமல்.

"விபு. நீங்கள் அபியைப் பற்றி, நான் அவனை நம் முடைய குழந்தையாகத்தான்..." என எதையும் கூறி முடிக் காதபோதே அவள் கண்ணிலிருந்து நீர் வந்து விட்டது.

"ஷ். பைத்தியம்!" என செல்லமாகக் கடிந்தவன், "நீ செய்ததிலேயே கொஞ்சம் புத்திசாலித்தனமான விஷயம் எது தெரியுமா? என்னை அபியின் அப்பாவாக அடை யாளம் காட்டியது தான். அபிதான் நம்முடைய முதல் குழந்தை. புரிந்ததா?" என கூறி வெண் பற்கள் தந்தமாக ஒளி வீசப் புன்னகைத்தான் விமல் பிரபு.

மகிழ்ச்சியில் அவன் கன்னத்தில் முத்தமிட்டவளை, மேலும் இறுக்கிக் கொண்டான் அவன்.



சில நிமிடங்கள் சென்ற பின், 'பசிக்கிறது' என்று கூறியபடியே அவர்களிடம் வந்தான் அபி.

"இப்போது ஹோட்டலுக்குச் சென்று சாப்பிட்டு விட்டு, பிறகு நம் 'கெஸ்ட் ஹவுஸ்' போகலாம்" என கூறினான் விமல்.

'சரி' என்று தலையாட்டியபோதும் அடி மனதில் அவளுக்கு எதைப் பற்றியோ பயமாக இருந்தது உண்மையே!

'கிளம்பலாமா?' என்று கார் சாவியை எடுத்துக் கொண்டு திரும்பியவனின் கையைப் பற்றி நிறுத்தி யவள், "விபு! இ.. இப்போது நம்மைப் பற்றி இங்கேயிருப் பவர்கள் என்ன நினைப்பார்கள். அபி எப்படி என்று?" முணுமுணுப்பாக கேட்கும்போதே அவள் கன்னங்கள் எழிலாகச் சிவந்து விட்டது.

"ம்.. ம்.. கீழ்வானமாக உன் முகம் சிவப்பதைப் பார்க்கும் போது ஏதேதோ எண்ணமெல்லாம் தோன்றுகிறது" என கூறி, அவள் மேலும் சிவப்பதை ரசித்தவன் அவள் கோபம் போல முறைக்கவும், "ஓ.கே. ஓ.கே. யார் கேட்டாலும் பட்டென உண்மையைச் சொல்லிவிடு" என்றான் வெகு சாதாரணமாக.

"உண்மையையா?!" என்றாள் அதிர்ச்சியுடன்.

"உண்மையென்றால் எதை நினைத்தாய். பழைய குப்பைகளையா? அதையெல்லாம் இந்த நிமிடத்தி லிருந்து மறந்துவிடு. நான் சொல்வதை நன்றாக கேட்டுக் கொள் அஜி. அபி நம் இருவரின் குழந்தை. இதை யாரா லும் மாற்ற முடியாது. இந்த விஷயம் பற்றி தேவை யில்லாமல் கேள்வி கேட்டு திருமதி. விமல் பிரபுவை

சீண்டிப் பார்க்கும் தைரியம் எப்போதுமே யாருக்கும் வராமல் பார்த்துக் கொள்கிறேன் போதுமா? என்ன விழிக் கிறாய். நமக்கு எப்போது திருமணம் நடந்தது என்றா? என் மனதளவில் நீ என் மனைவியாகி சில வருடமே ஆகி விட்டது'' என்று கூறி அவளைத் திகைக்க வைத்தவன், அவள் ஏதோ கேட்க வந்ததை ஒதுக்கிவிட்டு 'லிப்ட்' வழியே கீழே அழைத்து வந்தான்.

அலுவலகத்திலிருந்தவர்கள் வினோதமாகப் பார்த்த போதும் யாரும் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. அஜந்தாவின் கையைப் பற்றியவன் விடாமலேயே தோளில் குழந்தையுடன் கார் அருகே சென்றான் அவன்.

அவள் தலை நிமிரவேயில்லை. அவளையுமறியாத ஏதோ ஒரு குற்ற உணர்வு அவள் மனதை வாட்டிக் கொண்டேயிருந்தது. ஆனால் அவனுக்கு அதுபோல எதுவும் இல்லையா? குழந்தையுடன் இவ்..வளவு இயல் பாக சிரித்துக் கொண்டு வருகிறானே என ஆச்சரியமாக இருந்தது.

''மேடம்!'' என்று அழைத்தாள் வரவேற்பு பெண் ஒருத்தி. முடிந்த வரை இயல்பான முகத்துடன் திரும் பினாள் அஜந்தா.

''உங்களின் 'ஹேண்ட் பேக்'ஐ மறந்துவிட்டு வந்து விட்டீர்கள்'' என கூறி பையை நீட்டிய பெண், ''உங்களின் முகம் இவ்..வளவு அழகாக ஜொலிப்பதை இப்போதுதான் பார்க்கிறேன்'' என்றாள்.

''தாங்க்ஸ்'' என மெல்ல முறுவலித்தாள் அஜந்தா.

''சங்க இலக்கியத்தில் வரும் ஊடலும், கூடலும் எப்படி யிருக்கும் என்பதை உங்களைப் பார்த்த பிறகுதான்



தெரிந்து கொண்டேன். வீட்டிற்குப் போனவுடன் சுற்றிப் போட்டு விடுங்கள்'' என்று சிரித்தவளிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு காரில் உட்கார்ந்தாள் அஜந்தா.

இப்போது ஏனோ அவள் மனம் சற்று லேசானதுபோல் உணர்ந்தாள்!

அந்த ஸ்டார் ஒட்டலின் உணவு வகைகளை மூவருமே விரும்பி சுவைத்தார்கள். சின்ன விஷயத்தையும் விடாது மகனுக்கு கற்றுக் கொடுத்தான் விமல் பிரபு.

'ஃபோர்க்' ஸ்பூனில் எப்படி குத்தி எடுப்பது, 'டிஸ்யூ' பேப்பர் மூலம் எப்படி உதடு ஒற்றி துடைப்பது என்று அக்கறையோடு சொல்லிக் கொடுத்தான் விமல்.

சொல்லிக் கொடுத்தபடியே செய்த அபி, ''அம்மா ஏன் 'நான் வெஜ்' சாப்பிடுவதில்லைப்பா?'' என வினவினான்.

''வள்ளுவர்னு ஒரு பெரியவர் எழுதியதைப் படித்ததில் இருந்து உன் அம்மாவிற்கு 'நான் வெஜ்' பிடிப்பதில்லை'' என்று சின்னச் சிரிப்புடன் கூறினான் விமல்.

''என்னை ஏன் வம்புக்கு இழுக்கிறீர்கள்'' என்று அஜந்தா முறைக்க, ''யார் அந்த வள்ளுவர் அங்கிள்?'' என கேட்டான் அபி.

மற்ற இருவரும் பக்கென்று சிரித்தார்கள்.

அஜியும், விமலும் இணைந்து சிரித்ததை சிலர் புன்னகையோடு திரும்பிப் பார்த்தார்கள். அதில் ஒரு ஜோடிக் கண்கள் மட்டும் பொறாமை வெறியுடன் நோக்கியது.

விபுவும், அபியும் கை கழுவிவிட்டு வருவதற்காகச் சென்று விட, தனித்திருந்த அஜந்தாவை யாரோ வெறிப்

பதுபோல் தோன்றவும், சட்டென திரும்பிப் பார்த்தாள் யாருமில்லை.

சில ஐஸ்கிரீம் பாக்கெட்டுகளை வாங்கிக் கொண்டு மூவரும் கிளம்பினார்கள்.

சில நிமிட பயணத்தின் பின்பு, ஒரு பெரிய கேட்டின் முன்பாக கார் நின்றது.

வாட்ச்மேன் யாருமில்லையே என அவள் யோசித்த போது கதவு தானாகவே திறந்தது. ரிமோட் கண்ட்ரோலா என்று பாராட்டும் விதமாக நோக்கியவளைப் பார்த்து கண் சிமிட்டினான் விமல் பிரபு.

பசேல் என்ற புல்வெளியின் நடுவிலிருந்த தார் ரோட்டினுள் சற்று தூரம் சென்றபிறகு கார் மெல்ல நின்றது.

பிரம்மாண்டமான முறையில் கட்டியிருந்த அந்த பங்களாவை வியப்புடனே நோக்கினாள் அஜந்தா.

விமலைப் பார்ப்பதற்கே பெருமையாக இருந்தது அவளுக்கு.

'இவ்...ளோ பெரிய வீடா?!' என்று வியந்தபடியே துள்ளலுடன் உள்ளே ஓடினான் அபி.

மலைத்து நின்றவளின் கையைப் பற்றி உள்ளே அழைத்துச் சென்றான் விமல்.

எலுமிச்சை மஞ்சள் வண்ண பெயிண்ட் அடித்திருந்த ஹாலின் தரையில் மெரூன் வண்ணக் கம்பளம் போடப்பட்டிருந்தது. வாட்டர் கலர் சோபா செட், கண்ணாடி கியூரியோ, அதில் வைக்கப்பட்டிருந்த விலையுயர்ந்த கலைப் பொருட்கள். சற்று ஓரமாக தரையில் வைக்கப்பட்டிருந்த, தங்க மலர் இதழ் விரித்ததைப் போலிருந்த



ஹீட்டர். அற்புதமான வேலைப்பாட்டுடன் நின்று கொண்டிருந்த பெரிய தூண்கள். பளபளப்பாக தேக்கில் செய்திருந்த ஸ்டேண்டில் வைக்கப்பட்டிருந்த ஹோம் தியேட்டர், டி.வி.டி பிளேயர், பெரிய பீங்கான் ஜாடியில் அழகாக சிரித்துக் கொண்டிருந்த பலவண்ண டேலியோ ஒயின் பூக்கள் என்று இவையெதுவுமே அவள் கவனத்தைக் கவரவில்லை.

இதையெல்லாம் விடுத்து அந்தப் பெரிய ஹாலில் அழகாக சட்டமடித்து மாட்டப்பட்டிருந்த சித்திரத்தின் அருகே சென்றாள் அஜந்தா.

அவர்களின் வாழவிற்கு அடித்தளமிட்ட அதே சித்திரம் தான்.

சென்னையிலிருந்தபோது ஒரு நாள் பாஸ்கர் கீழே போட்டு உடைத்து விட்டான்.

மனம் தாங்காமல், ''இதை நீங்களே பத்திரமாக வைத்திருங்கள்'' என்று விமல் பிரபுவிடமே கொடுத்திருந்தாள் அஜந்தா.

அதை இன்றுவரை பாதுகாத்து வைத்திருக்கிறானே இவன் அன்பு எவ்...வளவு உயர்வானது. அவனையே இமைக்காது நோக்கினாள் அவள்.



## 11

''இத்தனை வருடம் கழித்து 'நாம்' இருவரும் ஒரே வீட்டில் வாழும் சந்தர்ப்பம் இன்று தான் அமைந்திருக்

கிறது. இனி இதை நாம் எப்போதும் பார்த்துக் கொள்ளலாம் சரிதானா 'நம்ம வீடு?'' என்று மிக மிருதுவான குரலில் அவள் காதருகே வசீகர முறுவலோடு கூறினான் விமல் பிரபு.

உடம்பெல்லாம் பூரித்துப் போக, சட்டென்று திரும்பி அவனை முத்தமிட்டு, அவன் தோளில் சாய்ந்தவளுக்கு, உலகமே சொர்க்கமாகத் தெரிந்தது.

ஒரு கரத்தால் அவளை அணைத்து, மறுகரத்தால் அவள் முகத்தை நிமிர்த்தியபோது, அபியின் குரல் கேட்கவும் ஒரு முறுவலோடு அவளை விடுவித்தான் விமல்.

''அப்பா! இங்கே எங்கேயுமே நமனா இல்லையே. எனக்கு ரொம்ப தாகம். இப்போ நமனா வேணும்'' என்று கூறியபடியே அந்த அகலமான பெரிய மாடிப்படிகளில் இருந்து ஓடி வந்தான் அபி.

'நமனா?' என்று புருவம் தூக்கியவன், ''யாரடா அந்த நமனா? உன் கேர்ள் பிரண்டா? அவளுக்கும் தாகத்திற்கும் என்ன சம்பந்தம்?'' என்று வினவினான் விமல்.

'கலீர்' என்று அஜந்தா சிரிக்கவும், 'நமனான்னா வாட் டர்ப்பா' என்று விளக்கினான் அபி.

''அபிக்கு சின்ன குழந்தையிலிருந்தே தண்ணி என்று சொல்லத் தெரியாது விபு. நமனா என்று தான் சொல்லு வான். அது இப்போதும் கூட சில சமயத்தில் வந்து விடுகிறது'' என்றாள் அவள்.

''சரி. வா 'கெஸ்ட் ஹவுஸ்' போய் வாட்டர் குடிக்கலாம்'' என்று கூறி அழைத்துச் சென்றான் அவன்.



சகல வசதிகளுடனும் ஒரு சிறிய மாளிகை போல் இருந்தது. 'கெஸ்ட் ஹவுஸ்.'

எதையெதையோ பேசினார்கள், சிரித்தார்கள். இரவு உணவு முடிந்த பின்பு, பணியாளர்கள் அனைவரும் அவர் களின் இடத்திற்குச் சென்ற பின்னரும் இவர்கள் விழித் திருந்தார்கள்.

அபியின் சொக்கும் விழிகளைப் பார்த்து அவனை தூக்கிச் சென்று வலது புற அறையில் படுக்க வைத்து ஏ.சி.யைப் போட்டு விட்டு, கதவைச் சாத்தி விட்டு வந்தான் விமல்.

''எனக்கும் தூக்கம் வருகிறது விபு. காலையில் பார்க்க லாம் 'குட் நைட்''' என்று தரையைப் பார்த்தபடியே கூறி நகர முற்பட்டவளை அவனுடைய கரம் தடுத்து நிறுத் தியது.

''என்னது குட் நைட்டா?! விளையாடுகிறாயா? நமக்கு இன்று முதல் இரவு. ஒருவேளை மறந்து விட்டாயோ என்றுதான் ஞாபகப்படுத்துகிறேன்'' என மிகத் தெளி வாகக் கூறினான் அவன்.

சட்டென்று வேறு பக்கமாக நகர்ந்தவளுக்கு ஏகப்பட்ட அதிர்ச்சி. திருமணமாகாமலே எப்படி... இவனுக்கென்ன திடீரென்று புத்தி பிசகி விட்டதா?

அவளின் திகைப்பைச் சற்றும் லட்சியம் செய்யாமல் அவளை நெருங்கினான் அவன்.

விட்டால் சுவற்றுக்குள்ளேயே போய் விடும்படி நின் றிருந்தாள் அஜந்தா.

அவளின் மென்தோளில் கை வைத்தான் விமல்.

''திருமணத்தின் முன்பு இதெல்லாம் த.. தப்பு விபு. ப்ளீஸ்'' என்று தடுத்தவளை, சுலபமாக தடுத்து அவளை அணைத்தவன், ''இது எப்போது உன் கழுத்திற்கு வந்தது என்று ஞாபகமிருக்கா?'' என கேட்டு அவள் கழுத்தி லிருந்த செயினை எடுத்துக் காட்டினான் விமல்.

'ம்' என்று மெல்ல முணுமுணுத்தாள் அஜந்தா.

''பூஜை அறையில் வைத்து இதை எப்போது உன் கழுத்தில் அணிவித்தேனோ, அந்த நிமிடத்திலிருந்தே உன்னை என் மனைவியாகத்தான் நினைத்துக் கொண் டிருக்கிறேன் அஜி'' என்று கூறினான் விமல் பிரபு.

'நீ என் மனைவியாகி சில வருடமே ஆகிறது' என்று காலையில் கூட கூறினானே. இதைத்தானா! ஆனாலும்...

குழபபமுடன் பார்த்தவளை விட்டு விலகியவன் ஒரு தம்ளர் ஐஸ் வாட்டர் குடித்துவிட்டு, அருகில் இருந்த சோபாவில் அமர்ந்து கண்களை மூடியபடியே தலையை சோபா மீது சாய்த்துக் கொண்டான்.

கண்கள் மூடி அமர்ந்திருந்தவனின் அருகே சென்றாள் அஜந்தா. ஏனோ அவனுடைய முகம் நோக்கிச் சென்றது அவளின் மெல்லிய கரம். அப்போது தரையிலிருந்த கால் 'சர்'ரென்று வழுக்கவும் நிலையிழந்து 'தொப்'பென்று அவன் மீது விழுந்தாள் அஜந்தா.

அவளைப் பற்றியவன் ஒரு மாதிரி பார்த்தான்.

இதென்ன பார்வை? என குழம்பினாள் அஜந்தா. அன் றொரு நாள் தவறி விழுந்தபோதுகூட சில வினாடிகள் இதே போல்தான் பார்த்தான். அதே மாதிரி இன்று கால் வழுக்கி... ஆமாம் செருப்பில்லாத கால் எப்படி வழுக்கி விடும். அப்படியென்றால்...



'அ... அன்றைக்கு...' என்று அவள் தடுமாறியபடி பேசு வதைப் பார்த்தவன்,

''ஆமாம். அன்று நான்தான் உன் காலைத் தட்டி விட் டேன்'' என்று கூறினான் விமல் பிரபு.

'என்ன?!' என்று ஆத்திரமுடன் திகைத்தவளிடம், ''ப்ளீஸ் அஜி. முதலில் நான் சொல்வதையெல்லாம் கேட்டுவிட்டு, பிறகு நீ என்ன வேண்டுமென்றாலும் கேள்'' என்று கூறி அவளை அருகிலேயே அமர வைத் தான் விமல்.

''அன்று நீ இருந்த நிலையில் அதுவும் ஒரு குழந்தை யின் தாய் என்ற ஸ்தானத்தில் இருந்து பார்த்தால் நான் செய்தது ரொம்..பவே பெரிய தப்பு தான், ஒத்துக் கொள் கிறேன். ஆனால் உன்னை அவ்வளவு லேசில் என்னால் தூக்கியெறிய முடியாது போயிற்று. நீ எனக்கு மட்டுமே சொந்தமானவள் என்ற நினைவும் மாறவேயில்லை. தொடர்ந்து இங்கேயே இருந்தால் உன் மனதை மேலும் நோகடித்து விடுவேன் என்ற பயத்தினாலேயே தான் சென்னைக்கு கிளம்ப முடிவு செய்தேன். ஆனால் அஜி அந்த டி.வி. நிகழ்ச்சியில் உங்களை நான் பார்க்காது இருந்திருந்தால்...'' என்றவன் அவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

''அந்த ஒரே ஒரு நிமிடம் எனக்கு எப்படியிருந்தது தெரியுமா அஜி. அந்த உணர்வு வார்த்தைகளால் சொல்லி விட முடியாது. அடி மனதில் ஒளிர்ந்து கொண்டேயிருந்த நம்பிக்கை வீண் போகவில்லை என்றபோது, சந் தோஷத்தில் இதயத் துடிப்பு நின்று விடுமோ என்றுகூட பயந்து விட்டேன் தெரியுமா?'' என்று அவன் கூறியபோது அதிர்ந்து போய் அவன் உதடுகளின் மீது கை வைத்து

தடுத்தவள், அவனுடைய முறுவலில் எதையோ உணர்ந்த வளாக அவன் மீதே சாய்ந்து கொண்டாள்.

''நாம் இப்படி சேர்ந்தமர்ந்து எத்தனையோ வருடமாகி விட்டது இல்லையா அஜி?'' என்று வருத்தமாகக் கூறிய வன், ''இனி அதையெல்லாம் ஈடுகட்ட ஆரம்பித்து விட வேண்டியது தான்'' என்று புன்முறுவலுடன் கூறியவனை மெல்ல நோக்கினாள் அவள்.

''என்...னடா?'' என மென்குரலில் கேட்டான் அவன்.

''வ... வந்து அப்போது ரொம்ப கஷ்டமாக இருந்ததா விபு?'' என வினவினாள் அவள்.

''ம். ரொம்..பவே கஷ்டம்தான். உன் கடிதம்தான் என்னை அதிக கோபம் கொள்ள வைத்தது. உன் அலுவலகத்தில் விசாரித்தபோதும் அதே செய்திதான் கிடைத்தது. திருமணம் என்பதற்கு மேல் அவர்களுக்கு எதுவும் தெரியவில்லை. உன் சிஸ்டர் வீடு கூட எனக்குத் தெரியாதே. நாம் சந்தித்துக் கொண்டதெல்லாம் பொது இடத்தில் மட்டும்தானே. வேறு எதுவும் தோன்ற வழியில் லாது போகவே உன் கடிதம் உண்மையானது தானோ என்ற முடிவெடுத்து விட்டது மனது. சாரிம்மா'' என்றான் அவன்.

''விட்டு விடுங்கள் விபு'' என கூறி அவன் தோளைப் பற்றி மெல்ல அழுத்தி விட்டாள் அவள்.

அவள் கையை வருடியபடியே, ''நீ ரொம்ப தைரியசாலி என்று பல முறை நான் நினைத்திருக்கிறேன் அஜி. அப்படிப்பட்டவள் யாரென்றே தெரியாத, கண்ணிலேயே பார்க்காத ஒருவனுக்கு பயந்து இவ்வளவு கஷ்டப்பட் டிருக்க வேண்டியதில்லை'' என்றான் அவன்.



''அந்த கேங்கைப் பற்றி முழுமையாக உங்களுக்குத் தெரியாது விபு. அபி பிறந்து நாலு நாள் குழந்தையாக இருந்தபோதே, கொஞ்சமும் தயக்கமில்லாமல் அந்த பாஸ்கர் குழந்தையை என் கண் முன்னேயே எப்படிக் கிள்ளுவான் தெரியுமா? அதுவுமில்லாமல்...'' என்று அவன் முகத்தை நோக்கியவள் திகைத்தாள்.

''ராஸ்கல்! அவனை'' என்று பற்களைக் கடித்தவனின் கன்னத்து எலும்புகள் முறிந்து வெளியே வந்து விடுமோ? என்று பயந்தே போனாள் அஜந்தா.

மெல்ல தன்னைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தவன், அவள் முகத்தைக் கைகளில் ஏந்தி, ''அப்போ தெல்லாம் உனக்குத் துணையாக யாருமில்லாமல் ரொம்பவே பயந்திருப்பாய் இல்லையாடா?'' என உருக்க மான குரலில் கேட்டான் விமல்.

''ம்.'' என்றவள், ''குழந்தையோடு தப்பிவிட்டால் போது மென்று இங்கே வந்தேன். எல்லாவித கஷ்டத்திற்கும் ஒரே ஆறுதல் அபி மட்டும்தான்'' என்றவளின் குரல் அடைத்தது.

''புரிகிறதுடா!'' என்று அவள் நெற்றியில் முத்தமிட்ட வன் குரலும் கரகரத்தது.

சில நிமிட மௌனத்தின் பின்னர், ''இனி இந்தப் பேச்சு வேண்டாம்'' என அவள் கூற ஆரம்பித்த அதே சமயம், அவனும் அதே போல கூற முற்பட, இருவருக்குமே சிரிப்பு வந்து விட்டது.

சிரித்தபடியே எழுந்தவன், ''ஒரு நிமிடம்'' என கூறி கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றான்.

அவன் திரும்பி வந்தபோது கையில் ஒரு வெள்ளி குங்குமச் சிமிழ் இருந்தது. அதிலிருந்த குங்குமத்தை ஒரு விரலால் தொட்டு எடுத்தவன் அவள் நெற்றியிலும், வகிட்டிலும் வைத்துவிட்டு மென்மையாக இளநகை புரிந்தான்.

அவள் மனதினுள் முட்டி மோதி பேயாட்டம் போட்டுக் கொண்டிருந்த எல்லாக் கேள்விகளுக்கும், அவனின் இந்த ஒரே ஒரு செயல் பதிலளித்து விட்டது.

குங்குமம் வைத்த அவனுடைய வலது கையில் தன் பட்டிதழ்களைப் பதித்து மோகனப் புன்னகை பூத்தாள் அஜந்தா.

## 12



மறுநாள் காலையில் அவனுக்கு முன்பாக எழுந்தவளின் மனம் 'ஜிவ்'வென்று வானவெளியில் பறக்க ஆரம்பித்து விட்டது.

என்னவோ அவனோடு இணைந்து வாழ ஆரம்பித்து ஜென்ம, ஜென்மங்கள் ஆகிவிட்ட மாதிரி ஒரு உணர்வு உண்டானது அவளுக்கு.

அஜந்தா குளித்து முடித்த பின்னரும், அவன் உறக்கத்திலேயே இருக்கவும், தோட்டத்திற்கு வந்தாள்.

ஜாடியிலிருந்த அழகிய 'ஆர்கிட்' வகை வண்ண மலர்களை ரசனையோடு வருடியவளைப் பார்த்துவிட்டு, பல



வண்ண ரோஜா மலர்களைக் கொண்டு வந்து அவளிடம் பணிவுடன் கொடுத்தான் தோட்டக்காரன்.

அந்தப் பூக்களில் இருந்த தங்க வண்ண, பச்சை வண்ண ரோஜாக்களைப் பார்த்தவள், வியப்புடன் அது பற்றி விசாரிக்கவும் மிகுந்த உற்சாகத்துடன் அவளை அழைத்துச் சென்று காட்டினான் தோட்டக்காரன்.

"இந்தச் செடிகளையெல்லாம் ஏன் தொட்டியிலேயே வைத்திருக்கிறீர்கள்?" என வினவினாள் அஜந்தா.

"அய்யாதாம்மா எதையுமே பார்க்க விருப்பமில்லாமல் அப்படியே விட்டுடச் சொல்லி விட்டார். இப்ப நீங்க இதையெல்லாம் எப்படி வைக்கலாம் என்று சொன்னீங்கன்னா அப்படியே செய்திடுவேன்மா" என்று பணிவோடு கூறினான் அவன்.

"யோசித்துவிட்டுச் சொல்கிறேன்" என்று கூறி முறுவலித்து விட்டு நடந்தபோது, எதிரே விமல் பிரபு 'ஸ்போர்ட்ஸ் டிரஸ்'சில் வந்து கொண்டிருந்தான்.

அவளருகே வந்தவன் அவள் கன்னத்தில் தட்டி விட்டு கண் சிமிட்ட கீழ்வானமாக முகம் சிவந்தாள் அஜந்தா.

"வ... வந்து இந்தச் செடிகள், பூக்கள் எல்லாம் ரொம்..ப அழகாயிருக்கிறது" என்று திக்கினாள் அஜந்தா.

"ம். அப்படியா!" என கூறி அவளைப் பார்வையாலேயே சுவைத்தவன், ஒற்றை விரலால் அவள் முகத்தை நிமிர்த்தியபோது, "அம்..மா" என்று அபியின் சிணுங்கும் குரல் கேட்கவும், "ஓ.கே. நான் ஜாகிங் கிளம்புகிறேன் அஜி" என்று கையசைத்து விட்டுச் சென்றான் விமல்.

காலை உணவு வேளையின்போது அந்த உயர்வான உணவு வகைகள் எதுவுமே பிடிக்கவில்லை என்று கத்தினான் அபி.

எதை வைத்தாலும் இது வேண்டாம், அது வேண்டாம் என்ற பதிலையே அவன் கூறவும், ''சத்தம் போடாமல் முதலில் இதைச் சாப்பிடு. பிறகு நீ கேட்பதை செய்து தருகிறேன்'' என்றாள் அஜந்தா.

ஆனால் அபி ஒருவாய் கூட சாப்பிடாமலேயே இருக்கவும், ''இதென்ன பிடிவாதம் அபி?'' என்று சற்று அதட்டலாகக் கேட்டான் விமல்.

''எனக்கு பிடிக்...கலைப்பா' என்று உதட்டைப் பிதுக்கியபடியே உடனே பதில் வந்தது.

''பிடிக்கலைனா அப்படியே விட்டுவிட முடியாது. புரிந்ததா? உனக்கு என்னவெல்லாம் வேண்டுமென்று சொல்லி விட்டால் செய்து தருவார்கள். இனி இப்படிக் கத்தி அடம் பிடிக்கக் கூடாது சரியா. இப்போது இந்த பட்டாணி குருமா தோசையை கொஞ்சமாவது சாப்பிடு'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றான் விமல்.

ஏனோ விமல் பேசியது மனதை உறுத்தியது அஜந்தாவிற்கு. இவ்வளவு அதட்டலாக இல்லாமல், சற்று மென்மையாகக் கூறியிருக்கலாமோ என்ற எண்ணம் தோன்றியது.

'ஒருவேளை, தன் பிள்ளை இல்லையே என்ற காரணத்தாலா? ஊஹூம். இதைப்பற்றி இதற்கு மேலே எதுவும் நினைக்கக்கூடாது' என்ற முடிவுடன் மகனைத் தேடிச் சென்றாள் அஜந்தா.

வீட்டின் உட்புறத்தில் பெயிண்ட் அடித்துக் கொண்டிருந்ததை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான் அபி.



தாயைப் பார்த்துவிட்டு அவளிடம் வந்தவன், அந்த விரிந்து பரந்திருந்த மாடியின் இடது பக்கமிருந்த ஒரு பெரிய அறைக்குள் அவளை அழைத்துச் சென்று நிறுத்தினான்.

ஒரு பக்கத்து முழு சுவரிலும் மிக அழகாக வரையப்பட்டிருந்தது படங்கள். அழகான புள்ளி மான்கள் ஓடையின் அருகே மேய்ந்து கொண்டிருக்க, அருகிலே தோகை விரித்தும், மரத்தில் ஒய்யாரமாக அமர்ந்துமிருந்தது மயில்கள். இடையிடையே மஞ்சள் வண்ண மைனா, குயில் என பறவைகள் பறக்க, இரண்டு ஜோடி வெள்ளை முயல்கள் ஓரிடத்தில் விளையாடுவது போல வரையப்பட்டிருந்தது படம்.

''ரொம்ப நல்லாயிருக்கு இல்லையாம்மா?'' என கேட்டவன், ''இது தான் என்னோட 'கேம்ஸ் ரூம்' என்று அப்பா சொன்னாங்களாம். அந்த அங்கிள் சொன்னாங்க. ரைட் சைடில் கேரம், டென்னிஸ் இங்கே விளையாட்டுச் சாமான்கள்'' என கூறி பெருமையாகச் சிரித்தான் அபி.

அவளுக்கும் புன்னகை மலர்ந்தது.

மாலையில் அலுவலகம் முடிந்து வீடு திரும்பிய விமலின் கையில் நிறைய வீடியோ கேசட்டுகள் இருந்தது.

எல்லாமே கார்ட்டூன் படங்கள். அதிலும் 'டாம் அன்ட் ஜெர்ரி' கார்ட்டூனைப் பார்த்தபடி மகனுடன் இணைந்து சிரித்த விமலைப் பார்த்தபோது, காலையில் தான் அப்படி நினைத்தது தவறு என்று உணர்ந்து மனதினுள்ளே மன்னிப்பு வேண்டியவளுக்கு மகிழ்ச்சி தோன்றியது.

கார்ட்டூனைப் பார்த்தபோது அவளுக்கும் சிரிப்பு வந்தது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையென்பதால் இரவு வெகு நேரம் படம் பார்த்து விட்டு காலையில் லேட்டாக அவள் எழுந்தபோது, விமல் பிரபு தன் ஜாகிங்கை முடித்து விட்டு பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்.

'குட்மார்னிங்' என்று முறுவலித்தவளைப் பிடித்து தன் அருகே அமர வைத்தான் அவன்.

"வீட்டின் முழு வேலையும் முடிந்து விட்டது அஜி. அதற்கு விழா ஒன்றை ஏற்பாடு செய்து அதில் உன்னையும், அபியையும் எல்லாருக்கும் அறிமுகப்படுத்தலாம் என்றிருக்கிறேன். என்ன சொல்கிறாய்?" என கேட்டான் விமல்.

மெல்ல தலையசைத்தாள் அஜந்தா.

"சரி. இன்று ஒரு சின்ன 'பிக்னிக் டிரிப்' போகலாமா? அங்கே போனால் உனக்கு சந்தோஷமாக இருக்கும். அபியை ரெடி பண்ணு" என்று கூறிவிட்டு குளிக்கச் சென்றான்.

மூவருமாக சென்ற இடம் 'கோனார்க்' பெரும்பாலும் கல்லால் கட்டப்பட்ட 'சூரிய பகவான்' கோயில் அது. அருகிலேயே கடற்கரையும் இருந்தது.

மனதிற்கு அமைதியைக் கொடுத்த கோவில் சித்திரங்களை தன்னை மறந்து ரசித்துக் கொண்டிருந்தாள் அஜந்தா. அப்போது அவளை இரு விழிகள் வியப்போடு உற்று நோக்கியதை கவனிக்கவில்லை அவள்.

விமலும், அபியும் கையில் பழம், ஃபாண்டா பாட்டிலோடு திரும்பி வருவதைப் பார்த்த உருவம் அவ்விடத்தை விட்டு சற்று மறைவாக விலகிச் சென்றது.



கோவில் மண்டபத்தில் அமர்ந்து மதிய உணவை சுவைத்தார்கள். பின்னர் சிரிப்பும், பேச்சுமாக கோவிலைச் சுற்றிவிட்டு கடற்கரைக்குச் சென்றார்கள்.

கடல் அலையில் அவர்களுடன் சேர்ந்து விளையாடிய விபுவைப் பார்க்கவே ஆச்சரியமாக இருந்தது அவளுக்கு.

விபுவிடம் எப்போதுமே ஒரு கம்பீரம் இருக்கும். தானும் சிரித்து, மற்றவர்களையும் சிரிக்க வைப்பவன் தான் என்றாலும், மற்றவர்களுடன் விளையாட்டிலெல்லாம் கலந்து கொள்ள மாட்டான்.

சென்னையில் இருந்தபோதுகூட, அஜந்தா கடல் நீரில் விளையாடி மகிழ்வதை ஸ்டைலாக காரில் சாய்ந்து கொண்டு புன்னகையோடு ரசிப்பான். அவ்வளவே.

ஆனால் இன்று பிள்ளையோடு சேர்ந்து அவனும் விளையாடியதைப் பார்த்தபோது மேலும் மகிழ்ந்தாள் அஜந்தா.

வாழ்க்கை எவ்...வளவோ இனிமையாக இருப்பதாகத் தான் அவளுக்குத் தோன்றியது.

அபி ஸ்கூலுக்கும், விமல் ஆபீஸிற்கும் சென்ற பின்பு வீட்டில் தனியாகத்தான் இருந்தாள் அவள்.

"நானும் ஆபீஸ் வருகிறேனே?" என கேட்டவளிடம், "நீ இது வரை கஷ்டப்பட்டதெல்லாம் போதும். ஜாலியாக வீட்டிலேயே இரு" என்று அவள் கன்னத்தை வருடியபடி புன்னகையோடு மறுத்து விட்டான் விமல் பிரபு.

அவன் கூறியபோது பெருமையாக இருந்தபோதும், ஓரிரு வாரத்திலேயே போரடிக்கவும் ஆரம்பித்து விட்டது.

எனவே பெரும்பாலும் ஷாபிங், கோவில், புதிய தோட்டம் அமைப்பது என நேரத்தைச் செலவிட்டாள், அவள்.

ஒரு நாள் தன் குடும்பத்தை பூஜாவின் நர்சரிக்கு அழைத்துச் சென்றான் விமல் பிரபு.

பெரிய நர்சரியின் ஒரு பக்கமாக 'பொக்கே ஷாப்' இருந்தது. பல வண்ண மலர்களையும் சேர்த்து 'பொக்கேவாக' செய்து கொண்டிருந்தார்கள். பூவின் தடித்த காம்புகளை அழகாக வெட்டியது மிஷின்கள்.

அஜந்தாவிற்கு நர்சரியை சுற்றிக் காட்டினாள் பூஜா.

இலகுவாக வர்ணிக்க முடியாத பூக்களைக் கொண்ட எத்தனையோ செடிகளை வாங்கிய அஜந்தா, பவள மல்லி, கொடி மல்லி, ஜாதி மல்லி, செண்பகம், செவ்வந்தி செடிகளையும் மறக்காமல் வாங்கிக் கொண்டாள்.

அபியை தோளில் தூக்கிக் கொண்டு விமல் முன்னே செல்ல, அஜந்தா, பூஜா பேசியபடியே மெதுவாக வந்தார்கள்.

"மிஸ்டர் விமலைப் பிரிந்து இவ்வளவு நாள் எப்படியிருந்தீர்கள் அஜந்தா. ஊடலா?" என்று கண்ணடித்தாள் பூஜா.

"அப்படியெல்லாம் இல்லை" என்று முறுவலித்தாள் அஜந்தா.

"எப்படியிருந்தாலும் சரி. உங்கள் இருவரின் உள்விவகாரம் பற்றி தெரியாது, என் அண்ணாவைப் பற்றி கூறியதைக் கேட்டுவிட்டு உங்கள் விமலுக்கு என்னமாக கோபம் வந்தது. ஏன் கோபம் என்பதெல்லாம் இப்போது தானே தெரிகிறது. இதுதான் ஊடலிலும், காதலென்பதா? உங்கள் ஆளிடம் சொல்லி, காதலோடு உங்களைப் பார்த்து ஒரு 'லுக்' விடச் சொல்லுங்களேன். பார்க்க வேண்டும் போல் ஆசையாக உள்ளது. ப்ளீஸ்" என கேட்டாள் பூஜா.



கன்னங்களில் செம்பூக்கள் படர, "ச்சு. பேசாதிரு பூஜா" என்று கூறியபோதும் மின்னல் கீற்றாக பற்கள் ஜொலிக்க சிரித்துவிட்டாள் அஜந்தா.

காரின் கதவைத் திறந்தபடியே மனைவியைத் திரும்பிப் பார்த்த விமலின் பார்வை புன்னகையோடு மென்மையாக மாறவும்,

"ஹே...ய்!" என்று மெதுவாக கத்திய பூஜா, "உங்க ஆள், உங்களைப் பார்க்கும் பார்வையில் தான் அடேயப்பா எவ்...வளவு ரொமான்ஸ். ம்..ம்.. ஜமாயுங்கள்" என்று புன்னகையோடு கூறி விடைகொடுத்தாள் பூஜா.

வீட்டை விட்டு வெளியே வரும் சமயங்களில் தன்னை யாரோ உற்று நோக்குவது போல் தோன்றியது அஜந்தாவிற்கு. திரும்பிப் பார்த்தால் யாருமிருக்க மாட்டார்கள்.

அநாகரீகமாக வெறிக்கும் ஏதாவது இரண்டு கால் தெரு நாயாக இருக்கும் என்று அசட்டையாகச் சென்றுவிடுவாள் அவள். ஒருவேளை, கொஞ்சம் கவனமாக இருந்திருந்தால் ஒரு பயங்கரம் ஏற்படாது தடுத்திருக்கலாமோ என்னவோ?



## 13

'சித்திரச் சோலை' வீட்டு விழா அழைப்பிதழ்கள் வந்திருந்தது. தங்களின் முதல் சந்திப்பு ஏற்பட்ட நினைவில் இப்பெயரைத் தேர்ந்தெடுத்தார்கள்.

விழாவிற்கு ஒரு வாரம் இருந்தபோதே உடைகள், அணிமணிகள் என்று தேர்வு செய்து முடித்தார்கள்.

அன்று மாலை பள்ளியிலிருந்து வந்ததும் ஹாலில் இருந்த டி.வி.யை 'ஆன்' பண்ணி கிரிக்கெட்டை பார்க்க ஆரம்பித்துவிட்டான் அபி.

ஏழு மணிக்கு மேல் ஆனபோதும் டி.வி. முன்னா லேயே அமர்ந்திருந்தவனிடம், ''டி.வி. பார்த்தது போதும் அபி. ஹோம் ஒர்க்கைச் செய்'' என்று சிலமுறை கூறிப் பார்த்தவள், ''நீங்களாவது சேனலை மாற்றுங்கள் விபு'' என கணவனிடம் கூறினாள் அஜந்தா.

''மாத்தினீங்கன்னா எனக்கு கோபம் வரும்பா. சொல் லிட்டேன்'' என்றான் மகன். அப்போதும் பார்வை டி.வி.யில்தான் இருந்தது.

சேனலை மாற்றாத போதும், ''ஹோம் ஒர்க்' செய்யாமல் நாளைக்கு ஸ்கூலில் உதை வாங்கப்போகிறாய்'' என கூறி முறுவலித்தபடியே எழுந்தான் விமல் பிரபு.

''அடியெல்லாம் வாங்கமாட்டேன்'' என்று சொல்லிய வன், ''ஏம்மா மாத்தினீங்க. கிரிக்கெட்ட போடுங்கம்மா'' என்று கத்தினான் அபி.

''முடியாதுடா. நீ ஃபஸ்டு எழுந்திரி'' என்று அவள் முடிக்கும் முன்பாகவே டி.வி. கண்ணாடி 'நச்'சென்று விரிசலோடிவிட்டது.

டீபாயின் மீதிருந்த கனமான பேப்பர் வெயிட்டை எடுத்து டி.வியை நோக்கி வீசியிருந்தான் பிள்ளை.

யோசிக்காது செய்துவிட்டபோதும், உடனே அபியின் கண்களில் பயம் தோன்றிவிட்டது.



கோபமாக எழுந்துவந்த அஜந்தா வீசிய கை மகனின் உடம்பில் பட்டிருந்தால் அந்த இடம் தடித்துப் போயிருக்கும்.

ஆனால் அவளின் முகத்திலேயே உள்ளத்து உணர்வு களை அறிந்தவனாக, மகனைச் சட்டென்று தன்னருகே விபு இழுத்துக்கொள்ள, அவளின் அடியை காற்று ஏற்றுக்கொண்டது.

''அவனை விடுங்கள் விபு. இந்த வயதிலேயே இவனுக்கென்ன இவ்வளவு கோபம். ராஸ்கல்'' என்று அதட்டியவளை, ''ஷட் அப் அஜி'' என ஒரே வார்த்தையில் அடக்கினான் அவன்.

''நீ இவனைத்திட்டி, அடித்துவிட்டால் உடைந்த டி.வி. மீண்டும் ஒட்டிக் கொள்ளுமா? சராசரி பெண்களைப் போலத்தானே நீயும் நடந்து கொள்கிறாய். உடைத்தது தப்பென்று அவனே பயந்து கொண்டிருக்கும்போது, நீ வேறு அதட்டவேண்டுமா? நீ செய்வது மட்டும் தப் பில்லையா?'' என கோபமாகக் கேட்டவன் பிள்ளையோடு மாடிக்குச் சென்றான்.

'சாரி' கேட்டு அழுத மகனை சமாதானப்படுத்தி உறங்க வைத்துவிட்டு கீழே வந்த போது, லேசாக கண்கள் பளபளக்க அதே இடத்தில் அமர்ந்திருந்தாள் அஜந்தா.

''சாரிம்மா'' என்று அவள் தலையை மென்மையாக வரு டியவன், ''ஆத்திரத்தில் தப்பும், தவறும் செய்வது மனித இயல்பு தானே அஜி. அதை ஒரு பெரிய விஷயமாக நினைத்து தண்டிப்பது சரியாகாதும்மா. அதுவும் குழந்தை களின் மனம் வலிக்கும்படி நடந்து கொள்ளவே கூடாதுடா.

இதனால் அவர்களின் இயல்பான உணர்வுகளை அவர்கள் வெளிப்படுத்துவதேயில்லை. இன்று பெரும்பாலான பிள்ளைகள் வீட்டில் இருப்பவர்கள் திட்டுவார்களோ, அடித்து விடுவார்களோ என்ற எண்ணத்தில் பயந்து கொண்டுதான் படிக்கிறார்கள், சாப்பிடுகிறார்கள். இயல்பாகவும், சுதந்திரமாகவும் சிந்திக்கும் திறனே இல்லாமல் போய்விடுகிறார்கள். நம் பிள்ளைக்கும் அப்படியொரு நிலை ஏற்பட்டால் அது அவனுடைய எதிர்காலத்திற்கு நல்லதா சொல்?" என கேட்டான் விமல் பிரபு.

"அவன் என்ன செய்தாலும் எதுவும் கேட்கக் கூடாது என்கிறீர்களா?" என்றவளின் குரலில் இன்னும் கோபம் மிச்சமிருந்தது.

"குழந்தையை அடித்துதான் திருத்தவேண்டுமென்பதில்லையே அஜி. கோபப்படவேண்டிய சமயத்தில் எதுவுமே பேசாமல் இருந்து பாரேன், பிறகு அவனே தேடிவந்து சாரி கேட்பான்" என்று எடுத்துக் கூறினான் விமல்.

விமல் கூறியது சரியே என்பதுபோல் மறுநாள் தயங்கித் தயங்கி தாயின் அருகே வந்து ஒட்டி உட்கார்ந்து கொண்டு "சாரிம்மா. இனி இப்படிச் செய்யமாட்டேன்" என்று கூறினான் அபி.

மெல்ல முறுவலித்து மகனை அணைத்து முத்தமிட்டாள் அஜந்தா.

அன்று மாலைக்குள் புதிய டி.வி. ஒன்று குடியேறியது.

இரண்டு நாள் கழித்து, "நாளைக்கு ஷாப்பிங் போக வேண்டும் அபி. எங்கேயும் விளையாடப் போய்விடாதே" என்றாள் அஜந்தா.



"நாளைக்கா? நான் வரலைம்மா. கிரிக்கெட் பைனல். அப்பாகிட்ட 'பெட்' கூட கட்டியிருக்கிறேன். ப்ளீஸ்மா" என்று மறுத்தான் மகன்.

"மதியத்திற்குள் வந்துவிடலாம்டா" என்றாள் அவள்.

மீண்டும் மறுத்த மகனிடம், "ரெண்டு மணிநேரம் தானே அபி. போய் விட்டு வா. அம்மா எதையாவது மறந்துவிட்டால் கூட நீ ஞாபகப்படுத்தலாம் இல்லையா?" என கூறி பிள்ளையைத் தலையாட்ட வைத்தான் விமல்.

மறுநாள் விமல் அலுவலகம் கிளம்பும் முன்பாகவே, 'ஸ்கோர்' பார்க்க வேண்டும் என்று, தந்தையிடமிருந்து ஒரு 'செல்போனை' வாங்கிக் கொண்டான் அபி.

"ஐஸ்கிரீம் அதிகம் சாப்பிடாதேடா" என மகனிடம் கூறிவிட்டு, கண்ணசைவில் மனைவியிடம் விடைபெற்று கிளம்பினான் விமல்.

கார் சாவியை எடுத்துக் கொண்டு வந்தவள் டிரைவரை அழைத்து, வீட்டிற்கு அலங்கார வேலை செய்ய வரும் ஆட்களை கவனித்து, அவர்கள் கேட்பதை செய்து தரச் சொல்லிவிட்டு கிளம்பினாள் அஜந்தா.

நகரின் பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸின் கார் பார்க்கிங்கில் காரை நிறுத்திவிட்டு, மகனோடு உள்ளே சென்றாள் அஜந்தா.

அவர்களை உற்றுநோக்கியபடியே ஒருவன் பின்னாலேயே வருவதை அவர்கள் கவனிக்கவில்லை.

சற்றுநேரம் தாயோடு சுற்றியபடியே செல்போனை நோண்டிக் கொண்டிருந்த அபி, "அம்மா நாம வீட்டிற்கு போவதற்குள் மேட்சே முடிந்துவிடும்." என சோகமாகக்

கூறியவன், "கீழ் மாடியில் டி.வி. ஓடிக் கொண்டிருக்கிறது. நான் அங்கே போகட்டுமாம்மா. போகும்போது வந்து கூட்டிப் போங்க." என கண்ணில் ஆசையோடு கெஞ்சினான் அபி.

"உன்னை கூட்டிக் கொண்டு வந்ததே வேஸ்ட்டுடா. சரிபோய் பார். வேறு எங்கேயும் போகக்கூடாது" எனக் கூறினாள் அவள்.

"தாங்க்ஸ்மா!" என்று கூறியவன் சிரித்துவிட்டு கீழே ஓடினான்.

டி.வி. யாருமின்றி தனியே தான் ஓடிக் கொண்டிருந்தது. அபி கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்தபோது நடுத்தர வயது மனிதன் அங்கே வந்தான்.

'சிக்ஸர்' அடித்ததைப் பார்த்து கைதட்டிய அபியை, திரும்பிப் பார்த்து சிரித்துவிட்டுச் சென்றார்கள் சிலர். டி.வி.யிலேயே முழு கவனமாக இருந்த அபி, தன்முகம் நோக்கி, பின்புறமிருந்து ஒரு கை நீண்டதை கவனிக்கவில்லை.

சாமான்களுக்கு பில்போட்டு காரில் ஏற்றச் சொல்லிவிட்டு, மகன் சொன்ன இடத்திற்குச் சென்றுபார்த்தால் அங்கே யாருமேயில்லை. 'எங்கே போயிருப்பான்' என்று எல்லா இடங்களிலும் வேகமாகத் தேட ஆரம்பித்தவளின் மனம் ஏனோ படபடத்தது. அபி எங்கேயும் இல்லையென்று தெரியவும் கால்கள் நடுங்கியது அவளுக்கு. பக்கத்தில் இருந்த செக்யூரிட்டி அவளை ஒரு நாற்காலியில் உட்கார வைத்து, 'என்னவென்று' விசாரித்தார்.

"என்... என்னோட குழந்தையைக் காணவில்லை. இங்கேதான் டி.வி. பார்க்க வந்தான்" என தொண்டையடைக்க கூறவும், "டி.வி. பார்த்துக் கொண்டிருந்த குழந்தையாம்மா? நீங்க கடைக்குள்ள வந்தபோது, உங்க பின்னாடியே வந்தாரே ஒருவர், அவருதான் பிள்ளை தூங்குது வெளியே கார்ல படுக்க வைக்கிறேன் என்று நான் கேட்டபோது சொல்லிட்டுப் போனாரே" என்று தெரிவித்தான் அவன்.



என்னோடு வந்தவரா? கடவுளே அப்படி யாரும் வரவில்லையே. என்று சற்றுநேரம் பிரம்மை பிடித்தவளைப் போல இருந்தவளிடம் ஒரு டம்ளர் தண்ணீரைக் கொடுத்து குடிக்க வைத்தார்கள்.

அதன் பின்னரே வேகமாக சிந்தித்தாள் அஜந்தா. அவர்களைப் பின்தொடர்ந்தே கடைக்குள் வந்திருக்கிறான். அபி தனியாக இருக்கவும் சுலபமாக தூக்கிச் சென்றிருக்கிறான்.

சமீப காலமாக யாரோ பின்தொடர்வது போலிருந்த உணர்வு உண்மைதானோ? அவன்தான் பிள்ளையைக் கடத்திக் கொண்டு போயிருப்பானோ? அய்யோ கடவுளே என் பிள்ளைக்கு எந்த ஆபத்துமின்றி காப்பாத்து என வேண்டிக்கொண்டவள் அழுகையை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, "சார் நான் ஒரு போன் செய்துகொள்கிறேன்" என்று கூறிவிட்டு கணவனுக்கு போன் செய்தாள் அஜந்தா.

ஆனால் விமல் செல்லை 'ஆஃப்' பண்ணி வைத்திருந்தான். அலுவலக லேண்ட் லைனுக்கு டயல் செய்தபோது அது பிஸியாகவே இருந்தது. நாலுதடவை முயற்சி செய்து பார்த்தவள், இனி தாமதிக்கக் கூடாது என்று வேகமாக காருக்குச் சென்று காரை ஸ்டார்ட் செய்து ஓட்டினாள் அவள்.

வழியில் விபத்து ஏதும் ஏற்படாமல் அவள் அலுவலகம் சென்றடைந்தது ஆச்சரியம்தான்.

வியர்த்துக் கொட்ட அலுவலகத்திற்கு நுழைந்தபோது, புதிய கம்பெனியின் கணக்குகள் பற்றி கான்பரன்ஸ் ஹாலில் விவாதித்துக் கொண்டிருக்கிறார் எம்.டி. என வரவேற்பில் கூற, 'லிப்ட்'டுக்காக கூட காத்திராது படிகளில் ஏறி படபடவென்று கதவைத் தட்டினாள் அவள்.

"டிஸ்டப் பண்ணக்கூடாது என்று சொன்னது காதில் விழலையாமா? யாரென்று பாருங்கள் சார்" என்று எரிச்சலாக கூறியது விமலின் குரல் தான்.

யாரோ கதவைத் திறக்கவும், அழுது சிவந்த கண்களும் ஓய்ந்த தோற்றமுமாக தள்ளாடியபடி எதிரே நின்றாள் அஜந்தா.

"யார் சார்?" என்று கேட்டு வாயில் புறம் திரும்பிய விமல் திகைத்துப் போனவனாக "அஜி" என்றழைத்தபடி வேகமாக அவளிடம் வந்தான்.

"என்னம்மா? கண்கள் சிவந்து ஒரு மாதிரியிருக்கிறாய். என்னவாயிற்று. சொல்லும்மா? அபி எங்கே?" என்று அவசரமாக வினவினான் விமல்.

கால்கள் தொய்ந்து அவன் தோளிலேயே விழுந்தவள், "நம் அபியைக் காணவில்லை விபு. யாரோ யாரோ கடத்திப்போய்விட்டார்கள்" என தொண்டையடைக்கக் கூறி அழுதாள்.

ஒரே ஒரு கணம் அவளோடு சேர்ந்து தள்ளாடியவன் சட்டென அருகேயிருந்த மேசையைப் பற்றிக் கொண்டான்.



சற்றும் எதிர்பாராமல் விழுந்த இடியில் அவனும் கூட ஒரு கணநேரம் கலங்கித்தான் போனான்.

ஆனால்அவன் தடுமாறியதெல்லாம், வீட்டின் மேல் விழுந்த மழைநீர் உருண்டோடி வந்து வாசலில் விழ எவ்வளவு நேரம் ஆகுமோ அவ்வளவு நேரம் மட்டும்தான் இருக்கும்.

தன்மீது மயங்கிக் கிடந்தவளை அழைத்துக் கொண்டு போய் நாற்காலியில் உட்கார வைத்தான். அருகே அதிர்ச்சியோடு நின்றிருந்தவர்கள் வாட்டர் பாட்டிலை நீட்டவும், அவள் முகத்தில் நீர் தெளித்து குடிக்கவைத்தவன், "பயப்படாதேம்மா. அபியை எப்படியும் கண்டுபிடித்து விடலாம். என்னை நம்பு" என குரல் கரகரக்க கூறியவன், "கடத்திப்போய் விட்டார்கள் என்று நிச்சயமாகத் தெரியுமா? நன்றாகத் தேடினாயா?" எனக் கேட்டான் விமல்.

"அபியை ஒருவன் காரில் படுக்கவைப்பதாகக் கூறி தூக்கிச் சென்றதாக செக்யூரிட்டி சொன்னார். அவன் எங்களை பாலோ பண்ணிக் கொண்டு தான் கடைக்குள்ளும் வந்திருக்கிறான்" என்று மேலும் விபரம் சொல்லியபோது போன் அழைப்பு ஒன்று வந்தது. விழிகளில் அச்சம் படர அவள் பார்த்தபோது,

"ஹலோ!" என்றான் விமல் பிரபு.

"என்ன பங்காளி போன் அடித்தால் சட்டுனு எடுக்கற பழக்கமில்லையா? ஏழு வாட்டி அங்கிட்டும், இங்கிட்டும் போயிட்டுதான் உங்கிட்ட வருமா?" என நக்கலோடு கேட்டது எதிர்முனைக் குரல்.

சட்டென கண்கள் கூர்மை பெற, "யார் நீ?" எனக் கேட்டான் விமல்.

"என் போட்டோவை கம்ப்யூட்டர்ல அனுப்பினா அடையாளம் தெரிந்துகொள்வாயா? அனுப்பட்டுமா?" என மீண்டும் நக்கலாகப் பேசினான் அவன்.

"இப்போது உனக்கு என்ன வேண்டும்?" என்று பற்களைக் கடித்தபடி கேட்டான் விமல்.

"உனக்கு சொந்தமான சொத்து ஒன்று எனக்கு வேணும். அது என்ன ஏதுங்கிறதப் பத்தி மறுபடி பேசற போது சொல்லறேன். உன் பிள்ளை என் இடத்தில தான் இருக்குது. நீ போலீசுக்கு போகமாட்டேனு நினைக்கிறேன். மீறிப்போனாய் என்றால் உன் புது வீட்டு விழாவுக்கு உன் பையனைப் பார்சல் பண்ணி பரிசாக அனுப்பிவிடுவேன் ஜாக்கிரதை" என்ற மிரட்டலோடு பேச்சை துண்டித்தான் அந்த வில்லன்.

"அபி. அபியைப் பற்றிய செய்திதானே. அவனுக்கு என்னவாயிற்று? சொல்லுங்கள். சொல்லுங்கள்" என்று கணவனை உலுக்கினாள் அஜந்தா.

"பயப்படாதேம்மா. தைரியமாயிரு" என்று அவள் முதுகை மெல்ல வருடி தெம்பூட்ட முயன்றான் விமல்.

"என்னால் தாங்கமுடியலையே விபு. நெஞ்செல்லாம் அடைக்கிறதே. அபிக்கு எதுவும் ஆகிவிடாதே, திரும்பக் கிடைத்துவிடுவான் தானே" என்று உயிரை கண்களில் தேக்கியபடி கேட்டாள் அவள்.

அவள் கையைப் பற்றி அழுத்தியவன், "அபி கிடைப் பதற்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன் அஜி. என்னை நம்பு. அதிக பட்சமாக அவன் பணம்தானே கேட்பான், எவ்வளவு கேட் டாலும் கொடுத்துவிட்டு குழந்தையை மீட்டுவிடலாம்.



அவன் கேட்பது நம் சொத்து முழுமையுமாக இருந்தாலும் சரிதான். புரிந்ததா?" என கூறி அவளைத் தைரியப்படுத் தினான் விமல் பிரபு.

இரவு ஏழு மணி ஆனபோதும் அந்த வில்லனிட மிருந்து எந்த போனும் வராது போகவே, அவனும் உள்ளூர சற்று பதட்டமாகத்தான் இருந்தான்.

"அபிக்கு பசிக்குமே. சாப்பிட ஏதாவது கொடுத்திருப் பானா இல்லையானு தெரியலையே" என்று தவிப்போடு புலம்பினாள் அஜந்தா. அப்போது போன் அடிக்கவும் வேக மாகச் சென்று ரிசீவரை எடுத்தவன், வேதனையில் தொய்ந்திருந்த மனைவியின் முகத்தைப் பார்த்து தாங்க முடியாதவனாக, "இதோ பார், உனக்கு எவ்...வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன்..." என கூறியபோது எதிர்முனையில், "அப்...பா. அப்பா!" என்று அழுகையு னூடே பிள்ளையின் குரல் கேட்கவும், "அபி. அபிம்மா. எப்படிடா கண்ணா இருக்க. அழாதேடா. அப்பா எப்படி யும் உன்னை வீட்டிற்கு கூட்டி வந்துவிடுவேன். நீ பயப்பட வேண்டாம் சரியா? போனை அந்த ஆளிடம் கொடுப்பா" என கூறினான் விமல் பிரபு.

"அந்த ஆள் இங்கே இல்ல டாடி. வெளியே போயிட் டான். உங்க செல்போன்ல தான் பேசறேன். எனக்கு பயமா யிருக்குப்பா. எலியெல்லாம் ஓடுது. கேண்டில் கொஞ்...சமாதான் இருக்கு. இருட்டாயிட்டா என்ன பண்ணட்டும்? சினேக், பூச்சி வந்து கடிச்சிடுமாப்பா?" என குரலில் நடுக்கத்தோடு பிள்ளை கேட்கவும், உடம் பில் இருக்கும் நரம்பெல்லாம் வெடித்துவிடும்போல இறுகிப்போனான் விமல் பிரபு.

''அப்படியெல்லாம் எதுவும் ஆகாதுடா கண்ணா. அழாதே'' என கூறிவிட்டு அஜந்தாவை அழைத்து ஒரிரு நிமிடம் பேசவிட்டவன், மீண்டும் அபியோடு பேசினான். அவன் இருக்கும் இடம் எப்படியிருக்கிறது என விசாரித்தான், ஏனோ யோசனையோடு அவன் நெற்றி சுருங்கியது. ''அபிம்மா உன்னிடம் செல் இருப்பது அவனுக்குத் தெரியக்கூடாது சரியா? அப்பா நிச்சயம் நீயிருக்கும் இடத்திற்கு வந்துவிடுவேன். இப்போது நீ எதுவும் பேசாமல் செல்லை அப்படியே வைத்திரு'' என கூறிவிட்டு காதைத் தீட்டியவனாக உற்றுக்கேட்டான் விமல்.

''குழந்தையிடம் ஏன் பேசவேண்டாம் என்கிறீர்கள். அவன் சாப்பிட்டானா இல்லையா என்றாவது...'' என்றவளை, ''வாயை மூடு'' என அதட்டியவன், ''தெரிந்து கொண்டு என்ன செய்யப் போகிறாய்? சாப்பாட்டு கேரியலா அனுப்பப்போகிறாய்?'' என கோபமான குரலில் கேட்கவும், கொதிக்கும் நீர் முகத்தில் பட்டுவிட்டதைப் போல வெலவெலத்துப்போனவள், ஓசையற்று கண்ணீர் வடித்தாள்.

வலது கையினால் தலையைக் கோதியபடி வேதனையோடு திரும்பியவன், மனைவியின் நிலையைப் பார்த்துவிட்டு, ஓர் எட்டு முன்னே வந்து, கை நீட்டி அவளை அருகேயிழுத்து இறுக அணைத்து கழுத்து வளைவில் முகம் பதித்து, ''சாரிடா. சாரி!'' என கரகரத்த குரலில் கூறியபோதும் கூட, போனைக் காதிலிருந்து அகற்றவேயில்லை!

விமல் ஒரு பெருமூச்சுடன் போனை வைக்க நினைத்தபோது, எதிர்முனையில், ''ஏய். இந்தாடா. உனக்கு



சாப்பாடும், தண்ணியும். சாப்டுட்டு நல்ல பையனா தூங்கு. உங்கப்பன் நான் கேட்பதைத் தரும்வரை நீ இந்த இடிந்த வீட்டிலேயே தான் இருக்கப்போகிறாய்'' என்று அந்த வில்லன் சொன்னதோடு பேச்சு நின்றுபோனது.

மனைவியை அழைத்துவந்து சோபாவில் உட்கார வைத்துவிட்டு, ''அபி நன்றாக இருக்கிறான். கடத்தியவன் சாப்பாடும் வாங்கிக் கொடுத்திருக்கிறான். நீ இப்படி சாப்பிடாமல் ஒய்ந்துகிடந்தால், என்னால் அடுத்து என்ன செய்யலாம் என்று எப்படித் திட்டமிட முடியும், வந்து சாப்பிடும்மா வா'' என்று அவளை டைனிங் ஹாலுக்கு அழைத்துச் சென்றான் விமல்.

வருத்தமான முகத்துடன் சாப்பாடு பரிமாறிய வேலையாட்களின் நடவடிக்கையினால், வீடு மேலும் பேரமைதியாக தோன்றியது.

பட்டும் படாமலும் சாப்பிட்டுவிட்டு எழுந்தவளை மாடிக்கு அழைத்துச் சென்றான். ''எனக்கு மயக்கம் வருவது போலிருக்கிறது விபு'' என்று முணுமுணுத்தவளிடம், ''சற்று நேரம் கண்மூடிப் படுத்திருடா சரியாகிவிடும்'' என்று கூறிவிட்டு நடந்தவன், ஏதோ நினைத்தவனாக திரும்பி வந்து அவளை நெஞ்சோடு அணைத்து முகமெங்கும் முத்தமிட்டான்.

அவன் அணைப்பில் என்றுமில்லாத வேகமும், தீவிரமும் இருக்கவும் அவளின் மயக்கம் கூட லேசாக கலைந்துபோனது.

அவளைப் படுக்க வைத்துவிட்டு நிமிர்ந்தவனின் கையைப் பற்றி, ''எங்கே கிளம்புகிறீர்கள். அபியை கூட்டி வரவா?'' என தெளிவில்லாத குரலில் கேட்டாள் அஜந்தா.

''ம். அந்த விஷயமாகத்தான் கொஞ்சம் வேலையிருக்கு. முடித்து விட்டு வருகிறேன்'' என கூறி அவள் தலையை வருடிவிட்டு வெளியே வந்தான் விமல்.

சற்று முன் விமலின் கட்டாயத்தினால் 'தான்' குடித்த பாலில் தூக்க மாத்திரை கலந்திருப்பதை அறியாமலேயே தூக்க மயக்கத்தில் ஆழ்ந்தாள் அஜந்தா.

எந்த ஒரு விஷயத்தைப் பற்றி முடிவு செய்த பின்னரும் அதை செயல்படுத்த தாமதம் செய்வது விமலுக்குப் பிடிக்காததால், சில போன்களைச் செய்துவிட்டு உடனே காரில் கிளம்பிவிட்டான் அவன்.

அவனின் யூகம் சரியானதாக இருந்தால் நிச்சயம் நல்லதே நடக்கும் தான். ஆனால் எதிரியைப் பற்றி எதுவும் தெரியாமல், எத்தனைப் பேர் என்றும் தெரியாமல் எதையும் உறுதியாகவும் எண்ணுவதற்கில்லையே?

கார் சீறிக்கொண்டு நகரத்தைவிட்டுச் சென்றது. மரங்கள் அடர்ந்திருந்த இடத்தில் காரை மறைவாக நிறுத்தி விட்டு வேகமாக நடந்த விமல் பிரபு, சற்றே தொலைவிலிருந்து ஆச்சரியமாக பார்த்த இருவரை பார்க்கவேயில்லை!

அந்த மையிருட்டில் ஏதோ ஒரு ட ங்கிய ஒளியை மையமாக வைத்து நடந்தான் விமல்.

அவன் நினைத்தது சரிதான். அதே பழங்காலத்து வீடுதான். ஆனால் காவலுக்கு இரண்டு தடியன்கள் குடி போதையுடன் விழித்திருந்தார்கள்.

வாய்விட்டு சத்தம் போடமுடியாதபடி அவர்களின் தலையில் ஆளுக்கு இரண்டு அடிகொடுக்கவும் 'தொப்'பென்று விழுந்துவிட்டார்கள். 'வெளியே தடியன்கள் விழுந்த



சத்தம் ஒருவேளை உள்ளேயிருப்பவனுக்கு கேட்டுவிட்டதோ?' விளக்கு வெளிச்சத்தை அதிகப்படுத்திவிட்டு, கையில் துப்பாக்கியோடு கதவைத்திறந்தான் ஒருவன். ''டேய் கிட்டு என்னாடா சத்தம்?'' என்று கேட்டான் அவன். போனில் பேசியது இதே குரல்தான். அங்கே இவனைத் தவிர வேறு யாருமில்லை என்பதை உறுதியாக தெரிந்துகொண்டு, அந்த வில்லனின் முன்னே வந்து நின்று பெல்ட்டில் கைவைத்து, ''நீ என்னை இங்கே எதிர்பார்த்திருக்க மாட்டாய்தானே?'' என கேட்டு எதிரேயிருந்தவனை திகைக்க வைத்தான் விமல் பிரபு.

எதிரேயிருந்தவனுக்கு உள்ளூர யோசனை ஓடியது. முதலைக்குத் தண்ணியிலதான் பலம்னு சொல்வதைப் போல, ரவுடிசமும் அவனவன் ஊரில்தான் செல்லுபடியாகிறது. சென்னையைவிட்டு இந்த ஊருக்கு வந்து ஒரு பொடியனைக் கடத்துவது கூட சிரமமாகவே இருந்தது அவனுக்கு. ஆனாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல், ''வெளியே ரெண்டு பேரை அடித்துப் போட்டுவிட்டதால், என்னையும் அடித்துப் போட்டுவிடலாம் என்று பெரிய சினிமா கதாநாயகனைப் போல நினைத்தாயா? அதுதான் நடக்காதுடா'' என்றவன், 'ஹஹ்ஹஹ்ஹா' என வீரப்பா பாணியில் சிரித்தபடியே முதுகில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து, விமல் பிரபுவின் நெஞ்சுக்கு நேராக குறிவைக்க முயன்றபோது மீண்டும் திகைத்தான்.

ஏனெனில் பளபளவென்று புதிய துப்பாக்கியொன்றை தன் கையில் வைத்திருந்தான் விமல்.

''என்ன? கிரிமினல் வேலையெல்லாம் உனக்கு மட்டும் தான் செய்யத் தெரியும் என்று நினைத்தாயா?

உன் பழைய துப்பாக்கியை நீ அழுத்தும் முன்பாகவே, என் நவீன துப்பாக்கி உன்னை மேலே அனுப்பிவிடும். குறிபார்த்து சுடுவதில் பரிசுகள் வாங்கியவன் நான். எப்படி வசதி?'' என்றவன், ''என் மகன் எங்கே?'' என்று கடுங் கோபமான குரலில் கேட்டான்.

அந்த வில்லன் சிரித்தபோதே அபியின் தூக்கம் கலைந்து போயிற்று. தந்தையின் குரல் கேட்கவும், தடுமாறியபடியே வந்து கதவைத் தள்ளித் திறந்தது தான் தாமதம், கதவருகே துப்பாக்கியோடு நின்றிருந்த வில்லன், சட்டென்று அபியின் சட்டையைப் பற்றி அருகே யிழுத்து பிள்ளையின் நெற்றியில் துப்பாக்கி முனையை வைத்து, ''மரியாதையா துப்பாக்கியை கீழே என்பக்கமாக போடு. இல்லையோ உன் மகன் கதி அதோகதி தான்'' என்று அதிகாரமாக மிரட்டினான்.

''அப்...பா!'' என்று அழுத அபியைப் பார்த்தபடியே துப்பாக்கியைக் கீழே போட்டான் விமல் பிரபு.

விமலின் துப்பாக்கியை கையிலெடுத்துக் கொண்டு, ''இந்த கோபுவை உன் பொண்டாட்டி என்ன இளிச்சவாய னென்று நினைத்துக் கொண்டாளா? நாலு வருசத்துக்கு முன்னதான் எனக்கு 'கல்தா' குடுத்துட்டு ஓடிட்டான்னா; இப்பவும் அதே மாதிரி ஓட விட்டுடுவேனா? அங்கே என்னை ஏமாத்திட்டு வந்து, இங்கே உன்னோட டூயட்டா பாடுறா? விடமாட்டேன். விடவே மாட்டேன் அவளை. அந்த பாஸ்கர் பயலை நம்பி ஏமாந்தேன். இவளுக்காக அந்த தடிப்பயலுக்கு எவ்வளவு செலவு செய்தேன். கடைசியில் குடித்து குடித்து செத்தே போய்விட்டான் பாவி. இப்போது பார்த்தால் பிள்ளைபெற்றுக் கொண்டு உன்னோடு சந்தோசமாக இருக்கிறாள். நீ இருக்கும்



தைரியம்டா அவளுக்கு. உன் ஆசைப் பொண்டாட்டியை என் காலடியில் விழவைக்கிறேன். அந்தக் கழுதைக்கு வேறு போக்கிடம் இல்லாமல் செய்கிறேன்...'' என்று அவன் வீரவசனம் பேசியபோதே, ''ஏய்!'' என்று கை முஷ்டியை மடக்கியபடி ஓர் எட்டு முன்னே வந்தான் விமல் பிரபு.

சட்டென்று குழந்தையின் பக்கம் கோபுவின் கை திரும் பவும் அப்படியே நின்றுவிட்டான் விமல்.

இத்தனை வருடமாக நானும், அஜியும் பிரிந்திருக்க இந்த ராஸ்கல் தான் காரணமா? அஜியைப் பற்றி கேவலமாகப் பேசியதற்கு இந்தத் தெரு நாயை ஒரு வழி பண்ணியிருக்கவேண்டும். குறைந்தபட்சமாக இனி நன்றாக நடக்க முடியாதபடி ஒரு காலையாவது உடைத்திருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்ய முடியாதபடி அந்த நாய் பிள்ளையின் உயிரை அல்லவா குறுக்கே நிறுத்தியிருக்கிறான்!

விமல் பிரபு எதுவும் செய்ய முடியாது அப்படியே நிற்பதைப் பார்த்த கோபு, ''அடடா! பொண்டாட்டியைச் சொன்னால் பங்காளிக்கு கோபம் வருகிறதோ? வரட்டும். வரட்டும். அந்த ஓடுகாலியின் முடியைப் பிடித்து இழுத்துக் கொண்டு போகப்போகிறேன். இன்னொரு முறை ஓடுவாயா என்று காலிலேயே சுடுபோடுகிறேன். அப்போது வேறு வழியின்றி என் பேச்சைக் கேட்டுத் தானே ஆகவேண்டும். அப்போது பார்த்துக்கொள்கிறேன் அவளை. ஆனால் இதெல்லாம் நடக்கவேண்டுமென்றால் முதலில் உன்னை மேலே அனுப்பவேண்டும். நல்...ல பிள்ளையாக செத்துப் போடா ராஜா'' என்று கூறி சத்தம்

போட்டுச் சிரித்தபடியே விமல் பிரபுவின் நெஞ்சுக்கு குறி வைத்தான் கோபு.

முகத்தில் எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல் அப்படியே நின்று யோசித்தான் விமல்.

கலங்கிய கண்களுடன் தந்தையை நோக்கிய அபி சத்தமான குரலெடுத்து ''டாடியை சுடாதடா'' என்று கத்தினான்.

''ஏய். குட்டிப்பிசாசு! 'டா'னா சொல்ற, இரு உங்கப் பனின் கதையை முடித்துவிட்டு, உடனே உன் கதையையும் முடிக்கிறேன்'' என்று கூறிவிட்டு விமலை நோக்கித் திரும்பினான் கோபு.

அந்தச் சூழ்நிலை கொஞ்சம் பயங்கரமானதாகத்தான் இருந்தது. எதையாவது எடுத்து அடித்து விடலாமா என்று பார்த்தாலும் அந்த அறையில் ஒரு நாற்காலி கூட இல்லையென்பதைக் கண்டான் விமல்.

சிறுபிள்ளைகளுக்கு செயல்களின் பயங்கரம் தெரியாது என்பார்கள். புலி கடித்துக்கொன்றுவிடும் என்ற உண்மை தெரியாதபோது, அதைத் தொட்டு விளையாடக் கூட ஆசைப்படுவார்களாம் குழந்தைகள்!

அபியும் கூட அப்படியொரு மனநிலையில் தானிருந்தான். நிஜமாகவே அப்பாவைச் சுட்டுவிடுவானோ என்ற பயத்தில், பாண்ட் பாக்கெட்டில் இருந்த செல்போனை கையிலெடுத்து, அதை , ஒரு பெரிய ஆயுதமாக நினைத்து, அந்த கோபுவின் முகத்தை நோக்கி வேகமாக வீசினான்.

அபிக்கு பிடித்தமான விளையாட்டு கிரிக்கெட்தான். தினமும் பந்து வீசி விளையாடும் பழக்கத்தினால்,



செல்போன் குறிதவறாமல் சென்று, ஒரு பக்க கூர்முனை கோபுவின் நெற்றியை 'நச்'சென்று தாக்கியது.

விமலை ஒழித்துக்கட்டுவதிலேயே கவனமாக இருந்த கோபு, மறுபக்கமிருந்த அபியை 'பொடியன்' என்று சாதாரணமாகத்தான் நினைத்திருந்தான். இப்போது அந்தப் பொடியன் செய்த வேலையினால், வலி தாங்க முடியாதவனாக ஒரு கை தானாகவே துப்பாக்கியை எறிந்துவிட்டு அடி விழுந்த இடத்தை வேகமாக தேய்த்தது.

இப்போது கோபுவின் கோபம் அபியின் பக்கமாக திரும்பியது. கடுங்கோபத்துடன் பற்களைக் கடித்தவன், ''கழுதை! அவ்வளவு தூரத்துக்கு தைரியமாடா உனக்கு. என்னையே அடிக்கிறாயா? என்ன துணிச்சல். முதலில் உன்னைப் பரலோகம் அனுப்புகிறேன் பார்'' என்று அபியை நோக்கி தயங்காமல் சுட்டான் கோபு.

துப்பாக்கியிலிருந்து வெளிவந்த தோட்டா மகனிடம் செல்லும் முன்பாக குறுக்கே பாய்ந்து, மகனை அணைத்துக் கொண்டு கீழே உருண்ட விமலின் தோளில் குண்டு பாய்ந்தது.



## 14

மகனை அணைத்தபடியே உருண்டது ஓரிரு வினாடிகள் கூட இருக்காது. அதற்குள்ளாகவே கீழே கிடந்த துப்பாக்கியை எடுத்த விமல், மின்னல் வேகத்தில் கோபு

வின் கையில் சுட்டான். குறி தவறாது சென்று கையைப் பதம் பார்க்க, 'ஆ!' என்று ஓலமிட்டபடியே கையிலிருந்த ஒரு துப்பாக்கியையும் விட்டுவிட்டு துடித்தான் அவன்.

தரையிலிருந்து மெல்ல எழுந்த விமல், ''தெருநாயே! என் மனைவி உன் காலடியில் கிடக்க வேண்டும் என்றா சொன்னாய்? உனக்கு காலே இல்லாமல் செய்கிறேன் பார்'' என்று உறுமியவன், குழந்தையை இடதுதோளில் சுமந்தபடி, கோபுவின் கால்களை குறிவைத்து படபட வென்று சுட்டான்.

"நாயே இனி நாங்கள் இருக்கும் பக்கம் உன் பார்வை கூடத் திரும்பக் கூடாது, மீறினால் ஒரேயடியாக சமாதி கட்டிவிடுவேன் ஜாக்கிரதை'' என்று கடித்த பற்களுக் கிடையே எச்சரித்தான் விமல்.

ஆ..ஆ! என்று மேலும் அலறியபடியே கீழே விழுந் தான் அந்த கோபு. விமலின் தோளில் பாய்ந்த குண்டு வலி எடுக்க ஆரம்பித்து விட்டது. விரைவில் ஹாஸ் பிடலுக்குச் செல்லவில்லை என்றால் ஆபத்தாகிவிடும் என்று நினைத்தபோதே கண்களை இருட்டிக் கொண்டு வர லேசாகத் தள்ளாடினான் விமல்.

அப்போது திபுதிபுவென்று இரண்டுபேர் உள்ளே ஓடி வந்து, விமல் பிரபு கீழே விழாமல் பிடித்துக் கொண் டார்கள்.

"நீங்...களா!" என்று வியப்புடன் கேட்டு கண்மூடினான் விமல் பிரபு.

தேவையான சிகிச்சையளித்து சிலமணிநேரம் கழித்து ஐ.சி.யு வார்டிலிருந்து விமலை சாதாரண ஏ.சி. அறைக்கு மாற்றிவிட்டார்கள்.



மேலும் சில மணி நேரம் கடந்தபின்பு, விமல் பிரபு கண்திறந்த போது, அவன் கையைப் பற்றி நெஞ்சோடு அணைத்து, ''உயிரைக் கண்களில் தேக்கி'' என்பார்களே அதுபோல அமர்ந்திருந்தாள் அஜந்தா.

அன்றுவரை அஜந்தாவை இந்த மாதிரி ஒரு கோலத் தில் கண்டதில்லை விமல் பிரபு.

விமல் அவளை ஆசையோடு அணைத்துக் கொள்ளும் போது ஒரு வெட்கச் சிரிப்போடு அவன் தோளில் தஞ்ச மடைவாளே தவிர, தானாகவே அவனை நாடியதில்லை அஜந்தா.

பொதுவாகவே பல பெண்கள் இப்படித்தான் இருக் கிறார்களோ? தன்னைத் தொட்டு தாலிகட்டிய கணவ னுக்கு முத்தமிடக் கூட வெட்கம். கூச்சம்! இது அன்பைப் பரிமாறிக்கொள்ள ஒரு நல்ல வழி என்பது தெரிவ தில்லையோ? புரிவதில்லையோ? அஜந்தாவும் விதி விலக்கல்ல.

அப்படிப்பட்ட அஜந்தாவே இன்று கணவனின் கையைப் பற்றி, ஒவ்வொரு விரலுக்கும் தன்னை மறந்து முத்தமிடுவதும், நெஞ்சோடு அணைத்துக் கொள்வதுமாக இருந்தவள், அவனின் மறுகரம் எப்போது நீண்டு அவளின் முகத்தருகே வந்தது என்பதை கவனிக்கவே யில்லை!

கண்களில் இளநகை மின்ன, ஒரு வசீகர முறுவலோடு மனைவியின் பட்டிதழ்களை மிகமென்மையாக வருடி னான் விமல் பிரபு.

திகைப்புடன் நோக்கியவள், அவனின் பழைய முறு வலைக் கண்டு ''விபூ'' என மகிழ்ச்சியோடு அவன்

முகமெங்கும் முத்தமிட்டுச் சிரித்தவள் பிறகு அவன் மார்பிலேயே முகம் சாய்த்து "விபூ!" என்று அழுதாள்.

"அச்சச்சோ! ரொமான்ஸ் முடியட்டும் என்று வெளியே காத்திருந்தால், இதென்ன அழுகை?" என்று கேட்ட படியே உள்ளே வந்தார்கள் இரு இளைஞர்கள்.

"தாங்க்ஸ் தீபக் அண்ட் பிரமேஷ்" என்று கூறி அவர்களின் கையைப் பற்றி நன்றி தெரிவித்தான் விமல்.

"நீங்கள் எதற்கு சார் எங்களுக்கு தாங்க்ஸ் எல்லாம் சொல்லிக் கொண்டு. நீங்கள் செய்த உதவியின் முன்னால் இதெல்லாம் ரொம்ப சாதாரணம் சார். அதுவுமில்லாமல் மேடமே உங்களுக்கும் சேர்த்து பல முறை நன்றி சொல்லி விட்டார்கள்" என கூறி இளைஞர்கள் சிரித்தபோது, கண வனும், மனைவியும் அதில் இணைந்து கொண்டார்கள்.

"ஆமாம். நீங்கள் எப்படி அந்த இடத்திற்கு வந்தீர்கள். அதுவும் அந்த மாதிரி நேரத்தில்?" என கேட்டான் விமல்.

"கடற்கரைக்குச் சென்றுவிட்டு திரும்பியபோது, ஒரு கார் செடிகளின் பின்னே மறைந்து நின்றது. அதி லிருந்தவன் காரை அங்கேயே விட்டுவிட்டு நடந்தே போனான். என்னவென்று மறைந்து நின்று பார்த்தோம், சற்று நேரத்திலேயே நீங்களும் காரை விட்டுவிட்டு நடந்துபோனீர்கள். ஏனோ உங்களின் பின்னோடு போய் பார்க்கத் தோன்றியது. சற்று நேரம் காத்திருந்து பார்த்து விட்டு வந்தோம்" என்றான் தீபக்.

"நீங்கள் போனது எவ்வளவு நல்லதாகிப்போயிற்று. சரியான நேரத்தில் உங்களை ஹாஸ்பிடலில் சேர்க்க முடி யாது போயிருந்தால் கடவுளே!" என்று கண்களை மூடித் திறந்தாள் அஜந்தா.



"அப்படி எதுவும் நடந்துவிடாதபடி சார்தான் பக்காவாக பிளான் பண்ணி வைத்திருந்தாரே மேடம்! சரியான சமயத் திலே போலீஸ் வரவும் எல்லாம் சரியாக நடந்துவிட்டது. அந்த கோபு சென்னையில் தாதாவாம். கஞ்சா கடத்திய வழக்கில் போலீஸ் அவனைத் தேடிக் கொண்டிருந்ததாம். இனி அவன் வெளியே வர அதிக வாய்ப்பில்லையாம்" என்று தெரிவித்தான் பிரமேஷ்.

மீண்டும் இருவருக்கும் நன்றி கூறிவிட்டு, வீட்டு விழா முடிந்த பின்புதான் சென்னைக்குச் செல்ல வேண் டும் என்று கட்டாய உத்தரவிட்டு, புன்னகையோடு அவர்களை அனுப்பினான் விமல் பிரபு.

"இந்த நிலையிலும் விழாவை நடத்தியாக வேண்டுமா விபு? பிறகு பார்த்துக்கொள்ளலாமே" என்றாள் அஜந்தா.

"இல்லம்மா. குறித்த நேரத்தில் அது நடக்கட்டும் என்றவன், "உன்னிடம் ஒரு விஷயம் சொல்லவேண்டும் அஜி.... வந்து உன் அக்கா கணவர் பாஸ்கர் இப்போது உயிரோடு இல்லை" என்று கூறிவிட்டு அவள் முகத் தையே பார்த்தான் விமல்.

"எ.. என்ன சொல்கிறீர்கள். நிஜமாகவா?!" என்று கேட்டுவிட்டு பெருமூச்சு விட்டாள் அவள்.

"ரொம்ப நாளாகவே மனதை வேதனைப்படுத்திய விஷயம் இது. இனி எந்தவித பயமும் தேவையில்லை" என்று தன்போக்கில் கூறியவள், கணவன் ஒரு மாதிரிப் பார்க்கவும், "ஒரு உயிர் போனதில் எனக்கும் வருத்தம் தான் விபு. ஆனால், அவனால் நம் குடும்பத்திற்கு பிரச்சனை வரலாம். முக்கியமாக அபிக்கு." என்றவள் "நான் என்ன சொல்கிறேன் என்று உங்களுக்குப் புரிகிறது தானே?"

என்று அவள் கேட்டபோது அறையினுள் டாக்டர் வரவும் பேச்சு நின்றுபோனது.

"அதெல்லாம் முடியாது அங்கிள். எங்க டாடியை இப்.. பவே வந்து பாருங்க" என்று டாக்டரின் கையைப் பற்றி பேசியபடியே வந்த அபி, விமல் விழித்திருப்பதைப் பார்த்துவிட்டு "டாடி" என்று கத்தியபடி ஓடினான். லேசாக சாய்ந்து அமர்ந்திருந்த விமல் இடது கையால் மகனைத் தூக்கி பெட்டிலேயே உட்கார வைத்தான்.

அடிபட்ட இடத்தில் போட்டிருந்த கட்டை மெல்லத் தொட்டுப் பார்த்து, 'வலிக்குதாப்பா?' என கேட்டு கன்னத்தில் கை வைத்து அழுத்தினான் அபி.

பிள்ளையின் தளிர் கரத்தை எடுத்து முத்தமிட்ட விமல், தன் கழுத்தை இறுக கட்டியிருந்தவனின் முடியைக் கலைத்துவிட்டு, "துப்பாக்கி வைத்திருந்தவனையே செல்போனில் அடித்த சிங்கக்குட்டி நீயிருக்கும்போது எனக்கெப்படி வலிக்கும்?" என்று சிரித்தான் விமல்.

திடகாத்திரமானவன் என்பதால் ஒருநாள் ஓய்வெடுத்துக் கொண்ட பிறகு அவன் உடல்நிலை ஓரளவிற்கு நல்ல நிலைக்கு மாறியது.

டாக்டரின் ஆலோசனையைக் கேட்டுவிட்டு மறுநாள் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். விமலைப் பார்ப்பதற்காக கூடியிருந்த வேலையாட்களுக்கு சிரித்த முகமாக பதிலளித்து விட்டு மாடிக்குச் சென்றான்.

அன்று மாலைதான் விழா என்பதால் மதியம்வரை ஓய்வெடுத்து விட்டு, அதன் பிறகு கீழே வந்து செய்திருக்கும் ஏற்பாடெல்லாம் சரிதானா என்று ஒருமுறை சரிபார்த்தான்.



மாலை நேரம் ஆனதும் வீடு விழாக்கோலம் பூண்டது. விருந்தினர்கள் வர ஆரம்பிக்கவும் மனைவியை அழைத்துச் செல்ல வந்தவன் அப்படியே நின்றுவிட்டான். அவனைப் பார்த்த அவளும் இமைக்கக் கூட மறந்து போனாள்.

தூய வெண்நிற பட்டில் 'அடர் பச்சை' ஜரிகை பாடர் வைத்த சேலை உடுத்தியிருந்தாள். நெற்றியிலும், வகிட்டிலும் குங்குமம் இட்டிருந்தாள். பச்சையும், முத்தும் கலந்திருந்த நகைகள் கை, காதுகள், கழுத்தில் மின்னலாக ஒளிவீசி அவளை மிக அழகாக காட்டியது.

மணல் வண்ண பாண்ட், 'டார்க் பெப்ஸி புளு' சட்டையில் நெடு நெடுவென்று கம்பீரமாக நின்றான் விமல்.

ஒரு வசீகர முறுவலோடு அருகே வந்தவனிடம், "இந்த 'டிரஸ்' உங்களுக்கு ரொம்ப நன்றாக இருக்கிறது" என்று பாராட்டினாள் அவள்.

"நீ மட்டும் எப்படியாம்? இன்னும் கொஞ்ச நேரம் உன்னைப் பார்த்துக் கொண்டு இருந்தால் எனக்கு என்னென்னமோ மூடெல்லாம் வந்து உன் சேலை கசங்கிவிடும். அதனால், இப்போது கீழே போகலாம் வா" என்று கூறி அவள் கீழ்வானமாக சிவப்பதை ரசித்துவிட்டு, அவளை அழைத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தபோது, பூஜாவுடன் சேர்ந்து சிரித்துக் கொண்டிருந்த அபி தந்தையிடம் ஓடினான்.

குனிந்து பிள்ளையைத் தூக்கியபோது, "நாம ரெண்டு பேரும் ஒரே கலர் டிரஸ். 'சேம் பிஞ்ச். நியூ பிஞ்ச்பா" என்று அழகாகச் சிரித்தான் அபி.

பஃப்பே முறையில் விருந்து நடந்தது.

விழாவிற்கு வந்த பலரும் பொருத்தமான ஜோடி என்று பாராட்டினார்கள். ஹாலின் மறுபக்கம் சிலர் இசைக்கேற்ப நடனமாடினார்கள். மற்றவர்கள் கைதட்டி உற்சாகப் படுத்தினார்கள்.

பூஜாவுடன் வந்த ஜெ.பி, ''பொறுப்பான கணவன். பொறுமைசாலியான மனைவி. மணியான குழந்தை. இன்றுபோலவே என்றும் சந்தோஷமாக வாழுங்கள்'' என்று வாழ்த்தினார்.

''மேட் ஃபார் ஈச் அதர்'' என்று கைகுலுக்கிய பூஜா, இசைக்கு ஏற்றபடி டான்ஸ் ஆடிய ஒரு சிறுமியின் பொம் மையை பரிசாக கொடுத்துவிட்டு, ''என்ன மிஸ்டர் பிரபு. உங்கள் மாளிகையின் அடுத்த விழா உங்கள் மனைவி யின் பூமுடிப்பு விழாவா? கேள்விப்பட்டேன்?'' என கேட்டு, அஜந்தாவைப் பார்த்து சிரிப்புடன் கண்சிமிட் டினாள் பூஜா.

''நீங்கள் கூறியது உண்மையாக நடக்கும்பட்சத்தில் முதல் அழைப்பு உங்களுக்குத்தான் பூஜா'' என்று கூறி புன்னகைத்தான் விமல்.

''ஓ..ஹோ!'' என்று சிரித்தாள் பூஜா.

சிரிப்பை அடக்க முயன்றும் தோற்றாள் அஜந்தா.

விருந்தினர்களுக்கு அழகான வேலைப்பாடமைந்த வெள்ளி விளக்கு பரிசாக வழங்கப்பட்டது. விளக்கிலேயே 'சித்திரச் சோலை' என்று எழுதியிருந்த விதம் எல்லோரை யும் கவர்ந்து, பாராட்ட வைத்தது.

தீபக், பிரமேஷ் இருவருக்கும் வெள்ளித்தட்டில் உயர்ரக ஆடைகள் வைத்து பரிசு வழங்கினாள் அஜந்தா.

விழா நல்லபடியாக முடிந்தது.



சிரித்தமுகமாக புத்தாடையில் சுற்றிக் கொண்டிருந்த வேலையாட்களின் நடமாட்டம் கூட நின்றுபோனது.

ஓடி, ஆடி, விளையாடி எல்லோரையும் தன்பக்கம் இழுத்த அபியும் ஒரு தம்ளர் பால் குடித்ததோடு உறங்கி விட்டான்.

சற்று நேரம் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு இருந்த தாலோ என்னவோ? லேசாக வலித்த கையை நீவிவிட் டான் விமல் பிரபு.

அதைப் பார்த்துவிட்டு வேகமாக அவனிடம் வந்தவள், ''வலிக்கிறதா விபு?'' என்று கேட்டுவிட்டு அவன் சட்டை பட்டன்களைக் கழற்றிவிட்டு, ''இனி நீங்களே கழற்றிக் கொள்வீர்கள் தானே? நான் டிரஸ் சேஞ்ச் பண்ணிக் கொண்டு வருகிறேன்'' என கூறி மறுபக்கமிருந்த அறையை நோக்கித் திரும்பியவளை அவன் கரம் பற்றியது.

இழுத்த இழுப்பில் அவன் மேலேயே விழுந்தாள் அவள். அவனின் தீவிரமான அணைப்பு எதையோ உணர்த்தியது அவளுக்கு.

சட்டென்று தலைநிமிர்த்தி, ''இதே.. இதே மாதிரி தானே இரண்டு நாளைக்கு முன்பாகவும்...'' என்று முகம் சிவக்க தடுமாறியவள், ''இதற்கு முன்பெல்லாம் இப்படி யில்லையே?'' என்று கேட்டு யோசனையோடு அவனை நோக்கினாள் அஜந்தா.

அவள் கன்னத்தை மெல்ல வருடியவன், ''அன்று வீட்டைவிட்டு கிளம்பிய போது அணைத்ததைத்தானே சொல்கிறாய். அது, ஒருவேளை இதுதான் கடைசி தட வையோ என்ற எண்ணத்தில்'' என்று அவன் முடிக்கும்

முன்பு, "விபூ!" என்று அதிர்ந்து போனவள், அவனை எதிலிருந்தோ காப்பாற்றுபவள் போல நெஞ்சோடு இறுகத் தழுவிக் கொண்டாள்.

அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தவன், "ஆமாம் அஜி. அன்று என் மனநிலை அப்படித்தானிருந்தது. அபி இருக்கும் இடத்தைப் பற்றி யூகிக்க முடிந்தது.. என்ன இப்படி விழிக்கிறாய்?" என்று கேட்டான் அவன்.

"அபி இருந்த இடத்தை எப்படிக் கண்டுபிடித்தீர்கள். முன்பிருந்த பதற்றத்தில் எனக்கு கேட்கத் தோன்றவே யில்லை" என்று வியப்புடன் விசாரித்தாள் அவள்.

"ஏதோ இப்போதாவது மகாராணிக்கு கணவனின் வீர தீரச் செயல்களைப் பற்றி கேட்கத் தோன்றியதே அதுவே பெரும் பாக்கியம்" என்று கேலி செய்து அவளை சிரிக்க வைக்க முயன்றவன், அவள் முகம் கலக்கமாகவே இருக் கவும், "அந்தக் கவலையான சேப்டர் எல்லாம் முடிந்து விட்டது. இனி எப்போதும் புன்னகையோடு தான் இருக்க வேண்டும். சரியா?" என்று அவளை அழைத்துச் சென்று கட்டிலில் அமர வைத்தான்.

"அபி செல்லில் பேசியபோது கடலின் அலையோசை கேட்டது, அதை உற்றுக் கேட்பதற்காகத்தான் அபியிடம் எதுவும் பேசாமல் சற்றுநேரம் அப்படியே இரு என்றேன். அந்த கோபு பேச்சு வாக்கில் இடிந்த வீடு என்று சொல்லவும் இந்த இடமாகத்தான் இருக்கும் என்று உறுதி யாகிவிட்டது. நாம் பிக்னிக் சென்ற வழியில் தான் அந்த வீடு இருக்கிறது" என்று கூறினான் விமல்.

எந்தளவிற்கு கவனித்துச் செயல்பட்டிருக்கிறான்! கண வனைப் பார்த்து பெருமிதத்தோடு முறுவலித்தாள் அவள்.



"இதுதான் அழகு" என்று தானும் புன்னகைத்தவன், "எவ்...வளவோ யோசித்து வேலை செய்தபோதும், கடைசியில் அந்த ராஸ்கல் குழந்தைக்கு குறிவைத்து விடவும் எனக்கு வேறு எந்த நினைவும் வரவில்லை அஜி. குழந்தையைக் காப்பாற்றினால் போதுமென்று குறுக்கே பாய்ந்து விட்டேன்" என கூறி பெருமூச்சு விட்டான் அவன்.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள, "தலை யிலோ, நெஞ்சிலோ குண்டு பட்டிருந்தால்..." என்ற வளின் தொண்டையடைத்து கண்கள் கலங்கியது.

"அதர்மத்தை எதிர்க்கும் போது உயிர் பயம் இருக்கவே கூடாது என்று படித்திருக்கிறேன். அதற்காக, ஒரேயடியாக உன்னை விட்டுப் போகவும் என்னால் முடியாதே. எப் படியோ லாவகமாக உருண்டு துப்பாக்கியை எடுத்தேன்" என்றான் அவன்.

கணவனை வியப்புடன் நோக்கி, "இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டுதான் அன்று அப்படி தீவிர மாக அணைத்துக் கொண்டீர்களா?!" என்று மலைப்பு மாறாது கேட்டாள் அவள்.

மனைவியைப் பிரியவும் மனமில்லாமல், அதே சமயம் குழந்தைக்காக தன் உயிரையும் துச்சமாக நினைக்கும் கணவன் கிடைத்திருப்பது எவ்...வளவு பெரிய அதிர்ஷ்டம்.

"ம். அன்றைக்கு கடைசி தடவையோ என்று நினைத் தேன். இன்று மீண்டும் என் மனைவியின் அருகே வந்துவிட்ட மகிழ்ச்சியில் அணைத்துக் கொண்டேன். இப்போது உன் கணவன் எப்படியம்மா?" என்று கேட்டுப் புன்னகைத்தான் விமல் பிரபு.

''என் கணவரா?'' என்று மின்னல் கீற்றாக முறுவலித்தவள், பழைய நினைவில் ''அவர் கங்காரு மாதிரியாக்கும்'' என்று கூறிவிட்டு சிரிப்புடனேயே அவனைப் பார்த்தாள் அவள்.

தானும் சிரித்தவன், ''ஓ.. ஹோ. அப்படியா! என்னையா கங்காரு என்கிறாய். இப்போது இந்த கங்காரு உன்னை என்ன செய்யப்போகிறேன் பார்'' என்று கூறி, கண்களில் இளநகையுடன் மனைவியின் முகத்தை நிமிர்த்தினான் விமல் பிரபு.

நாணத்தால் சிவந்த முகத்தை கணவனின் தோளிலேயே பதித்துக் கொண்டாள் அஜந்தா.